

கொலம்பியா வெளியீடு
சங்கீத வித்வான்
செம்மங்குடி
சீனிவாச அய்யர்
with
ராஜமாணிக்கம் பிள்ளை–பிடில்
பாலக்காடு மணி–மிருதங்கம்
VE. 62
எதாவுனரா–பாகம் 1 & 2
ராகம்–கல்யாணி
முன் வெளியீடு
A. 131
த்ஸாலகல்ல
(ஆரபி)
ஸரஸ்வதி ஸ்டோர்ஸ், மதராஸ்.
Columbia Records
G.H. RAO





சரக்கின் மேன்மையைக்குறிப்பது
கரும் பூனை மார்க்
AROMATIC CHEMICAL OIL & CO
சோப்பு, வாசனை சாமான்கள், சோடா பானம், பெப்பர்மின்டு தயாரிப்பவர்கள்.
கரும் பூனை மார்க் பொருள்கள். தங்கள் தயாரிப்புகளுக்கு மிகச் சிறந்தவை என்பதைத் தெரிந்து கொண்டிருக்கிறார்கள்.
AROMATIC CHEMICALS
AMINJIKARAI, MADRAS.
FAS/73

கல்கி
பொருளடக்கம்

மலர் 4
இதழ் 23

1945 ஜனவரி 14

தாரண ௵
தை 1

"கல்கி"யில் வெளிவரும் கதைகளில் உள்ள பெயர்களும், சம்பவங்களும் கற்பனையே.

சூடிக் கொடுத்த நாச்சியார் என்று பெயர் பெற்ற ஆண்டாள், அழகிய மணவாளனாகிய பகவானுக்கு, தான் அணிந்து அழகு பார்த்த பூமாலைகளையும் சூடினாள்; அமுதொழுகும் தமிழ் மொழியில் பாமாலைகளையும் சூடினாள். அத்தகைய ஆண்டாளின் திவ்ய சரித்திரத்தை நடனக் கலையில் அமைத்து ஆடி ஸ்ரீ நடராஜ் சகுந்தலா கோஷ்டியார் தமிழ் நாடெங்கும் புகழ்மாலை சூடிக்கொண்டு வருகிறார்கள்.

பெரியாழ்வார் தமது அருமை மகளைப் பெருமாளுக்குத் திருமணம் செய்து கொடுக்கும் அழகிய நடனக் காட்சியை இந்த இதழ் மேலட்டையில் காண்கிறோம்.

இந்தப் படத்தைப் பார்க்கும்போது நமக்குண்டாகும் மகிழ்ச்சியைக் காட்டிலும் பன்மடங்கு மகிழ்ச்சி நடனத்தை நேரில் பார்க்கும்போது உண்டாகிறது.

எத்தனையோ கலைத்துறைகளில் மேன்மை யடைந்திருக்கும் தமிழ்நாடு, கோஷ்டி நடனம் அல்லது கதம்ப நடனம் என்று சொல்லப்படும் கலையிலும் பிற மாகாணங்களுக்குப் பின்வாங்காது என்பதை நடராஜ்-சகுந்தலா கோஷ்டியார் நிரூபித்து வருகிறார்கள். இந்தக் கலையில் இவர்கள் மேலும் மேலும் மேன்மையுற்றுப் பெயரும் புகழும் பெற வேண்டுமென்று வாழ்த்துகிறோம்.

[அட்டைப் படத்தில் ஸ்ரீ நடராஜ் திருமாலாகவும், ஸ்ரீமதி சகுந்தலா ஆண்டாளாகவும், ஸ்ரீ தனபால் பெரியாழ்வாராகவும் தோன்றிக் காட்சி யளிக்கிறார்கள்.]



கல்கி

மலர் 4 } தமிழ்த்திரு நாடு தன்னைப் பெற்ற தாயென்று கும்பிடடி பாப்பா —பாரதியார் { இதழ் 23

என்ன சேதி?

சாஸ்திரியார் கவலை

மகாகனம் ஸ்ரீநிவாச சாஸ்திரியார் இந்தத் தள்ளாத வயதில் தடியை ஊன்றிக் கொண்டு எங்காவது கிளம்புகிறாரென்றால், அது லக்ஷ்மீபுரம் வாலிபர் சங்கமாய்த்தான் இருக்கும். அப்படி அந்த சங்கத்தில் போய் ஓயாமல் என்ன பேசுவார் என்றும் சொல்லத் தேவையில்லை. உலக சமாதான மகா நாட்டைப் பற்றியும், அந்த மகாநாட்டிற்குக் காந்திஜியும் ஜவாஹரும் பிரசன்னமாவதைத் தாம் கண் மூடுவதற்குள்ளாகப் பார்த்துவிட வேண்டுமென்ற பேராவலைக் குறித்துத்தான் இருக்கும்.

சென்ற வாரத்திலும் மேற்படி சங்கத்தில் மேற்படி சாஸ்திரியார் மேற்படி விஷயத்தைக் கூறியிருக்கிறார். அத்துடன் இந்த உலகம் உருப்படுவதற்கான இரண்டொரு யோசனைகளையும் சொல்லியிருக்கிறார்:—

ஜெர்மனியைத் துண்டு போட்டு இதர நாடுகளுக்குத் தானம் செய்யும் மகா பாபத்தை அவர் ஒப்புக்கொள்ள மாட்டாராம். அப்படிச் செய்வதால் அந்த தேசத்தின் விஞ்ஞான ரகசியங்களும் கலை முன்னேற்றமும் தடுக்கப்படுமாம்.

ஜப்பானை அடியோடு நசுக்கும் யோசனையும் கூடாதாம். ஜப்பானும் சீனாவும் சிநேகமாகி அவையிரண்டும் ஆசியாவைப் பாதுகாக்கும் பொறுப்பை ஏற்றுக்கொள்ள வேண்டுமாம்.

இப்படிப் பட்ட காரியங்களெல்லாம் நடக்க வேண்டுமானால் யுத்தத்துக்குப் பின் கூடப் போகும் உலக சமாதான மகாநாட்டில் காந்திஜியும் ஜவாஹர்ஜியும் கலந்து கொள்ள வேண்டும். அதைத்தான் தமது ஆயுட் காலத்தில் பார்த்துவிட வேண்டுமென்று சாஸ்திரியார் ஆசைப்படுகிறார். சாஸ்திரியாரின் ஆசை நியாயமான ஆசைதான். நமக்கும் அந்த ஆசை பரிபூரணமாக இருக்கிறது. ஆனால், இந்தியர்களுடைய சராசரி வயதை எண்ணி, பிரிட்டிஷ்காரர்களின் பிடிவாத குணத்தையும், அமெரிக்கர்களின் அடுத்த வருஷ யுத்த பட்ஜெட்டையும், நாஜிகளின் V 2 குண்டு V 10 வரையில் வரலாம் என்பதையும் யோசிக்கும்போதுதான் மேற்படி ஆசை நம்முடைய ஆயுள் காலத்திற்குள் நிறைவேறுமா என்று சந்தேகமாயிருக்கிறது.


காசிக்குப் போனார்


“தமிழுக்காகவே உயிர் வாழ்கிறார்” என்று சொல்லக் கூடியவர்கள் நமக்குத் தெரிந்தவர்களுக்குள் மிகச் சிலரே இருப்பார்கள். அன்பர் ஸ்ரீ மு. அருணாசலம் எம். ஏ. அவ்விதம் தமிழுக்காகவே உயிர் வாழ்கிறவர்களில் ஒருவர். இவர் புலவருக்குப் புலவர்; ரசிகருக்கு ரசிகர்; எழுத்தாளருக்கு எழுத்தாளர்; பதிப்பாளருக்குப் பதிப்பாளர்.


கவிஞர் தேசிக விநாயகம் பிள்ளையின் ‘பாடிய வாய்த் தேனூறும்’ பாடல்களை நல்ல பதிப்பாகக் கொண்டு வந்தவர் இவர்தான். ஸ்ரீ டி. கே. சிதம்பரநாத முதலியார் அவர்களைத் தூண்டி உண்மையான கம்பன் பாடல்கள் அடங்கிய கம்ப ராமாயணப் பதிப்பைக் கொண்டு வந்தவரும் இவர்தான். டி. கே. சி. க்கு எப்படி அருமைச் சீடரோ, அவ்விதமே ஸ்ரீ திரு. வி. கலியாணசுந்தர முதலியாருக்கும் மனதுக்குகந்த மாணவர். ஆங்கிலம் - தமிழுடன் வடமொழியும் பயின்று புலமை அடைந்தவர்.


இத்தகையவர் சமீபத்தில் காசிக்குப் போயிருக்கிறார். கங்கையில் ஸ்நானம் செய்து புண்ணியம் தேடிக் கொள்வதற்காகவல்ல. காசி சர்வ கலாசாலையில் திருப்பனந்தாள் மடத்தினால் ஏற்படுத்தப் பட்டுள்ள சைவ சித்தாந்த ஆராய்ச்சி பீடத்தில் அமர்வதற்குத்தான். சைவ சித்தாந்தம் என்ற பெயரில் ஸ்ரீ அருணாசலம் காசியிலும் தமிழ்த் தொண்டு செய்வாரென்றே நம்புகிறோம். தமிழ்த்தாய் செய்யப்போகும் இக் விஜயத்துக்கு ஸ்ரீ மு. அருணாசலம் முன்னணித் தூதராகச் சென்றிருக்கிறார் என்று கூறுவதும் மிகையாகாது.

நிகழ்ச்சிச் சித்திரம்






ஈரானில் நடந்துவரும் கண்ணாமூச்சி ஆட்டம் இன்னும் முடிந்தபாடில்லை
ரஷ்யாவின் எண்ணெய் உரிமை
அமெரிக்காவின் எண்ணெய் உரிமை
பிரிட்டிஷ் எண்ணெய் உரிமை


புது வருஷக் கவலைகள்
ஜெர்மன் எதிர்த்தாக்குதல்
பிரிட்டிஷ் - அமெரிக்க அபிப்பிராயபேதம்
மற்றக் கவலைகள்
ருமேனிய எண்ணெய்க் கவலை
பார்லிமெண்டில் எதிர்ப்பு
ஈரான் எண்ணெய்க் கவலை
கிரீஸில் தோல்வி

மதராஸிக்கு வந்த மகிமை!

மதராஸிகளே! தமிழ் மக்களே! கேட்டீர்களா உங்களுக்கு வந்திருக்கும் மகிமையை! அறிந்து கொண்டீர்களா உங்களுக்குக் கிடைத்திருக்கும் பெருமையை! தெரிந்து கொண்டீர்களா உங்களுக்கு ஏற்பட்டிருக்கும் கிராக்கியை! பர்மாவிலே எங்கே பார்த்தாலும் மதராஸியின் மகிமைதான் ஒரே முழக்கமாயிருக்கிறதாம்!

"மதராஸிகளை எங்களுக்கு அனுப்புங்கள்!" "மதராஸிகளையே எங்களுக்கு அனுப்புங்கள்!" என்று ஒரே கூக்குரலாயிருக்கிறதாம்!

இதை ஏதோ பராபரியாகக் கேள்விப்பட்டு நாம் சொல்லி விடவில்லை. தக்க அத்தாட்சியுடனேதான் சொல்கிறோம்.

நமது மதராஸ் கவர்னர் ஸர் ஆர்தர் ஹோப் அவர்கள் பர்மாவுக்கு நேரிலே போய் விட்டு வந்து மேற்படி செய்தியைத் தெரிவிக்கிறார்.

"மதராஸிகளை அனுப்பி வையுங்கள்!" என்ற கோஷத்தை நேரில் நமது சொந்தக் காதுகளினால் கேட்டு விட்டு வந்து சொல்கிறார்.

இதைக் கேட்டதும் நமக்கு என்னமாயிருக்கிறது, தெரியுமா? ஏன்? சர்க்கரைப் பந்தலில் தேன் மாரி பொழிந்ததுபோலவும், சந்தனக் கடலில் பன்னீர் மழை பொழிந்தது போலவும் ஒரே குதூகலமாய்த்தானிருக்கிறது.

ஏற்கெனவே மதராஸிகளின் அருமை பெருமைகளைப் பறை யறைந்துகொண்டிருக்கும் நமக்கு, ஸர் ஆர்தர் ஹோப் துரையின் மூலம் மேற்படி செய்தியும் கிடைக்கவே, பிரமாத பெருமையாயிருக்கிறது; பெருமையினால் நமது தோள்கள் பூரித்து மேக மண்டலம் வரையின் உயர்ந்திருக்கின்றன. நமது பூரித்துயர்ந்த தோள்களில் ஆகாச விமானங்கள் இடித்து விடுமோவென்றுதான் கொஞ்சம் கவலையாயிருக்கிறது.

• • •

மேற்கண்டவாறு பர்மாவில் "மதராஸிகளை அனுப்பி வையுங்கள்!" என்று கோஷிக்கப்படுகிறது என்பதைக் கேட்டதும், பர்மாவிலிருந்து ஏற்கெனவே ஓடி வந்த 'எவாக்கி'களெல்லாம் காலை உதறிக் கொண்டு கிளம்பாதீர்கள். செட்டிமார் நாட்டுப் பிரமுகர்கள் எல்லாம் கப்பலுக்கு டிக்கட் வாங்கப் புறப்படாதீர்கள். பர்மாவிலே நிலம் படைத்தவர்கள், பர்மாவிலே கடன் கொடுத்தவர்கள், பர்மாவிலே கடை வைத்தவர்கள் எல்லாம், — நாக்கிலே ஜலம் சொட்டப் பிரயாணப்படாதீர்கள். அப்படியே, பர்மா கவர்ன்மெண்டிலும் பர்மா வர்த்தகக் கம்பெனிகளிலும் உத்தியோகம் பார்த்தவர்கள் எல்லாரும் "கஞ்சி வரதப்பா!" என்று கிளம்பி விடாதீர்கள்.

உங்களையெல்லாம் இன்னும் யாரும் வெற்றிலை பாக்கு வைத்து அழைக்கவில்லை. பின் யாரைக் கூப்பிடுகிறார்கள் என்றால், பர்மாவைப் படையெடுத்துப் பிடிக்கப் போகும் சைன்யங்களுக்கு முன்னால் சென்று, காடு மேடுகளைச் சீர்திருத்தி, பாதைகளைச் செப்பனிட்டு, ஸோல்ஜர்களின் கால் செருப்பு அதிகம் தேயாதபடி நடப்பதற்கு வசதி செய்து கொடுக்கும் மதராஸி 'பயனியர்' படைகளைத்தான். எங்கெங்கே பாதைகள் ரொம்பக் கரடு முரடாகவும், முன்னேற முடியாமலும் இருக்கின்றனவோ, அங்கே யெல்லாம் "மதராஸிகளை அனுப்புங்கள்!" என்று ஒரே குரலாய்க் கேட்கிறார்களாம்.

நமது சென்னை கவர்னர் துரை பர்மாவுக்கு நேரில் சென்று வந்து இவ்விதம் நமக்குத் தெரியப்படுத்துகிறார். அது மட்டுமா?

"சென்னைத் துருப்புகள் பிரமாதமான காரியங்களைச் செய்து கொண்டிருக்கின்றன. அவர்கள் செய்திருக்கும் காரியங்களைக் குறித்தும், அவர்களுக்கு நாம் செய்திருக்கும் உதவியைக் குறித்தும், மதராஸ் ஜனங்கள் ரொம்ப ரொம்ப ரொம்பப் பெருமை அடைய இடம் இருக்கிறது!" என்றும் ஸர் ஆர்தர் ஹோப் கூறியிருக்கிறார்.

ஆம்; ரொம்ப ரொம்பப் பெருமையடைய இடம் இருக்கத்தான் இருக்கிறது. ஏன் இல்லை? மேக மண்டலம் வரையில், சந்திர மண்டலம் வரையில், நட்சத்திர மண்டலம் வரையில் எட்டும்படி நாம் பெருமையடைவதை யார் தடுக்க முடியும்?

ஐந்து ரூபாய் பரிசு: சென்ற இதழில் வெளியான "ஆதரவு!" என்னும் துணுக்குக்குப் பரிசு பெற்றவர்: நவநீதம், புளியந்தோப்பு, பெரம்பூர் பாரக்ஸ், சென்னை.

பர்மாவை ஜப்பானியரிட மிருந்து கைப்பற்றும் காரியத்தில் மதராஸிகள் பங்கு பெறுவது எவ்வளவு பெருமை யான காரியம் என்பதை நன்கு தெரிந்து கொள்ள வேண்டுமானால், பர்மாவை ஜப்பானியர் என்ன பாடு படுத்தி யிருக்கிறார்கள் என்பதையும் கொஞ்சம் தெரிந்துகொள்ள வேண்டும்.

பர்மாவில் நெல் விளைவு மிகுந்த அரக்கான் பிரதேசத்துக்கு முக்கிய துறைமுகப் பட்டினமான அக்யாப் சென்ற மூன்று வருஷமாக ஜப்பானியர் வசமிருந்து சென்ற வாரத்திலே விடுதலையடைந்தது.

அந்தப் பட்டினம் என்ன நிலைமையில் திரும்பக் கைப் பற்றப்பட்டது என்பதை ஏ. பி. ஐ. நிருபர்கள் வர்ணித்திருக்கிறார்கள். இராணுவத் தலைமை ஸ்தல அறிக்கைகளும் வெளியிட்டிருக்கின்றன. கேளுங்கள் :—

"மூன்று வருஷம் ஜப்பானியர் வசமிருந்த அக்யாப் நகரை இப்போது பார்த்தால், அழிவும் நாசமும் தரித்திரமும் தாண்டவமாடும் பாழடைந்த பட்டணமாகக் காட்சி யளிக்கிறது. அதை 'ஆவிகளின் பட்டணம்' என்று கூறுவதும் பொருந்தும்.

"ஒரு காலத்தில் நன்றா யிருந்த சாலைகளில் இப்போது ஆங்காங்கே குழிகள் காணப்படுகின்றன. அந்தக் குழிகளில் விழாமல் ஜாக்கிரதையாக மோட்டாரைச் செலுத்திக் கொண்டு போனால், இருபுறமும் இடிந்து பாழான வீடுகளைத் தவிர வேறு ஒன்றையும் பார்க்க முடியாது!

"(பிரிட்டிஷ்) வெடிகுண்டுகளினால் இடிந்த கட்டிடங்களை 'ரிபேர்' செய்ய எதிரிகள் ஒரு முயற்சியும் செய்ய வில்லை. அப்படி அப்படியே விட்டு விட்டுப் போய் விட்டார்கள்! (பாவிகள்! சண்டாளர்கள்!)

"நேசக் கட்சியின் விமானத் தாக்குதலினால் நிலைமை நெருக்கடி ஆன பிறகு, ஜப்பானியர்கள் தங்களுக்குக் கிடைத்த சொற்ப சாமான்களை ஜாப் பொந்துகளிலும் புதர்களிலும் ஒளித்து வைக்கும்படியாக நேர்ந்தது! (பொல்லாத திருட்டு ராட்சதர்கள்!)

"கோயில்கள், மசூதிகள், சர்ச்சுகள் ஆகிய எல்லாம் பாரபட்சமின்றி ஜப்பானியர் கையில் கஷ்டப்பட்டிருக்கின்றன. சர்ச்சிலிருந்த ஜன்னல் கண்ணாடிக் கதவுகளைக் கூடக் கொண்டு போய் விட்டார்கள்! (அவர்கள் நித்திய நரகத்தை அடையட்டும்!)

"அக்யாப் பட்டணமானது இதற்கு முன்னால் எப்போதும் இந்த மாதிரி நாசத்தை அடைந்ததில்லை. அக்யாப்பைப் புனர் நிர்மாணம் செய்வதற்கு எத்தனையோ வருஷங்கள் கஷ்டப்பட்டு உழைத்தாக வேண்டும்! * * * *"

அக்யாப்பின் கதியை மேற்கண்டவாறு படிக்கும் போது இன்னும் பர்மாவிலுள்ள மிக அழகிய பட்டணங்களான மாந்தலே, ரங்கூன் முதலிய வற்றின் கதியும் இப்படித்தான் ஆகுமோ என்று கதிகலங்குகிறது.

ஜப்பானியப் பகைவர்களின் மூடப் பிடிவாதத்தைத்தான் என்னவென்று சொல்கிறது? "எப்படியும் தோல்விதான்" என்று தெரிந்ததும், ஊரை ஒழுங்காகக் காலி செய்து விட்டு ஓடிப் போய்த் தொலையக் கூடாதோ?

"செத்துப் போனாலும் போகிறோம்" என்று கடைசி வரையில் விடாமல் உட்கார்ந்திருப்பது, — நேசக் கட்சி விமானங்கள் வந்து குண்டு போட்டு எல்லாக் கட்டிடங்களும் நாசமாகும் வரையில் உட்கார்ந்திருப்பது, — இடிந்த கட்டிடங்களை ரிபேர்கூடச் செய்யாமல் விட்டு விட்டுக் கடைசியில் உயிரோடு பாக்கியுள்ளவர்கள் ஓட்டம் எடுப்பது, — இது என்ன மூடத்தனம்! இது என்ன ராட்சதத்தனம்!



இராஜாங்க சபைத் தேர்தலுக்கு நிற்கும் காங்கிரஸ் அபேட்சகர் ஸ்ரீ திருமல் ராவ்

ஆனால் ஜப்பானியரின் முரட்டு ராட்சத குணம் நன்கு தெரிந்த விஷயமேயாகும். அதைப்பற்றி வெறுமனே சொல்லிக்கொண்டிருப்பதில் சிறிதும் பிரயோஜனமில்லை. மேலே நடக்க வேண்டிய காரியத்தைப் பார்க்க வேண்டியதுதான்.

மேலே நடக்க வேண்டிய காரியம், பர்மாவில் இன்னும் ஜப்பானியர் கையில் உள்ள பாக்கிப் பகுதியையும் கைப்பற்றுவதே யாகும்.

அதற்கு எவ்வளவு காலமானாலும் சரி, அதனால் என்ன சேதம் ஏற்பட்டாலும் சரி, பர்மா முழுவதையும் பிடித்துவிட வேண்டியதுதான்.

மாந்தலேயில் ஒரு குட்டிச் சுவர்கூட இல்லாமல் போனாலும் சரி, ரங்கூனில் ஒரு விளக்குக் கம்பம்கூட இல்லாமல் போனாலும் சரி, பர்மா முழுவதையும் பிடித்துத்தான் ஆகவேண்டும்.

இந்த முயற்சியில் முன்னணியில் நின்று போராடுவதற்கும், பாதை செப்பனிட்டுக் கொடுப்பதற்கும் மதராஸி சிப்பாய்கள் தயாரா யிருக்கிறார்கள். அவர்களுடைய அரும் பெரும் காரியங்களைக் கேட்டுப் பெருமை யடையவும் பூரிக்கவும் மற்ற மதராஸிகள் தயாரா யிருக்கிறார்கள்.

* * *

எப்படியோ பாடுபட்டுக் கஷ்டப்பட்டு உயிரைக் கொடுத்துக் கடைசியில் பர்மாவை ஜப்பானியரிடமிருந்து கைப்பற்றி விடுகிறோம்.

அதற்குப் பிறகு என்ன?

பர்மாவில் போரிட்ட மதராஸிகளுக்கும், பாதை செப்பனிட்ட மதராஸிகளுக்கும் என்ன கிடைக்கப் போகிறது? அவர்களுக்கு உதவி செய்த மதராஸிகளுக்கும், பெருமை கொண்ட மதராஸிகளுக்கும் என்ன கிடைக்கப் போகிறது?

பர்மாவை ஜப்பானியரிடமிருந்து கைப்பற்றியதும் அந் நாட்டை என்ன செய்யப் போகிறார்கள்?

பர்மாவைப் பர்மியரிடமே கொடுத்து விடப் போகிறார்களா?

அப்படிக் கொடுத்து விடுவதா யிருந்தால் ரொம்ப ரொம்ப சந்தோஷம்!

மதராஸிகள் கொடுத்த உயிர்களையும் உதவிகளையும் நிஷ்காம்ய கர்மமாக வைத்துக்கொண்டு பெருமையடையத் தயாரா யிருக்கிறோம்.

பர்மாவை பர்மியரிடம் கொடுக்கப் போவதில்லையென்றால் மதராஸிகளிடம் ஒப்புவிக்கப்படுமா? அல்லது மதராஸிகளுக்குப் பங்காவது உண்டா?

பர்மாவை ஜப்பானியரிடமிருந்து விடுதலை செய்த மதராஸிகளுக்குத் தங்களைத் தாங்களே ஆண்டு கொள்ளும் சக்தி யில்லாமல் போகுமா?

இந்தியாவின் மற்றப் பகுதியில் எப்படிப் போனாலும் மதராஸைப் பொறுத்த வரையில் பூரண சுதந்திரம் கொடுத்து விட வேண்டிய அவசியத்தை நமது மேன்மை தங்கிய கவர்னர் உணர்ந்து அவ்விதமே சிபார்சு செய்வாரா?


சுருங்கச் சொன்னால், ஸர் ஆர்தர் ஹோப் துரை நமக்குப் பின்னால் சென்னைக்கு ஆங்கில கவர்னரே வராதபடி செய்து விட்டுத் திரும்பிப் போவாரா?

இதெல்லாம் ஒன்றும் முடியா விட்டால், ஒரே ஒரு விசேஷ உரிமையாவது மதராஸிகளுக்கு ஸர் ஆர்தர் ஹோப் வாங்கிக் கொடுக்க வேண்டு மென்று கேட்டுக் கொள்கிறோம்

அக்யாப்பிலும், ரங்கூனிலும், மாந்தலேயிலும், மற்ற பர்மா பட்டணங்களிலும் இடிந்து போன கட்டிடங்களைப் புதுப்பித்துக் கட்டுவதற்குக் கூலியாட்கள் ஏராளமாய்த் தேவையாயிருக்கும்.

இந்த வேலைக்காகக் கூலியாட்களாகப் போகும் உரிமையையாவது மதராஸிகளுக்குப் பிரத்யேகமாக கவர்னர் துரை வாங்கிக் கொடுப்பாராக!

பர்மாவை நமது வீரர்கள் ஜயிக்கும் போது பெருமை கொண்டு தோள் பூரிக்கும் மதராஸிகள், பர்மாவை ஜயித்த பிறகு பெருமை யடைவதற்கும் ஏதேனும் வேண்டும் அல்லவா?



அத்தியாயம் 44

பிக்ஷு யார்?

"குண்டோதரா! பிக்ஷுவை எங்கே விட்டு விட்டு வந்தாய்? சீக்கிரம் சொல்!" என்று சக்கரவர்த்தி மீண்டும் கேட்டார்.

"கோயில் மடைப் பள்ளிக்குள்ளே அடைத்துத் தாளிட்டு வந்திருக்கிறேன், பிரபு!"

"நல்ல காரியம் செய்தாய்! கோயிலுக்குள்ளே இந்த நேரத்தில் யாரும் இருக்க மாட்டார்கள் அல்லவா?"

"இருக்க மாட்டார்கள்."

"வா, போகலாம்! கிராமத்துக்கு வழி காட்டு!" என்றார் மகேந்திர பல்லவர்.

அப்போது சத்ருக்னன், "பிரபு! கிராமத்துக்கு நாம் ஏன் இப்போது போக வேண்டும்? நாம் வந்த காரியம் ஆகி விட்டது. மாமல்லரைத் தேடிக் கொண்டு வந்தோம். ஏகாம்பரநாதரின் அருளால் மாமல்லர் அபாயம் ஒன்றுமில்லாமல் படகேறி அக்கரைக்குப் போய் விட்டார். நாமும் போக வேண்டியதுதானே? காஞ்சி நகரை நெருங்கி வாதாபிப் படைகள் வந்து கொண்டிருக்கையில் இங்கே நாம் ஏன் தாமதிக்க வேண்டும்? புத்த பிக்ஷுவைக் குண்டோதரன் கவனித்துக் கொள்வான். நாம் போகலாம், வாருங்கள்!" என்று கவலை தொனித்தகுரலில் கூறினான்.

"ஆம், பிரபு! புத்த பிக்ஷுவை என்னிடம் விட்டு விடுங்கள்: அந்த ஏரிக் கரையிலேயே அவரை நான் தீர்த்திருக்க வேண்டும்.........தங்களுடைய கட்டளையினால் உயிரோடு விட வேண்டியதாயிற்று."

"குண்டோதரா! அன்று நான் எச்சரிக்கை செய்திராவிட்டால் பிக்ஷுவை நீ தீர்த்திருக்க மாட்டாய்; உன்னைத்தான் அவர் தீர்த்திருப்பார். காஞ்சி ஒற்றர் படையின் மிக சாமர்த்தியசாலியான ஒற்றனை இழந்து விட்டிருப்போம்......"

சத்ருக்னன் குறுக்கிட்டு, "பிரபு! காஞ்சி ஒற்றர் படையில் மிக மிக சாமர்த்தியசாலியான ஒற்றர் யார் என்பது எனக்கும் தெரியும்; குண்டோதரனுக்கும் தெரியும்; அந்த ஒற்றர் இங்கே எதற்காக வந்தாரோ, அந்தக் காரியம் முடிந்து விட்டது. இனிமேல் தாமதிக்கக் காரணமில்லை. வாருங்கள் போகலாம்" என்று பணிவுடன் கூறினான்.

மகேந்திர பல்லவர், "இல்லை சத்ருக்னா! நாம் வந்த காரியம் இன்னும் ஆகவில்லை. வாதாபிப் படைகளைத் தடுப்பதைக் காட்டிலும் முக்கியமான காரியம் இங்கே நமக்கு இருக்கிறது. துரோகி துர்விநீதனைச் சிறைப் படுத்தியது பெரிய காரியமில்லை. நாகநந்தி பிக்ஷுவைச் சிறை பிடித்துக் கொண்டு போனோமானால், இந்த யுத்தத்தில்

கல்கி

நமக்கு முக்கால் பங்கு வெற்றி கிடைத்து விட்டது!..."

"பிரபு! அவ்வளவு முக்கியமான காரியமா யிருந்தால், பிக்ஷுவை வெகு காலைக்கு முன்பே சுலபமாகச் சிறைப் படுத்தி யிருக்கலாமே? ஆயனர் வீட்டிலேயே பிடித்திருக்கலாமே?"

"இத்தனை நாளும் பிக்ஷு சுயேச்சையாக இருத்தல் நான் உத்தேசித்திருந்த காரியங்களுக்கு அவசியமா யிருந்தது. இனிமேல் அவர் வெளியில் இருந்தால் பாதகம் விளையும்."

"பிரபு! பிக்ஷுவைச் சிறை பிடிக்கும் வேலையை என்னிடமும் குண்டோதரனிடமும் ஒப்படையுங்கள். தாங்கள் உடனே புறப்பட்டுச் செல்லுங்கள். ஆற்றுக்கு அக்கரையில் கண்ணபிரான் ரதத்தைப் பூட்டி ஆயத்தமாய் வைத்திருக்கிறான்."

"இந்த வேலையை உங்களிடம் கூட ஒப்படைக்க முடியாது, சத்ருக்னா! நானேதான் செய்தாக வேண்டும். குண்டோதரா! போ முன்னால்!" என்றார் மகேந்திர பல்லவர்.

அதற்கு மேல் சத்ருக்னன் வாய் திறக்கவில்லை. மூன்று பேரும் ஏறக்குறையப் பொழுது புலரும் சமயத்தில் மண்டபப் பட்டு கிராம எல்லையை யடைந்து, கோயில் வெளி மதிலைத் தாண்டிக் குதித்து உள்ளே சென்றார்கள். மடைப்பள்ளியின் கதவு வெளித் தாளிட்டபடி இருந்ததைப் பார்த்ததும் குண்டோதரனுக்கு ஆறுதல் உண்டாயிற்று. சற்றுக் கர்வத்துடனேயே குண்டோதரன் அந்த வெளித் தாளை அப்புறப்படுத்திக் கதவைத் திறந்தான். மூவரும் உள்ளே பிரவேசித்தார்கள்.

மடைப்பள்ளியின் உட்புறம் சூனியமா யிருந்தது! மேற் கூரையில் சில ஓடுகள் எடுக்கப்பட்டபடியினால் உண்டாகியிருந்த துவாரம், என்ன நடந்திருக்க வேண்டும் என்பதைத் துலாம்பரமாகத் தெரியப் படுத்தியது.

"நினைத்தேன், சத்ருக்னா! பிக்ஷுவைச் சிறை பிடிக்கும் வேலையை உங்களிடம் நான் ஒப்புவியாததின் காரணம் இப்போது தெரிகிறதா?" என்றார் மகேந்திர பல்லவர்.

"குண்டோதரா! பல்லவேந்திரர் கூறியது காதில் விழுந்ததா? காஞ்சி ஒற்றர் படைக்கு நீ அழியாத அவமானத்தை உண்டு பண்ணி விட்டாய்!" என்றான் சத்ருக்னன்.

"எஜமானே! அந்த அவமானத்தை இன்றைக்கே போக்கி விடுகிறேன். கருணை புரிந்து தங்களிடமுள்ள கத்தியை இங்கே கொடுங்கள். நாகநந்தி பிக்ஷு இந்தக் கிராமத்திலேதான் இன்னும் இருக்க வேண்டும். நாளைப் பொழுது விடிவதற்குள் அவரைக் கண்டு பிடித்து அவருடைய தேகத்தில் இந்த விஷக் கத்தியைப் பதித்துக் கொல்லாவிட்டால், என்னுடைய நெஞ்சிலே இதைப் பதித்துக் கொண்டு உயிரை விடுவேன்" என்றான் குண்டோதரன்.

சத்ருக்னர் கத்தியைக் குண்டோதரனிடம் கொடுக்க யத்தனித்தபோது, மகேந்திர பல்லவர் இடைமறித்து அதை வாங்கிக் கொண்டார்.

"குண்டோதரா! இந்த மாதிரி அசட்டுத்தனமான சபதம் எல்லாம் இனிமேல் செய்யாதே! புத்த பிக்ஷுவின் உடம்பில் இந்தக் கத்தியை நீ செலுத்த முடியாது. அவருடைய தேகம் வஜ்ர தேகம். அவரைக் குத்தினால் கத்தி முனைதான் மழுங்கும். அப்படி அவரை நீ காயப்படுத்தினாலும், இந்தக் கத்தியிலுள்ள விஷம் அவரைக் கொல்லாது ......" என்றார் மகேந்திர சக்கரவர்த்தி.

"அது எப்படி, பிரபு! பிக்ஷு மந்திரசக்தி உள்ளவரா? மந்திர சாதனங்களில் உங்களுக்குக் கூட நம்பிக்கை உண்டா?" என்று கேட்டான் சத்ருக்னன்.

"மந்திரமும் இல்லை; மாயமும் இல்லை. விஷத்தை விஷம் ஒன்றும் செய்ய முடியாதல்லவா? புத்த பிக்ஷுவின் தேகத்தில் ஓடும் இரத்தமே விஷங் கலந்த இரத்தம். எத்தனையோ காலமாக விஷ மூலிகைகளை அருந்தி உடம்பையே விஷமயமாகச் செய்து கொண்டவர்."

"ஐயோ! என்ன பயங்கரம்!" என்றான் சத்ருக்னன்.

"புத்த பிக்ஷுவின் தேகக் காற்றுப் பட்டதும் அக்கம் பக்கத்திலுள்ள நாகங்கள் பிரண்டு அங்குமிங்கும் ஓடும், சத்ருக்னா!"

"ஆம்; எஜமானே! நானும் பார்த்திருக்கிறேன். அதன் காரணம் இப்போதுதான் தெரிகிறது!" என்று குண்டோதரன் கூறியபோது, அவனுடைய உடம்பு நடுங்கிற்று.

"கெடில நதிக் கரையில் அந்தப் பயங்கரமான சர்ப்பக் குகையைப் பார்த்தோமே, ஞாபக மிருக்கிறதா, சத்ருக்னா!"

"அதை மறக்க முடியுமா, பிரபு!"

"அந்த சர்ப்பப் பண்ணையின் மர்மம் என்ன வென்பதைக் கண்டு பிடித்தாயா?"

"என்ன யோசித்தும் ஊகிக்க முடியவில்லை. அப்புறம் தெரியப்படுத்துவதாகச் சொன்னீர்களே?"

"காஞ்சிக் கோட்டையை வேறு வழியில் பிடிக்க முடியாவிட்டால், கோட்டைக்குள் இருக்கும் குடி தண்ணீரிலெல்லாம் விஷத்தைக் கலந்து விடலாம் என்பதற்காகத்தான்!....."

"ஐயையோ! என்ன படுபாதகம்! ஆனால் கோட்டைக்குள்ளே எப்படி விஷத்தைக் கொண்டு போக முடியும், பிரபு?"

"இராஜ விகாரத்தில் புத்தர் சிலைக்குப் பின்னால் உள்ள இரகசிய வழி வேறு எதற்காக, சத்ருக்னா?"

"என்ன கொடுமை? இவ்வளவும் கருணா மூர்த்தியான புத்தர் பெருமானின் பெயரால், ஒரு புத்த பிக்ஷுவால் செய்யப்படுகிறதா? நம்ப முடியவில்லையே?"

"நம்ப முடியாத காரியந்தான். ஆனால், புத்த பிக்ஷு நிஜமான புத்த பிக்ஷு இல்லையே! காவித் துணியையும் பௌத்த சங்கங்களையும் தன்னுடைய காரியங்களுக்காக உபயோகப்படுத்திக் கொள்ளும் மிக மிக சாமர்த்தியசாலியான ஒற்றன் அல்லவா!"

"அப்பேர்ப்பட்ட இராதகக் கொலை பாதகனைக் கொல்லாமல் விடவேண்டும் என்கிறீர்களே?"

"ஆம், சத்ருக்னா! கொல்லுவதினால் பயனில்லை. சிறை பிடித்து வைத்தோமானால், புலிகேசியுடன் நாம் நடத்தும் யுத்தத்தில் ஒரு பெரிய ஆயுதமாக பிக்ஷு உபயோகப்படுவார்!......"

"பிரபு! பிக்ஷு யார்? எனக்குத் தெரியப்படுத்தலாமா?" என்று சத்ருக்னன் கேட்டான்.

"நிச்சயமாக எனக்கும் தெரியாது. ஆனால் ஒரு ஊகம் இருக்கிறது. அதை இப்போது சொல்வதில் பயனில்லை. நிச்சயமாய்த் தெரிந்த பிறகு சொல்கிறேன்" என்றார் சக்கரவர்த்தி.

பிறகு, "சத்ருக்னா! நீயும் உன்னுடன் குண்டோதரனும் இது வரையில் எவ்வளவோ அரிய காரியங்களைச் செய்திருக்கிறீர்கள். பல்லவ சாம்ராஜ்யத்துக்கு மகத்தான சேவைகளைப் புரிந்திருக்கிறீர்கள். ஆனால் அவை யெல்லாவற்றையும் விடப் பரம முக்கியமான காரியம் உங்களால் இப்போது ஆகவேண்டி யிருக்கிறது. நான் சொல்லுவதை இருவரும் கவனமாகக் கேட்டு அந்தப்படி செய்தால், காரியம் ஜயமாகலாம். என்ன சொல்கிறீர்கள்?" என்று கேட்டார்.

"தங்கள் சித்தம், எங்கள் பாக்கியம், பிரபு! கட்டளைப்படி அணுவும் பிசகின்றி நடந்து கொள்கிறோம்" என்றான் சத்ருக்னன்.

பொழுது புலரும் நேரத்தில் பன்னீர் மரத்திலே நன்றாக மலர்ந்து குலுங்கிக் கொண்டிருந்த புஷ்பங்கள் கம்மென்று மணம் வீசின.

ஏறக்குறைய வட்டவடிவமா யிருந்த சந்திரன் பொன்னிறத்தை இழந்து வெண் தாமரையின் நிறத்தைப் பெற்று மேற்குத் திசையின் அடியில் அமிழ்ந்து கொண்டிருந்தான்.

அந்த நேரத்தில் கோயில் பிராகாரத்தில் மடைப்பள்ளி வாசலில் மகேந்திர சக்கரவர்த்தி அமர்ந்து, சத்ருக்னனையும் குண்டோதரனையும் அருகில் உட்காரச் சொல்லி, அவர்கள் செய்ய வேண்டிய காரியங்களை விவரமாகக் கூறினார்.

ஒற்றர்கள் இருவரும் மிகக் கவனமாகக் கேட்டுக் கொண்டார்கள்.

அத்தியாயம் 45

சிங்க இலச்சினை

மறு நாள் பொழுது விடிந்து சூரியன் வான வெளியில் இரண்டு நாழிகைப் பிரயாணம் செய்திருந்தும், மண்டபப் பட்டுக் கிராமத்து வீதிகளில் ஜன நடமாட்டமும் கலகலப்பும் இல்லை. இரண்டு நாளாக இரவில் நடந்த களியாட்டங்களில் ஈடுபட்டதினாலும், எதிர்பாராத விந்தைச் சம்பவங்களினால் உள்ளக் கிளர்ச்சியடைந்து தூக்கமின்றி இரவு நேரங்களைக் கழித்ததினாலும், அந்தக் கிராம வாசிகள் இன்று காலை கொஞ்சம் மந்தமாகவே இருந்தார்கள். பெரும்பாலோர் தூக்கத்திலிருந்தே எழுந்திருக்கவில்லையென்று தோன்றியது. பல வீடுகளில் வாசற் கதவுகள் இன்னும் திறக்கப்படாமலே இருந்தன.

திருநாவுக்கரசர் மடத்து வாசற் கதவும் அவ்வாறு உட்புறம் தாளிடப் பட்டுத்தான் இருந்தது. ஆனால் மடத்துக்குள்ளே பேச்சுக் குரல் கேட்டது.

குண்டோதரன், சத்ருக்னன், வஜ்ரபாகு ஆகிய மூவரும் அந்த வேளையில் மடத்து வாசலுக்கு வந்தார்கள்.

குண்டோதரன் கதவை இடித்தான். உள்ளே கேட்டுக் கொண்டிருந்த பேச்சுக் குரல்களின் சத்தம் உடனே நின்றது.

நடமாட்டச் சத்தமும், கதவுகள் திறந்து மூடப்படும் சத்தமும் கேட்டன.

பிறகு, வாசற் கதவு திறந்தது.

ஆயனர் வெளியிலே வந்து, "நீதானா, குண்டோதரா! இராத்திரியெல்லாம் எங்கே போயிருந்தாய்? உன்னை நம்பினால்......" என்று சொல்லிக் கொண்டு வந்தவர், வஜ்ரபாகுவையும் சத்ருக்னனையும் பார்த்து விட்டு, "இவர்கள் யார்?" என்று கேட்டார்.

"நேற்றிரவு, இரண்டுபேர் வந்திருக்கிறார்கள், — சிற்பக் கலையில் ஊக்கம் உள்ளவர்கள், — என்று சொன்னேனே. அவர்கள்தான் குருவே! இராத்திரியெல்லாம் இவர்களைத் தேடிக் கடைசியில் பொழுது விடியும் சமயத்தில்தான் கண்டு பிடித்தேன். தங்களைப் பார்க்க வேண்டும் என்று சொன்னபடியால் அழைத்து வந்தேன்" என்றான் குண்டோதரன்.

"அப்படியா, உள்ளே வாருங்கள்!... அம்மா! சிவகாமி! மணை எடுத்துப் போடு!" என்றார் ஆயனர்.

ஆயனருக்குப் பின்னால் நின்ற சிவகாமி உடனே மணைகளை எடுத்துப் போட்டாள். ஆயனரும் வந்தவர்கள் இருவரும் உட்கார்ந்தார்கள். சிவகாமியை வற்புறுத்தி உட்காரச் சொல்லியும் அவள் உட்காரவில்லை. புதிதாக வந்த இருவரையும் ஆவலுடன் மாறி மாறிப் பார்த்துக் கொண்டிருந்தாள். குண்டோதரன் வெளியிலேயே நின்றான்.

"உங்களைப் பற்றிக் குண்டோதரன் சொன்னான்-சிற்பத்தில் ஆர்வம் உள்ளவர்கள் என்று. உங்கள் இருவருக்கும் எந்த ஊரோ?" என்று ஆயனர் கேட்டார்.

"குருவே! என்னைத் தெரியவில்லையா?" என்று சத்ருக்னன் கேட்டான்.

"தெரியவில்லையே, அப்பா! நீ எப்போதாவது என்னிடம் சிற்பம் கற்றுக் கொண்டாயா, என்ன?"

"ஆம், ஐயா! சிவகாமி தேவியை வேணுமானால் கேளுங்கள். அவருக்கு ஞாபகம் இருக்கும்."

"ஆமாம், அப்பா! பரஞ்சோதி வந்த போது இவரும் வந்தார். இரண்டு மூன்று நாள் இருந்திருப்பார்."

"என் அதிர்ஷ்டம் அப்படி! நான் வந்து சில நாளைக்கெல்லாம் தாங்கள் மாமல்லபுரத்துக்குப் போனீர்கள்...." என்றான் சத்ருக்னன்.

"பிறகு, கொஞ்ச நாளைக்கெல்லாம் எல்லா வேலையும் நின்றுவிட்டது. சக்கரவர்த்தியின் கட்டளை; நாம் என்ன செய்யலாம்? இந்தப் பாழும் யுத்தம் எதற்காக வந்ததோ. எப்

போது முடியப் போகிறதோ தெரிய வில்லை!" என்று ஆயனர் கூறிப் பெருமூச்சு விட்டார்.

"இன்னும் கொஞ்சம் பொறுமையா யிருங்கள், ஆயனரே! யுத்தம் சீக்கிரத்தில் முடிந்துவிடும். தாங்கள் பழைய படி தங்கள் அரண்ய வீட்டுக்குப் போகலாம். சீடர்களுக்குச் சிற்பக் கலையும் சொல்லிக் கொடுக்கலாம்!" என்றார் வஜ்ரபாகு.

அக் குரலைக் கேட்டதும் ஆயனர் சிறிது திடுக்கிட்டார்.

"ஐயா! தாங்கள் யாரோ?" என்றார்.

"என்னை நிஜமாகத் தெரிய வில்லையா, ஆயனரே!"

"எப்போதோ பார்த்த ஞாபகமாய் இருக்கிறது."

"அடிக்கடி பார்த்திருக்கிறீர்கள்!"

அப்போது சிவகாமி தந்தையின் அருகில் வந்து அவருடைய காதோடு, "சக்கரவர்த்தி, அப்பா! தெரிய வில்லையா?" என்றாள்.

ஆயனர் அளவிட முடியாத வியப்புடன் ஒரு கணம் வஜ்ரபாகுவின் முகத்தை உற்று நோக்கினார். பின்னர் அவசரமாகப் பீடத்தை விட்டு எழுந்த. "பிரபு! சிற்பக் கலையை நான் விட்டுவிட வேண்டியதுதான். தங்களை அடையாளம் கண்டு பிடிக்கத் தவறினேனே?" என்றார்.

"வேஷம் போடும் கலையில் என்னுடைய சாமர்த்தியம் இப்போதுதான் எனக்குத் திருப்தி அளித்தது. போர்க் களத்தில் புலிகேசியின் முன்னால் நின்று தூது சொல்லி விட்டுத் திரும்பியபோதுகூட இவ்வளவு திருப்தி எனக்கு உண்டாக வில்லை!" என்றார் மகேந்திர பல்லவர்.

அச்சமயம் மிகமிக இலேசாகப் பாம்பு சீறுவது போன்ற சத்தம் கேட்டது. சக்கரவர்த்தியின் கண்களும் சத்ருக்னருடைய கண்களும் பிறர் கவனியாதபடி ஒரு கணம் சந்தித்துப் பிரிந்தன.

ஆயனர், "பல்லவேந்திரா! குண்டோதரன் நேற்றிரவே என்னிடம் சொன்னான்: யாரோ இருவர் வந்திருக்கிறார்கள். அவர்கள் இந்த கிராமத்துப் பாறைகளைப் பார்த்து விட்டுக் கோயில் அமைப்பது பற்றிப் பேசினார்கள் என்று. உடனே தங்களுடைய ஞாபகம் எனக்கு வந்தது. அப்படிப்பட்ட சிற்ப மனோ கற்பனை உள்ளவர்கள் நமது சக்கரவர்த்தியைத் தவிர யார் உண்டு என்று எண்ணினேன். கடைசியில், தாங்களாகவே இருக்கிறீர்கள் ...... பிரபு! நாங்கள் திரும்பி வரலாமா? மாமல்லபுரத்தில் பழையபடி வேலை தொடங்கலாமா?" என்று பரபரப்புடன் கேட்டார்.

"இல்லை, ஆயனரே! இல்லை! அதற்குக் காலம் வரவில்லை. இன்னும் கொஞ்ச காலம் நீங்கள் பொறுமையுடன் இருக்க வேண்டும்..."

"பல்லவேந்திரா! நான் ரொம்ப அவசர புத்திக்காரன். மன்னிக்க வேண்டும்......ஏதோ, இந்த ஏழைச் சிற்பியைப் பார்ப்பதற்காக இவ்வளவு தூரம் தேடி வந்தீர்களே? தங்களைப் பார்த்து எத்தனை காலம் ஆகி விட்டது? ஒரு யுகம் மாதிரி இருக்கிறது" என்றார் ஆயனர்.

"ஆயனரே! உங்களிடம் மாறு வேஷத்துடனே வந்தேன். அதோடு பொய் சொல்லவும் விரும்பவில்லை. நான் இங்கே வந்தது உங்களைப் பார்ப்பதற்காக அல்ல. என் மகன் மாமல்லனைத் தேடிக்கொண்டுதான் வந்தேன்" என்றார் சக்கரவர்த்தி.

சிவகாமி நாணத்தினால் தலை குனிந்து கொண்டாள்.

ஆயனர் இன்னது சொல்வதென்று தெரியாமல், சிறிது தடுமாறி விட்டு, "பல்லவேந்திரா! மாமல்லர் நேற்று இரவே புறப்பட்டுச் சென்று விட்டாரே? குண்டோதரன் சொல்ல வில்லையா?" என்றார்.

"தெரியும், ஆயனரே! மாமல்லனும் பரஞ்சோதியும் இத்தனை நேரம் காஞ்சிப் பாதையில் போய்க்கொண்டிருப்பார்கள். வந்த இடத்தில் உங்களையும் பார்த்துவிட்டு, மாமல்லனைக் காப்பாற்றியதற்காக நன்றி சொல்லி விட்டுப் போகலாமென்று வந்தேன்" என்றார் சக்கரவர்த்தி.

"பிரபு! பரிகாசம் செய்கிறீர்களா? மாமல்லரை நாங்கள் காப்பாற்றவில்லையே? வெள்ளத்தில் முழுகிப் போக இருந்த எங்களையல்லவா குமார சக்கரவர்த்தி தக்க சமயத்தில் வந்து காப்பாற்றினார்?"

"ஆம், ஆயனரே! அதுவும் எனக்குத் தெரியும். ஆனால், மாமல்லனுடைய உயிரை நீங்கள் காப்பாற்றியதும் உண்மைதான். 'நீங்கள்' என்றால், முக்கியமாக உங்கள் குமாரியைச் சொல்கிறேன். இதோ பார்த்தீர்களா, இந்தக் கத்தியை?" என்று சக்கரவர்த்தி கூறி, நாகப்பிடி அமைந்த கத்தியை எடுத்துக் காட்டினார்.

ஆயனர், சிவகாமி இருவரும் அந்தக் கத்தியை இன்னதென்று விளங்காத பயங்கரத்துடன் பார்த்தார்கள்.

"இந்த விஷக் கத்தி மாமல்லன் மேல் பாய்வதற்கு இருந்தது. சிவகாமி அருகில் இருந்தபடியால் மாமல்லன் அந்த அபாயத்திலிருந்து தப்பினான்."



சிவகாமி நடுங்கினாள். அவளுடைய இருதய பீடத்தில் வீற்றிருக்கும் தெய்வத்தின் பேரில் விஷக் கத்தி பாய்வதற்கு இருந்தது என்று எண்ணிய போது, அவளுடைய நெஞ்சில் அந்தக் கத்தி பாய்ந்து விட்டதுபோன்ற வேதனை உண்டாயிற்று. அவ்விதம் நேராமல் தன்னால் காப்பாற்ற முடிந்தது என்ற எண்ணம் சொல்ல முடியாத உள்ளக் கிளர்ச்சியை உண்டாக்கிற்று. ஆனால், தான் காப்பாற்றியது எப்படி என்பது தெரியாதபடியால் திகைப்பும் ஏற்பட்டது.

"பிரபு! என்ன சொல்கிறீர்கள்? குமார சக்ரவர்த்தியின்மேல் விஷக் கத்தி ஏன் பாய வேண்டும்? அவ்விதம் செய்ய எண்ணிய பாதகன் யார்? அதை எவ்விதம் சிவகாமி தடுத்தாள்? எல்லாம் ஒரே மர்மமாயிருக்கிறதே? சிவகாமி! உனக்கு ஏதேனும் தெரியுமா?" என்று ஆயனர் கேட்டார்.

"சிவகாமியைக் கேட்பதில் பயனில்லை, ஆயனரே! அவளுக்கு ஒன்றும் தெரியாது. சமயம் நேரும்போது எல்லாம் சொல்கிறேன். இப்போதைக்கு அபாயம் நீங்கி விட்டது. மாமல்லன் காஞ்சிப் பாதையில் கால்வாசி தூரம் இதற்குள் போயிருப்பான். நானும் போக வேண்டியதுதான்....ஆயனரே! இந்த மண்டபப் பட்டுக் கிராமம் உங்களுக்குப் பிடித்திருக்கிறதல்லவா? யுத்தம் முடியும் வரையில் இங்கேயே நீங்கள் தங்கியிருக்கலாமல்லவா?"

"ஆம், பிரபு! அப்படித்தான் உத்தேசம். இந்தக் கிராம வாசிகள் ரொம்ப நல்லவர்கள். கலை அபிமானம் உள்ளவர்கள். பாறைக் கோயில்கள் அமைக்க உதவி செய்வதாகச் சொல்லியிருக்கிறார்கள்."

"நானும் அதற்குத் தகுந்த ஏற்பாடு செய்கிறேன். உங்களுக்கு வேண்டிய திரவியமும், ஆள்களும், கருவிகளும் கொடுத்து உதவும்படி திருக்கோவலூர் கோட்டத்து அதிகாரிக்குக் கட்டளை அனுப்புகிறேன்."

"பல்லவேந்திரா! தாங்கள் ஒரு நாளாவது இங்கே தங்கலாமா? இன்று சாயங்காலம் பாறைகளைப் போய்ப் பார்த்து, எப்படி எப்படிக் கோயில் அமைக்கலாம் என்று தீர்மானிக்கலாமா?"

மகேந்திர சக்கரவர்த்தி சிரித்துவிட்டு, "ஆயனரே! காஞ்சிக்கு மூன்று காத தூரத்தில் வாதாபிப் படைகள் வந்து கொண்டிருக்கின்றனவாம். அந்தப் படைகள் காஞ்சிக்கு வருவதற்குள் நான் போயாக வேண்டும்" என்றார்.

"அப்படியா? இங்கிருந்து காஞ்சி ஏழு காத தூரம் இருக்குமே? எப்படிப் போவீர்கள், பல்லவேந்



திரா!" என்று ஆயனர் கவலையுடன் கேட்டார்.

"அதைப் பற்றிக் கவலையில்லை. நதியின் அக்கரையில் கண்ணபிரான் ரதத்தில் குதிரைகளைப் பூட்டி வைத்துக் கொண்டு காத்திருக்கிறான் ......"

அப்போது சிவகாமி ஆயனரைப் பார்த்து. "கமலி சௌக்கியமாயிருக்கிறாளா என்று கேளுங்கள், அப்பா!" என்றாள்.

"கமலி சௌக்கியம்,அம்மா! கண்ணபிரான் உன்னைப் பார்த்துக் கமலியைப் பற்றிச் சொல்ல வேண்டுமென்று எவ்வளவோ ஆவலுடன் இருந்தான். நான்தான் வரக்கூடாதென்று தடுத்து விட்டேன் ..."

சிவகாமி மறுபடியும் ஆயனரைப் பார்த்து. "அப்பா! கமலிக்குக் குழந்தை பிறந்ததும் சொல்லி அனுப்பச் சொல்லுங்கள்!" என்றாள். என்ன காரணத்தினாலோ, மகேந்திர பல்லவரை ஏறிட்டுப் பார்க்கவே அவளுக்குச் சங்கோசமாயிருந்தது.

"ஆகட்டும், சிவகாமி! அப்படியே சொல்லியனுப்பச் சொல்கிறேன். ஆயனரே! நான் புறப்படட்டுமா? போகும் வழியில் வேணுமானால் சற்றுப் பாறைகளைப் பார்த்து விட்டுப் போகலாம். நீரும் வருகிறீரா?" என்று சக்கரவர்த்தி கேட்டார்.

"ஆகட்டும். பிரபு! அதைவிட எனக்கு என்ன வேலை?" என்று ஆயனர் எழுந்தார்.

"இன்னும் ஒரு விஷயம் மறந்து விட்டேன்" என்று கூறி மகேந்திர பல்லவர் தமது அங்கிப் பையிலிருந்து அறுகோண வடிவமான பதக்கம் ஒன்றை வெளியில் எடுத்தார்.

அதைக் காட்டி, "ஆயனரே! இது என்ன தெரிகிறதா?" என்று சக்கரவர்த்தி கேட்கவும், "தெரிகிறது, பிரபு! சிங்க இலச்சினை" என்றார் ஆயனர்.

"ஆம், ஆயனரே! இந்த இலச்சினை பல்லவ ராஜ்யத்தில் மொத்தம் பதினொரு பேரிடம்தான் இருக்கிறது. பன்னிரண்டாவது இலச்சினையை உம்மிடம் கொடுக்கிறேன். இதைக் காட்டினால், இந்தப் பல்லவ சாம்ராஜ்யத்தின் எந்த மூலை முடுக்கிலுள்ள அதிகாரியும் நீர் விரும்பியதைச் செய்வார். எந்தக் கோட்டைக் கதவும் உடனே திறக்கும். இதை வைத்துக் கொண்டு என்னையும் மாமல்லனையும் எந்த நேரத்திலும் பார்க்கலாம். இந்த யுத்தகாலத்தில் உம்மிடம் இது இருக்கட்டும் என்று கொடுக்கிறேன். சர்வ ஜாக்கிரதையாய் வைத்துக் கொள்ள வேண்டும். ஏதாவது மிகவும் முக்கியமான காரணம் ஏற்பட்டாலன்றி இதை உபயோகிக்கக் கூடாது" என்று கூறிச் சக்கரவர்த்தி இலச்சினையைக் கொடுப்பதற்காக நீட்டினார்.

"பிரபு! இந்த ஏழைச் சிற்பிக்கு எதற்காக இந்தச் சிங்க இலச்சினை?" என்று ஆயனர் அதை வாங்கிக் கொள்ளத் தயங்கினார்.

"ஆயனரே! இந்தப் பெரிய ராஜ்யத்தில் உம்மையும் உம்முடைய குமாரியையும் காட்டிலும் எந்தச் செல்வத்தையும் நான் பெரிதாய்க் கருதவில்லை. ஏதாவது ஒரு சமயத்துக்கு வேண்டியதாயிருக்கலாம். ஆகையால் வாங்கிப் பத்திரமாய் வைத்துக் கொள்ளும்" என்று மகேந்திர பல்லவர் கையை நீட்டிக் கொடுக்க, அதற்கு மேல் ஆயனரால் அதை மறுக்க முடியவில்லை. பயபக்தியுடன் வாங்கிக் கொண்டு, "அம்மா, சிவகாமி! இதை உன் பெட்டியில் பத்திரமாய் வைத்துவிட்டு வா!" என்று சொல்லிக் கொடுத்தார்.

சிவகாமி அந்தச் சிங்க இலச்சினையை வாங்கிக்கொண்டு அடுத்த அறைக்குள் அதைப் பத்திரப்படுத்தப் போனாள். அங்கே அந்தக் கிராமத்துப் பெரிய வீட்டு ஸ்திரீகள் அவளுடைய ஆடை ஆபரணங்களை வைத்துக் கொள்வதற்காக அளித்திருந்த அழகிய வேலைப்பாடமைந்த பெட்டி இருந்தது. பெட்டியைத் திறந்து அதற்குள்ளே சிங்க இலச்சினையைச் சிவகாமி பத்திரப்படுத்தினாள்.

அவ்விதம் அவள் பெட்டியைத் திறந்து இலச்சினையை வைத்ததை அதே அறையில் ஒரு தூணின் பின்னால் மறைந்திருந்த நாகநந்தி பிக்ஷு பார்த்துக் கொண்டிருந்தார்! அப்போது அவருடைய கண்களில் அடங்காத ஆவல் காணப்பட்டது.

தென் இந்தியா ரயில்வே

கும்பகோணத்தில் மகாமக உத்ஸவம்

பிப்ரவரி 1945

★

1945 பிப்ரவரி மாதம் கும்பகோணத்தில் நடக்கப் போகும் மகாமக உத்ஸவத்தின் பொருட்டு எந்த விதமான விசேஷ ஏற்பாடும் செய்ய இயலாமல் இருப்பதையும் ஷை உத்ஸவ காலத்தில் யாதொரு ஸ்பெஷல் டிரெயினும் விடுவதற்கு இல்லை என்பதையும் தென் இந்தியா ரயில்வேயார் மிகமிக வருத்தத்துடன் பொது ஜனங்களுக்குத் தெரிவித்துக் கொள்ளுகிறார்கள். டிரெயின்களில் ஜன நெருக்கடி ஏற்படாமல் தடுக்கும் பொருட்டு ஸ்டேஷன்களில் டிக்கட் கொடுப்பது கட்டுப்படுத்தப்படும். ஆகவே ஷை உத்ஸவத்தின் பொருட்டு கும்பகோணத்திற்கு ரயில் மூலம் பிரயாணம் செய்ய வேண்டாம் என்று பொது ஜனங்கள் எச்சரிக்கப்படுகிறார்கள். யுத்த கால நிலைமையின் காரணமாக இவ்வாறு முடிவு செய்யும்படியான நிர்ப்பந்தத்தை எவ்வளவுதான் வருந்திய போதிலும் தவிர்க்க முடியாத வகையில் ரயில்வேயாருக்கு நேர்ந்திருக்கிறது.

பண்டிகையின் குதூகலம்!

பொங்கல் பண்டிகை வருஷத்தில் ஒரு தடவை வரும் சந்தோஷ சுதினம். நிலங்களிலிருந்து புது தானியங்கள் விளைந்து உங்கள் வீட்டை அடையும்போது வருஷத்திற்காக சேமிக்கும் பெருமையை நீங்கள் அந்தப் பண்டிகையின்போது தான் அடைகிறீர்கள்.

வாழ்க்கையில் சந்தோஷமே பெரிது. வான்கார்டு இன்ஷ்யூரன்ஸில் ஒரு பாலிஸி எடுத்துக் கொள்வதன் மூலம் உங்களது பிற்கால வாழ்க்கையின் தேவையைப் பூர்த்தி செய்து அபரிமிதமான சந்தோஷத்தை அடைகிறீர்கள்.

இந்த மங்களகரமான சம்பவத்தில் வான்கார்டு உங்கள் யாவர்க்கும் வாழ்த்து அளிக்கிறது.

●


தி வான்கார்டு

இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி லிமிடெட்,

308/309, லிங்கசெட்டித் தெரு :: மதராஸ்

இந்தியாவிலும் சிலோனிலும் பிராஞ்சுகளும் பிரதம ஏஜென்ஸிகளும் உண்டு.

நண்பனா எதிரியா?



இந்தியாவின் எதிர்காலத்திற்கு, சிக்கனம் மிகவும் முக்கியமானதாகவும் இன்றியமையாததாகவும் இப்போதிருப்பதைப் போல ஒரு போதும் இருந்ததில்லை. இந்த யுத்தகாலத்தில் "வாங்கும் சக்தி" நாட்டில் உபரியாயிருக்கிறது. பணம், ரொக்கம், ரூபாயைத்தான் வாங்கும் சக்தி என்கிறோம். இந்த "வாங்கும் சக்தி"யை உற்ற துணையாக ஆக்கவல்லது சிக்கனம். இத்தத்துணை உங்களுக்கும் நாட்டிற்கும் பயன்படும். இந்த வாங்கும் சக்தியைக் கொண்டு கவலையில்லாமல் செலவு செய்தால் அதுவே கொடுமையான எதிரியாகமாறும். அதாவது விலைவாசிகளை உயர்த்தும். யுத்த காலத்தில் இந்தியாவில் பொருட்கள் கிடைப்பது அரிதாயிருக்கிறது. தேவைகளைக் குறைத்தாலல்லது விலைவாசிகள் உயர்ந்தேதான் இருக்கும். கட்டுப்பாட்டு விதிகளால் விலைவாசிகள் உயராது தடுக்கப்பட்டிருக்கின்றன. விலைவாசிகள் உயராது தடுக்கும் இந்தப் போராட்டத்தில் உங்கள் முழு உதவியும் எமக்குத் தேவை.

புத்திசாலித் தனமாகப் பணத்தை முதலீடு செய்யுங்கள். நகைகள், நிலங்கள், கட்டடங்கள், செய்பொருள்கள், பண்டங்கள் ஆகியவற்றின் மீது பணத்தைப் போடாதீர்கள். இந்தக் காலத்தில் மிகச் சிறந்ததும் மகா பத்திரமுள்ள நாணயமான முதலீடுகள், இன்ஷ்யூரன்ஸ், கட்டுறுதிச் சர்ட்டிபிகேட்கள், சேவிங்ஸ், தபால்சேமிப்பு ஆபீஸ், இவை எல்லாவற்றையும் விட அரசாங்கக் கடன் பத்திரங்களிலாவது, [illegible] சரியாக முதலீடு செய்யுங்கள்.

[illegible]க் கடைக்குப் போகும் போதெல்லாம் "இது எனக்கு உண்மையிலேயே தேவை தானா?" என்னும் கேள்வியை நீங்கள் உங்களையே கேட்டுக் கொள்ளுங்கள். தேவையில்லை போன்ற முடிவு செய்த பொருட்களையும், விலைவாசிகள் குறைந்திருக்கும்படிச் செய்கிறீர்கள்; உங்கள் பணமதிப்பை உயர்த்துகிறீர்கள்; உங்கள் பணமும் உங்களுக்கு மிச்சமாகிறது.

உங்களால் இயன்றவரை மிச்சப் படுத்துங்கள்.

மிச்சப் படுத்தியதை முதலீடு செய்யுங்கள்.

தேசியப் போர்முனையார் விடுக்கும் தேசிய வேண்டுகோள்

AAA 1111 TM

யாருக்குப் பிரயோஜனம்?

ஸ்ரீ சுப்பிரமணிய பாரதியார் உயிரோடிருக்கும்போது அவரைத் தமிழர்கள் கவனிக்கவில்லை; தரித்திரத்தினால் கஷ்டப்பட்டார். அவர் காலஞ் சென்று வருஷம் இருபத்து மூன்று ஆகிவிட்டது. இப்போது அவருக்கு ஞாபகச் சின்னம் கட்டுவதற்காக நிதி வசூல் நடக்கிறது!

இந்த ஞாபகச் சின்னத்தினால் பாரதியாருக்கு என்ன பிரயோஜனம்?

ஞாபகச் சின்னத்தினால் பாரதியாருக்குப் பிரயோஜனம் ஒன்றுமில்லைதான்!

ஆனால், தமிழ்நாட்டுக்குப் பிரயோஜனம்; தமிழ் மக்களுக்குப் பிரயோஜனம். தமிழ் நாட்டில் வாழையடி வாழையாகத் தோன்றப் போகும் தமிழர் சந்ததிகளுக்கு அளவில்லாத பிரயோஜனம்.

உலகத்தில் மகான்கள், வீரர்கள், கவிகள், கலைஞர்கள் முதலியவர்களுக்கு ஞாபகச் சின்னங்கள் நிறுவுவதெல்லாம் இறந்து போனவர்களுடைய ஆவிகளின் நன்மையை உத்தேசித்து அல்ல. உயிரோடிருப்பவர்கள், இனி வரப்போகும் சந்ததிகள் ஆகியவர்களின் நன்மையின் பொருட்டேயாகும். அந்த மகான்களின் புனித நினைவினால் தேச மக்கள் பயனடையும் பொருட்டேயாகும்.

பாரதியாருக்கு அமைக்கும் ஞாபகச் சின்னமானது தற்காலத் தமிழ் மக்களின் தமிழன்புக்கும் பெருங் குணத்துக்கும் சிறந்த அத்தாட்சியாக விளங்கும்.

இலங்கையிலிருந்து லாகூர் வரையில் பரவியுள்ள தமிழ் மக்களின் ஐக்யப்பாட்டுக்கும் ஒத்த உணர்ச்சிக்கும் அது உயரிய சின்னமாயிருக்கும்.

பாரதியார் வாழ்ந்த காலத்தில் அவரைக் கவனியாதது அந்தக் காலத்துத் தமிழ் மக்களின் குற்றம்.

இப்போது அவருக்கு ஞாபகச் சின்னம் நிறுவுவது இந்தக் காலத்துத் தமிழ் மக்களின் பெருமை.

பாரதியார் காலத்தில் தமிழ்நாட்டுத் தமிழ் மக்கள் புதிய ஆங்கில பாஷா மோகத்தில் மூழ்கிக் கிடந்தார்கள். தமிழை மட்டமான பாஷை என்று அவர்கள் நினைத்தார்கள். கம்பரையும் வள்ளுவரையும் அவர்கள் போற்றவில்லை; எனவே, பாரதியாரையும் அவர்கள் பாராட்டவில்லை.

இந்தக் காலத்துத் தமிழ் மக்கள் புதிய விழிப்பை அடைந்திருக்கிறார்கள். தமிழில் ஆர்வமும் தமிழ்நாட்டில் பெருமையும் கொண்டிருக்கிறார்கள்.

தற்காலத் தமிழ் மக்கள் காலஞ்சென்ற தமிழ்க் கவிகளுக்கும் ஞாபகச் சின்னம் அமைப்பார்கள்; இப்போது ஜீவிய வந்தர்களாயுள்ள கவிகளையும் ஆதரிப்பார்கள்.

புதிய இளம் ஆசிரியர்களுக்கு ஊக்கமும் ஆதரவும் அளிப்பார்கள். அவர்களுடைய குடும்பங்களை ரக்ஷிக்கவும் நிதி அளிப்பார்கள்.

காலஞ் சென்ற கவிக்கு ஞாபகச் சின்னம் நிறுவுவதற்கும் இப்போதுள்ள கவிகள் - ஆசிரியர்களை ஆதரிப்பதற்கும் போட்டி எதுவும் இல்லை. உண்மையில் ஒன்றுக்கொன்று துணை செய்வதே யாகும்.

பழைய கவிகளையும் பாவலர்களையும் எந்த நாடு போற்றிப் பாராட்டுகிறதோ, அந்த நாட்டிலேதான் புதிய இலக்கியங்களும் செழித்து வளரும்.

* * *

எப்பேர்ப்பட்ட நல்ல காரியமானாலும், அதை 'வரம்பின்றி நீட்டிக் கொண்டே போவது உசிதமாகாது. தமிழ் இலக்கணத்தில் 'சென்று தேய்ந்து இறுதல்' என்பதாக ஒரு குற்றம் உண்டு. பாரதியார் நிதியின் விஷயத்தில் மேற்படி குற்றத்துக்கு ஆளாக நாம் விரும்பவில்லை.

எனவே, பிப்ரவரி 10உடன் பாரதியார் ஞாபகார்த்த நிதி வசூலை முடிவு செய்யத் தீர்மானித்திருக்கிறோம்.

ஆங்காங்கு சிரத்தை எடுத்து மேற்படி நிதிக்குப் பண வசூல் செய்து கொண்டிருக்கும் நண்பர்கள் பிப்ரவரி 10உக்குள் நமது காரியாலயத்துக்கு வந்து சேரும்படி ஆங்காங்கு வசூலான தொகையை அனுப்பி விடும்படி கேட்டுக் கொள்கிறோம்.

* * *

தமிழ் மக்கள் தங்களுடைய தாராள குணத்தைக் காட்டுவதற்குத் தகுதியான இன்னும் பல நல்ல காரியங்கள் தற்சமயம் தொடங்கப் பட்டிருக்கின்றன என்பதை இந்த சந்தர்ப்பத்தில் ஞாபகப்படுத்துகிறோம்.

சிறந்த தேச பக்தரும், தியாகியும், கவியுமான நாமக்கல் இராமலிங்கம் பிள்ளை அவர்கள் தற்சமயம் வறுமை வாய்ப்பட்டிருக்கிறார்கள். காலஞ் சென்ற கவிஞரைப்

போற்றும் தமிழ் மக்கள் தற்சமயம் நம்மிடையே வாழும் கவியை மறந்துவிடக் கூடாது. நாமக்கல் கவிஞருக்குப் பண முடிப்பு அளிப்பதற்காகப் பங்களூரில் சில அன்பர்கள் முயன்று வருகிறார்கள். தமிழ் நாட்டிலும் இத்தகைய முயற்சி ஒன்று கூடிய சீக்கிரத்தில் தொடங்கப்படலா மென்று அறிகிறோம். இம் முயற்சிகளைத் தமிழ் மக்கள் பரிபூரணமாய் ஆதரிக்க வேண்டும்.

இன்னும் தமிழ் நாட்டுக்குப் புகழ் அளித்த தேசியத் தலைவர்களான ஸ்ரீ ஸி. விஜயராகவாச்சாரியார், ஸ்ரீ சத்தியமூர்த்தி ஆகியவர்களின் ஞாபகச் சின்ன நிதிக்கு அவசியம் பணம் அளிக்க வேண்டும்.

ஆசிரியர் கு. ப. ரா. அவர்களின் குடும்ப உதவிக்காக சென்னைக் "கலை மகள்" காரியாலயத்தாராலும், துறையூர் "கிராம ஊழியன்" காரியாலயத்தாராலும் திரட்டப் படும் நிதிகளுக்குத் தமிழ் மக்கள் தாராளமாக உதவி செய்ய வேண்டும்.

ஜனவரி 10உ வரையில் பாரதி நிதி வசூல்

ஸ்ரீ ஸி. வி. ஆர். எம். அனகப்ப செட்டியார், காரைக்குடி நகரத்தார்	250	0	0
* பூனா, கலைக் கழகம் (ஸ்ரீ ரங்க சாமி மூலம்.)	216	0	0
ஸ்ரீ எம். எம். பரமேசுவரய்யர், புரொப்ரைட்டர், ஸெண்ட்ரல் லாட்ஜ், சென்னை	101	0	0
ஸ்ரீ வி. சுவாமி அய்யங்கார், "ஸ்ரீ ராகவம்", மாயவரம்	100	0	0
ஸ்ரீமதி சசிதேவி,	100	0	0
மானேஜர், ஸ்ரீ ரமணீய பாலன் கம்பெனி லிமிடெட், சென்னை	100	0	0
வேட்டைக்காரன் புதூர் மஹா ஜனங்கள் (என். டி. ராஜன், வி. ஜி. வேணுகோபால் மூலம்)	51	0	0
அ. பா. சங்க நெசவுத் தொழிலாளர்கள், திருப்பூர்	26	1	0
ஸ்ரீ கே. எஸ். பரதன், பம்பாய்	25	0	0
மெஸர்ஸ் புஷ்பவனம் ஸ்டோர்ஸ், திருவல்லிக்கேணி	25	0	0
கோயமுத்தூர் முருகன் மில்ஸ் சிக்ரியேஷன் கிளப் அங்கத்தினர்	22	12	0
காஞ்சி தியாகப் பிரம்ம சங்கீத சபாவின் நிர்வாகிகள் (ஸ்ரீ கே. கே. வெங்கடராம ஐயர் மூலம்)	21	0	0
திருக்கோணமலை சமூக சேவா சங்கம் காரியதரிசிகள்	20	0	0
ஸ்ரீ கே. ஏ. எம். ஏ. கே. அண்ணாமலைசாமி நாடார், ஆத்தூர்க்குடி	16	0	0
மணியம், சித்திரக்காரர், 'கல்கி' சென்னை	15	0	0
* பதினைந்து ரூபாய்க்கு உட்பட்ட நன்கொடைகள் ரூ.	251	6	2
* அன்பர்கள் மூலம் வந்த நன்கொடைகள் ரூ.	1693	10	3
மொத்தம் ரூ.	3033	13	5
ஏற்கெனவே வசூல் ரூ.	17303	9	4
ஆக மொத்தம் ரூ.	20337	6	9

* விவரம் அடுத்த இதழில்.

ஆகாச வெடி

"நான் கண் மூடுவதற்குள்ளாகத் தேசிய சர்க்காரைக் கண்ணால் பார்த்து விட விரும்புகிறேன்."

—இந்தியாவின் பிரதம பாதிரி டாக்டர் பாஸ் வெஸ்காட்.

கண் மூடிக் கண் திறப்பதற்குள் அவ்வளவு சீக்கிரமாகவே தேசிய சர்க்கார் கிடைத்து விடும் என்று நாம் எதிர் பார்க்கவில்லை.

★

"கல்கத்தா கவர்னர் மாளிகை அருகில் காக மழை பெய்தது. இதை சுவர்க்கவாசிகள் பொழிந்திருப்பார்களென்று ஜனங்கள் பேசிக் கொள்கின்றனர்." —கல்கத்தா செய்தி.

இதிலிருந்து சுவர்க்கத்திலும் ஒரு வேளை பணப் பெருக்கம் ஏற்பட்டிருக்குமோ என்று சந்தேகப்படுகிறோம்.

★

"ஒரு அட யோகி 16 மணி நேரம் ஒரு குழியில் உட்கார்ந்திருந்து விட்டுப் பிறகு எழுந்து வெளியே வந்தார்."

—கல்கத்தா செய்தி.

என்னத்திற்காக இப்படி ஒரே அடமாய்ப் பதினாறு மணி நேரம் குழியில் உட்கார்ந்திருந்தார் என்று கேட்கப் படுகிறது.

★

"சர்ச்சில், ரூஸ்வெல்ட், ஸ்டாலின் ஆகிய திரிமூர்த்திகள் அடுத்த பிப்ரவரியில் நிச்சயம் லண்டனில் மகாநாடு கூடியே தீருவார்கள்."

—ஒரு செய்தி.

திரிமூர்த்திகளே வந்தபோதிலும் மகாநாட்டை நிறுத்த முடியாது போலும்!

★

"குழாய் நீரை உபயோகித்து மோட்டாரை ஓடச் செய்வதற்கான ஒரு முறையை எட்வர்ட் டேப் என்ற எஞ்சினீயர் கண்டு பிடித்திருக்கிறார்."

—ஒரு செய்தி.

'பெட்ரோல் தண்ணீர் பட்டபாடு படுகிறது' என்பது போய் இனி 'தண்ணீர் பெட்ரோல் பட்ட பாடு படுகிறது' என்று கூறவேண்டியிருக்கலாம்.

வான சஞ்சாரம்

இசைத் தேனீ

பழைய வருஷத்துக் கடைசி வாரம் சாதாரண ரேடியோ சங்கீதம் தமிழிசைக் கச்சேரிகளின் ஒலிபரப்பினால் செழித்தோங்கிய தென்றால் புது வருஷத்து முதல் வாரம் திருவையாறு தியாகராஜ உத்ஸவக் கச்சேரிகளின் அஞ்சல் மூலம் சங்கீதக் களஞ்சியமாகவே விளங்கியது. தவிர ஜனவரி 1௳ சென்னை திருச்சி நிலையங்களில் நடந்த கச்சேரிகள் பெரும்பாலும் கேட்கத் தகுந்தவைகளாயிருந்தன.

2௳ சென்னையில் ருக்மிணி சௌந்தரராஜன் இனிமையான குரலில் நிதானமும் நாஸுக்கும் கொண்டு, பிலஹரி, சங்கராபரணம், தோடி, வாசஸ்பதி ராகங்களைச் சாதுர்யமாய் வழங்கினார். குரலில் கன நய மாறுதல்களும் சஞ்சாரங்களில் ஞானபாவமும் கண்டன.

அன்று திருச்சியில் பாடிய திருப்பத்தூர் பாக்ய லக்ஷ்மிக்குச் சற்று அடங்கிய சாரீரம். ஆனால், ஞான பாவத்துக்குக் குறைவில்லை. கல்யாணி ராகமும் 'வருவாய்' என்ற தமிழ் உருப்படியில் கண்ட நிரவலும் ஜோராயிருந்தன.

அன்றிரவு 9-30 மணிக்குத் திருவையாற்றிலிருந்து அஞ்சல் செய்த சாத்தூர் சுப்ரமணியம், பல்லடம் சஞ்சீவி ராவ் இவர்களின் கச்சேரிகள் நன்கு கேட்டன.

3௳ பகலிலும் இரவிலும் திருவையாறு உத்ஸவக் கச்சேரிகளே பெரும்பாலும் ரேடியோவில் கேட்டன. அங்கு அடக்க முடியாத ஜனத்திரள் சேர்ந்திருந்ததுபோலும். நானும் அவ்விடம் நேரில் போக முடியவில்லையே என்று முதலில் வருத்தப்பட்டாலும், அங்கிருந்த பெருங் கூட்ட அமளியில் அவதிப்படாமல், வீட்டுக்குள்ளேயே யிருந்து அங்கு நடந்தவையெல்லாம் கேட்க முடிந்தது பற்றிச் சமாதான மடைந்தேன். ரேடியோ பெட்டியைத்தான் தியாகராஜரின் சமாதியாய் நினைத்துக்கொண்டேன். பெரிய பெரிய வித்வான்களெல்லாம் பாடினது ஒரு புறம். நடு நடுவே கேட்ட பேச்சுக்கள் அதைவிட ரஸமாயிருந்தன. 'பின்னாடி போங்கோ' 'வந்தவாளுக்கு இடம் கொடுங்கோ' என்றார் ஒருவர். 'ஸார் மைக்கைப் பார்த்துக் கொள்ளுங்கோ' என்றார் மற்றொருவர். இந்த அமளியின் நடுவில் 'ஸார் நீங்க மேலே போட்டுக் கொண்டிருக்கும் அங்கவஸ்திரம் என்ன விலை?' என்று ஒருவர் கேட்டது கூடக் காதில் பட்டது.



ஸ்ரீமதி ஆர். தங்கம்மாள்

அன்றைய தினம் சென்னையில் பாடிய எம். டி. பார்த்தசாரதியின் கச்சேரி சிறந்து விளங்கியது. கன சாரீரம். நல்ல உதவுபடி. கேதாரம், ஹிந்தோளம் ராகங்கள் ஜிலுஜிலுப்பாயிருந்தன.

4௳ சென்னையில் பழைய வித்வான் பால கிருஷ்ணய்யர் வாசித்த வயலின் சங்கீதம் அனுபவம் வாய்ந்ததாகயிருந்தது. பைரவி, கீரவாணி ராகங்கள் விஸ்தாரமாய் வெளிவந்தன. ஸ்வரம் வாசித்ததில் விருவிருப்புக் கண்டது. இக்காலத்திய நாஸுக்குகளை அவரிடம் எதிர்பார்ப்பதற்கில்லை.

5௳ சென்னையில் பாடிய ஆர். தங்கம்மாளுக்கு நடுத்தர சாரீரம். பிலஹரி, ஆரபி, வந்தனதாரிணி ராகங்கள் நல்வடிவங்களாயிருந்தன. மோக்ஷத்தில் பிர்க்கா வகை. 'நின்யாகோ' என்ற உருப்படி சொகுசாயிருந்தது. பிற்பகலில் பாடிய மந்தாரி, ஆபோகி, ஷண்முகப்ரியா ராகங்களும் ஞானபாவத்தை வெளிப்படுத்தின.

அதே நிலையத்தில் கேட்ட வேலூர் சுப்பிரமணியத்தின் கானமும் கவனிக்கத் தக்கதே. பரந்த சாரீரம். சிற்சில இடங்களில் 'மக்கர்' பண்ணியது. இருந்தாலும் ஞானபாவத்திலும் தேவமனோஹரி, கௌளை, முகாரி ராகங்களை பாவம் குறையாது பாடினார்.

6௳ சென்னையில் வி. ராஜலக்ஷ்மி, வி. ஹேமலதா இருவரும் சேர்ந்து பாடியது கர்ணாமிருதமாயிருந்தது. ஒருவர் ராகம் பாடினார். சாவேரி, தோடி ராகங்கள் அழகாயிருந்தன. கனிப்பும் இனிமையும் கொண்ட குரல்களிலிருந்து பிடிகள் முத்து முத்தாய் விழுந்தன.

அன்றிரவு அதே நிலையத்தில் வேளூர் மீனாக்ஷிசுந்தரம் பிள்ளையின் முழுக் கச்சேரி, வந்தனதாரிணியில் மிகத் தெளிவான சஞ்சாரம் கண்டது. ஆரபியிலும் காம்போதியிலும் கொஞ்சம் வேலைப்பாடு தென்பட்டன. 'கல்லாத பேர்களே' என்ற விருத்தத்தைச் சாகித்யத் தெளிவும், பாவப் பொலிவும் கொண்டு ராகமாலிகையாக வழங்கியதுதான் சிறந்து விளங்கியது.

7௳ கச்சேரிகளில் சென்னையில் கஸ்தூரி சிம்ஹாத்ரி அப்பளாச்சாரியின் வயலின் வாத்யமும் ராதா ஜெயராமனின் பாட்டுமே சிறந்து விளங்கின. முன்னவர், சுநாதத்துடனும் விறுவிறுப்புடனும் சாரமதி, தேவகாந்தாரி, கரஹரப்ரியா ராகங்களை வெகு திறமையாய்க் கையாண்டார். பின்னவர் இனிமையான குரலில் நல்ல உதவுபடியும் அழுந்பாணியும் கொண்டு, சங்கராபரணம் காம்போதி ராகங்களை அருமையாக வழங்கினார்.

உத்தரன்

சக்கரவர்த்தி இராஜகோபாலாச்சாரியார்

பிருகன்னளையைத் தேர்ப் பாகனாக அமைத்துக் கொண்டு விராடனுடைய மகன் உத்தரன் நகரத்திலிருந்து உற்சாகமாகவே புறப்பட்டான். "வேகமாக ஓட்டு! கௌரவர்கள் பசுக்களை வளைத்து ஓட்டிக் கொண்டு போகும் திசையை நோக்கிச் செலுத்து" என்று சொன்னான்.

குதிரைகளும் வேகமாகவே சென்றன. கௌரவ சேனை கண்ணுக்குத் தென்பட்டது. ஆகாயம் அளாவிய புழுதிக்குப் பின் நான்கு திசைகளையும் அடைத்துக் கொண்டு கடல் போல் பரவி நின்றது அந்தச் சேனை. பீஷ்மரும் துரோணரும் கிருபரும் துரியோதனனும் கர்ணனும் அணிவகுத்து நடத்தும் பிரமாண்டமான படையைக் கண்டான்.

தன்னையும் அறியாமல், நடுக்கமும் மயிர்க் கூச்சமும் உண்டாயின. பயத்தினால் இரண்டு கண்களையும் கைகளால் மூடிக் கொண்டான். அவனால் தாங்க முடியவில்லை.

"இவ்வளவு பெரிய படையை நான் எவ்வாறு எதிர்ப்பேன்? கௌரவர்களோடு போர் புரிவதற்கு நான் திறமையுள்ளவன் அல்ல. என்னுடைய பிதாவான அரசன் நம்முடைய சேனை முழுவதையும் திரட்டிக்கொண்டு சுசர்மனை எதிர்க்கப் போய் விட்டார். நகரத்தைக் காப்பின்றிச் செய்து விட்டார். எனக்குப் படையுமில்லை; படைத் தலைவர்களுமில்லை. ஒருவிதத் துணையுமில்லை. உலகப் பிரசித்தி யடைந்திருக்கும் இந்த வீரர்களை நான் எவ்வாறு எதிர்ப்பேன்? பிருகன்னளையே! தேரைத் திருப்பு!" என்றான்.

பிருகன்னளை சிரித்தான். "உத்தரனே! ராஜகுமாரனே! ஸ்திரிகளுக்கு





முன் தற்புகழ்ச்சி பேசிவிட்டு என்னையும் அழைத்துக் கொண்டு யுத்தத்துக்குப் புறப்பட்டாய். பிரதிஜ்ஞை செய்துவிட்டுத் தேரின் மீதேறினாய். ஊர் ஜனங்கள் உன்னை நம்பியிருக்கிறார்கள். ஸைரந்திரியும் என்னைப் புகழ்ந்து நீயும் ஒப்புக்கொண்டு நான் உன்னுடன் வந்து விட்டேன். பசுக்களை மீட்காமல் ஊர் திரும்பினோமானால் எல்லாரும் பரிகசிப்பார்கள்! நான் திரும்ப முடியாது. நீ உறுதியாக நின்று யுத்தம் செய். பயப்பட வேண்டாம்" என்று சொல்லித் தேரை நிறுத்தாமல் ஓட்டிக் கொண்டு போனான். பகைவர்களுடைய சேனைக்கு அருகே வந்து விட்டார்கள். உத்தரனுடைய பயம் முன்னைவிட அதிகரித்தது.

"முடியவே முடியாது. கௌரவர்கள் பசுக்களை இஷ்டப்படி கொண்டு போகட்டும். ஸ்திரீகள் என்னைப் பரிகாசம் செய்தாலும் செய்யட்டும். யுத்தத்தினால் என்ன பயன்? ஒரு லாபமுமில்லை. நான் திரும்பித்தான் போவேன். நீ தேரைத் திருப்பு. இல்லாவிட்டால் நானே தனியாக நடந்து போவேன்" என்று சொல்லி உத்தரன் அம்புகளையும் வில்லையும் எறிந்து விட்டுத் தேரினின்று கீழே குதித்து, பயத்தினால் ஆவேசமாகிப் பைத்தியக்காரனைப் போல் நகரத்தை நோக்கி ஓட ஆரம்பித்தான்.

அருச்சுனன், "ராஜகுமாரா! நில்! ஓடாதே! க்ஷத்திரியன் இவ்வாறு செய்யலாகாது" என்று சொல்லி ஓடும் உத்தரனைத் துரத்திக் கொண்டு போனான். தொங்கும் தலை மயிர்ப் பின்னல் ஆட, உடுத்தியிருந்த புடவையும் வீசி வீசி ஆட, பிருகன்னளையானவன் உத்தரனைத் துரத்திக்கொண்டு ஓடினான். உத்தரன் அவன் கைக்குச் சிக்காமல் புலம்பிக் கொண்டு இங்கு மங்கும் ஓடினான். கௌரவச் சேனையிலிருந்து பார்த்துக் கொண்டிருந்தவர்களுக்கு இந்தக் காட்சி மிக வியப்பாகவும் வேடிக்கையாகவும் இருந்தது.

"இது யார்? புருஷனைப் போலும் காணப்படுகிறான்; ஆனால் ஸ்திரீ வேஷமாகவும் இருக்கிறது. இவன் ஒருவேளை அருச்சுனனாக இருக்கலாமோ?" என்று துரோணர் சந்தேகித்தார்.

கர்ணன், "இவனாவது அருச்சுனனாவது? இருந்தாலும் என்ன? மற்ற பாண்டவர்கள் இல்லாமல் அருச்சுனன் ஒருவன் மட்டும் வந்து நம்மை என்ன செய்ய முடியும்? விராட ராஜன் தன் குமாரனைத் தனியாக ஊரில் விட்டு விட்டுச் சேனை முழுவதையும் கூட்டிக் கொண்டு சுசர்மனோடு யுத்தம் செய்யப் போய் விட்டிருக்கிறான். சிறுவனான ராஜகுமாரன் அந்தப்புரத்தில் பணி விடை செய்யும் அலியைத் தனக்குச் சாரதியாக அமைத்துக் கொண்டு தனியாக வந்திருக்கிறான். இவ்வளவே விஷயம்" என்றான்.

* * *

"என்னைப் பிடிக்க வேண்டாம். உனக்குப் பணம் தருவேன். புடவைகள் தருவேன். வேண்டியதை யெல்லாம் உனக்குக் கொடுப்பேன். நான் ஊருக்குத் திரும்பிப் போகிறேன். நீ நல்லவன். என்னை விட்டுவிடு. என் தாயாருக்கு நான் ஒருவனே மகன். நான் சிறுவன். தாயாரின் பக்கத்தில் படுத்து வளர்ந்தவன். எனக்குப் பயமா யிருக்கிறது" என்று சொல்லிக் கொண்டும் கூச்சலிட்டுக் கொண்டும் உத்தரன் ஓடினான்.

பிருகன்னளையும் அவனை விட்ட பாடில்லை. துரத்திப் பிடித்து அவனைத் தேரின்மேல் பலாத்காரமாக ஏற்றினான்.

"அறிவின்மையால் வீரியம் பேசினேன். ஐயோ! நான் என்ன செய்வேன்? என் விதியே!" என்று உத்தரன் அழுதான்.

"ராஜகுமாரனே! பயப்பட வேண்டாம். இந்தக் கௌரவர்களோடு நான் போர் புரிவேன். குதிரைகளை மட்டும் நீ பார்த்துக் கொள். நீ தேரை ஓட்டினாயானால் மீதி எல்லாம் நான் செய்து முடிப்பேன். உனக்கு ஜயமுண்டாகும். நிச்சயமாகச் சொல்லுகிறேன். ஓடிப் போவதினால் உனக்கு ஒரு நன்மையும் உண்டாகாது. என்னுடைய முயற்சியால் இந்தச் சேனை தோல்வி யடைந்து சிதறி ஓடும். நான் உன்னுடைய பசுக்களை மீட்டுக் கொண்டு வருவேன். உனக்குப் புகழ் உண்டாகும்" என்று சொல்லி அருச்சுனன் உத்தரனை ரதத்தின் மேல் ஏற்றிக் குதிரைக் கடிவாளங்களை அவன் கையில் கொடுத்தான். மயானத்தி

யிருக்கும் வன்னி மரத்தண்டை தேரை நடத்தச் சொன்னான்.

* * *

இதையெல்லாம் பார்த்துக் கொண்டிருந்த துரோணர் இவன் அருச்சுனனே என்று மனத்தில் நிர்மானித்து பீஷ்மருக்கும் குறிப்பாகச் சொன்னார். துரியோதனன் கர்ணனைப் பார்த்து, "இவன் யாரா யிருந்தால் நமக்கு என்ன கவலை? பார்த்தனாக இருந்தால் நம்முடைய காரியம் நிறைவேறினதாகவே முடியும். பாண்டவர்கள் மறுபடி பன்னிரண்டு வருஷம் காட்டுக்குப் போக வேண்டியதாகும்" என்றான்.

* * *

வன்னி மரத்தண்டை வந்ததும் பிருகன்னளை உத்தரனைப் பார்த்து, "விராட புத்திரனே! உனக்கு ஜயம்! குதிரைகளை விட்டு விட்டு இறங்கி இந்த மரத்தின்மீது ஏறி, மேலே கட்டியிருக்கும் ஆயுதங்களைக் கொண்டு வா" என்றான்.



உத்தரனுக்கு ஒன்றும் விளங்கவில்லை. திகைத்து நின்றான். மறுபடி அருச்சுனனை அந்தப் பிருகன்னளை, "ரதத்திலிருக்கும் இந்த ஆயுதங்கள் எனக்குப் போதியவை அல்ல. இந்த மரத்தின் மேல் பாண்டவர்களுடைய திவ்விய ஆயுதங்கள் கட்டி வைக்கப்பட்டிருக்கின்றன. அதை எடுத்து வா" என்றான்.

"இந்த வன்னி மரத்தில் கட்டித் தொங்குவது வேடக் கிழவியின் சவம் என்றல்லவோ சொல்லுகிறார்கள்? சவத்தை நான் எவ்வாறு தொடுவேன்? இந்த மாதிரியான காரியத்தை என்னைச் செய்யச் சொல்லுகிறாயே?" என்றான் உத்தரன் மிக்க வருத்தத்துடன்.

"கட்டித் தொங்குவது சவமல்ல, உத்தரனே! அது பாண்டவர்களுடைய ஆயுதங்கள் என்பது எனக்குத் தெரியும். தைரியமாக மரத்தின்மீது ஏறி அதைக் கொண்டு வா! தாமதம் செய்யாதே!" என்றான் அருச்சுனன்.

தடுத்து ஒன்றும் செய்ய முடியாதவனாகி உத்தரன் பிருகன்னளை சொன்னபடி மரத்தின்மீது ஏறி, கட்டியிருந்த மூட்டையை அருவருப்புடன் தூக்கிக் கொண்டு கீழே இறங்கினான். தோல் மூட்டையை அவிழ்த்ததும் சூரியன் போல் பளபளவென்று பிரகாசித்துக் கொண்டிருந்த ஆயுதங்கள் காணப்பட்டன.

உத்தரன் அவற்றின் ஒளியைக் கண்டு பிரமித்துக் கண்களை மூடிக் கொண்டான். பிறகு தைரியமடைந்து மகிழ்ச்சியோடு அவற்றை யெல்லாம் தொட்டுத் தொட்டுப் பார்த்தான். அந்த ஸ்பரிசத்தினாலேயே உத்தரன் வீரியத்தை அடைந்தான்.

"சாரதியே! இது என்ன ஆச்சரியம்? இந்த விற்களும் அம்புகளும் கத்திகளும் பாண்டவர்களுடையன என்கிறாயே! அவர்கள் ராஜ்யத்தை இழந்து கானகம் சென்று காணாமல் மறைந்தார்களே? பாண்டவர்களை நீ அறிவாயா? அவர்கள் எங்கே இருக்கிறார்கள்?" என்று உற்சாகமாகக் கேட்டான்.

அப்போது அருச்சுனன் விராடன் மகனுக்குத் தான் யாரென்பதையும், தன் சகோதரர்களைப் பற்றியும், திரௌபதியைப் பற்றியும் எல்லாம் சொன்னான். "அரசனுக்குப் பணிவிடை செய்து வந்த கங்கரே தருமபுத்திரர். உன் பிதாவுக்கு ருசியான ஆகார வகைகளைப் பக்குவம் செய்து வந்த சமையற்கார வலவனே பீமசேனன்! எவளை அவமானப் படுத்தினதினால் கீசகன் இறந்தானோ, அந்த ஸைரந்திரியே புகழ் பெற்ற பாஞ்சாலி என்று அறிவாய்! குதிரைகளைக் கட்டுகிற தாமக்கிரந்தியும் பசுக்களைக் காக்கும் தந்திரீபாலனும் நகுல சகதேவர்கள் என்றறிவாய். நானே தனஞ்சயன்! நீ பயப்பட வேண்டாம், ராஜகுமாரனே! என்னுடைய வீரியத்தை இப்போது பார்ப்பாய். பீஷ்மரும் துரோணரும் அசுவத்தாமரும் பார்த்துக் கொண்டிருக்க இந்த கௌரவச் சேனையைத் தோற்கடித்துப் பசுக்களை மீட்டுக் கொண்டு வருவேன். நீயும் புகழ் பெறுவாய்!" என்றான்.

அப்போது உத்தரன் கைகூப்பி வணங்கி "பார்த்தனே! நான் பாக்கியவான் ஆனேன். புகழ்பெற்ற தனஞ்சயனையா நான் இப்போது என் கண்களால் பார்க்கிறேன்? விசயனா என்னை வீரனாக்கினான்! அறியாமையால் செய்யப்பட்ட என் பிழையைப் பொறுக்க வேண்டும்" என்றான்.

* * *

பெருஞ் சேனையைப் பார்த்து உத்தரன் பயந்து போகாமலிருக்கவும் அவனுக்குப் பூரண தைரியம் உண்டாவதற்காகவும் அருச்சுனன் தான் செய்த பல வீரியச் செயல்களைப் பற்றிச் சொல்லிக் கொண்டே போனான். பிறகு கௌரவ சேனையின் முன் தேரை நிறுத்திக் கீழே இறங்கிக் கடவுளை வணங்கிக் கையிலுள்ள சங்கு வளையல்களைக் கழற்றி விட்டுத் தோல் கையுறைகளைப் போட்டுக் கொண்டான். தொங்கும் தன் தலை மயிரைத் தூக்கி வஸ்திரத்தினால் கட்டி முடித்துக் கொண்டு, கிழக்கு முகமாக நின்று அஸ்திரங்களைத் தியானம் செய்து விட்டுத் தேரில் ஏறிக் காண்டீ

வத்தை எடுத்தான். அதில் காண் ஏற்றி மூன்று தடவை இழுத்து விட்டான். அதனாலுண்டான பேரொலி எட்டுத் திக்குகளிலும் எதிரொலி உண்டாக்கிற்று. கௌரவர்களுடைய சேனையிலிருந்த வீரர்கள் அதைக் கேட்டதும், "இது காண்டீபம்!" என்று கத்தினார்கள். அருச்சுனன் தன் உருவம் நன்றாக விளங்கத் தேர்ன்மேல் நின்று தேவதத்தம் என்கிற தன்னுடைய சங்கை வாயில் வைத்து ஊதினான். கௌரவப் படை நடுங்கிற்று.

"பாண்டவர்கள் வந்து விட்டார்கள்" என்ற பேச்சு சேனை முழுவதும் பரவிற்று.

• • •

அந்தப்புரப் பெண்களின் முன் சூரனைப்போல் பேசி, சேனையைக் கண்டதும் பயந்து ஓடிய உத்தரனுடைய கதை பாரதத்தில் அமைந்திருப்பது ஹாஸ்யத்திற்காக மட்டிலு மல்ல.

நல்ல குணங்களைப் படைத்தவர்கள் அத்தகைய குணங்கள் இல்லாதவர்களைப் பார்த்து வெறுப்பது மனித சுபாவம்! வீரியம் படைத்தவர்கள் வீரியம் காட்ட முடியாமல் பயப்படும் ஜனங்களைப் பார்த்து இகழ்வது சகஜம். ஆனால் தனஞ்சயன் அவ்வாறு செய்யவில்லை. மகாத்மாவும் உண்மை வீரனுமான அவன் உத்தரனுடைய நிலையைக் கண்டு அவனுக்கு வேண்டியதைச் செய்து அவனையும் வீரனாக்கினான். தான் படைத்த தைரியத்துக்குத் தன் பிறவிக் குணமே காரணம் என்று அறிந்து அகம்பாவத்தை அகற்றிய அருச்சுனன், தைரியம் படைத்திராத உத்தரனுக்குச் செய்ய வேண்டியதைச் செய்து அவனுக்கும் புகழ் சம்பாதித்துக் கொடுத்தான்.

இதுவே தனஞ்சயனுடைய தனிப் பண்பு. தன்னுடைய சக்தியை அளவு கடந்து உபயோகிக்க மாட்டான். சமயத்தில் கிட்டிய சௌகரியங்களைப் பயன் படுத்திக் கொண்டு வெறுக்கத் தக்க செயல்களை அருச்சுனன் ஒரு நாளும் செய்ய மாட்டான். அவன் பெற்ற பல புகழ்ப் பெயர்களின் பீபத்ஸு என்பதும் ஒரு பெயர். தகாத செயல்களைச் செய்ய மாட்டான், கூச்சப் படுவான் என்பது அதன் பொருள்.

அருச்சுனனால் வீரனாக்கப்பட்ட உத்தரன் பிறகு பெரிய குருட்சேத்திர யுத்தத்தில் யானைமேல் சென்று சல்யனை எதிர்த்துப் பல சாகசக் காரியங்கள் செய்ததாகவும் சல்யனால் தாக்கப்பட்டு வீர சுவர்க்க மடைந்தான் என்பதாகவும் சொல்லப் பட்டிருக்கிறது.

காளிக் கிணறு



து. ராஜகோபால்

காளிக் கிணற்றுத் தண்ணீர் கற்கண்டு போல இனிக்கு மென்பது பூங்குளம் வழியாகப் பொள்ளாச்சி சந்தைக்குப் போகும் அத்தனை பேரும் ஒருமுகமாக ஒப்புக் கொண்ட விஷயம். நல்ல கடுங் கோடையில் அந்தப் பிராந்தியத்தில் வற்றாத கிணறு அது ஒன்று தான். கண்ணுக் கெட்டிய தூரம் ஒரே பொட்டல். சந்தைக்குச் செல்லும் கிராமக் கவுண்டர்கள் படை பதைக்கும் வெய்யிலில், காளிக் கிணற்றை நம்பி வியர்க்க விறுவிறுக்க வந்து, "உஸ்...அப்பாடா!" என்று அங்கு விச்ராந்தி யடையும் காட்சியைக் காணும் யாருக்கும், "நல்ல மஹானுபாவன்! தவிக்கிற வெய்யிலில் தண்ணி ஊத்தும் புண்ணியத்தைக் கட்டிக் கிட்டான்" என்றுதான் சொல்லத் தோன்றும்.

காளியண்ணக் கவுண்டர் அந்தப் பூங்குளத்துக்கே சர்வாதிகாரி என்று சொல்ல வேண்டும். அந்த ஊர் பூராவும் அவருடையதுதான். அந்த ஊர்ப் பெரிய பண்ணாடி அவர்தான். அவருடைய ஒரே மகன் ராசாக் கவுண்டன் ரொம்ப நல்ல மாதிரி. கோயம்புத்தூர் விவசாயக் கல்லூரியில் படித்துப் பட்டம் பெற்றுப் பிறகு கிராமத்திலேயே தங்கி விவசாயப் பண்ணை யொன்று வைத்துப் பாதுகாத்து வந்தான். அவன் வெட்டிய கிணறுதான் அந்த ஊர் முழுதும், என் அந்தப் பிராந்தியத்திலுள்ள எட்டு சுற்று வட்டாரக் கிராமங்களிலும். அந்தக் கிணறு 'காளிக் கிணறு' என்றே பிரசித்தமாகி விட்டது. எல்லோரும் ராசாக் கவுண்டன் தன் தகப்பனின் ஞாபகார்த்தமாகவே அதைக் கட்டினதாக நினைத்து வந்தார்கள். பாவம்! ஜனங்களுக்கு என்ன தெரியும்? அதைக் கட்டி முடித்த ஜீவனின் ஹிருதயத்தில் பொங்கித் ததும்பும் சிந்தனைக் கடலின், பச்சாத்தாபப் புயலின் ஞாபகார்த்தமே அது என்பது மற்றவர்களுக்கு எப்படித் தெரியும்?

2

காளியண்ணக் கவுண்டருக்குப் பூச் செடிகள் என்றால் அசாத்தியப் பிரியம். ஆகவே அவர் தம்முடைய வீட்டுக்குப் பின் புறத்திலிருந்த பரந்த நிலப் பரப்பைப் பார்த்தோர் பிரமிக்கத் தகுந்த பூஞ்சோலை யாக்கி விட நினைத்ததில் ஆச்சரியமொன்று மில்லை. பொட்டல் காட்டைப் பூஞ்சோலை யாக்குவதென்றால் சாமானியமா? ஒரு செம்புத் தண்ணீருக்கு ஒன்பது மார் கயிற்றைக் கிணற்றுக்குள் விட்டுவிட்டு, செம்பு

எப்போது மேலே வரப் போகிறதென்று தவங் கிடக்கும் பிரதேசத்தில் செடிகளுக்குத் தண்ணீருக்கு எங்கே போவது? ஆயினும் கவுண்டர் பிடித்தால் பிடித்தது தான். யார் சொன்னாலும் கேட்கவே மாட்டார். ஆகவே ஆயிரம் ரூபாய் செலவில் அவருடைய வீட்டிற்குப் பின் புறத்தில் தோன்றிய தாவினால் அவருக்கு உண்டான ஆனந்தம் கொஞ்ச நஞ்சமல்ல. நிலத்தைப் பண்படுத்தித் தோட்டம் போட கோயம்புத்தூரி லிருந்து அநுபவம் மிக்க தோட்டக்காரன் ஒருவன் வரவழைக்கப்பட்டான். பங்களாக்களிலும், 'பார்க்கு'களிலும் தோட்ட வேலைசெய்து அநுபவம் வாய்ந்தவன் அவன். தோட்டத்தின் மூலையில் அவனுக்காக ஒரு குடிசை முளைத்தெழுந்தது. அவனும் அவனுடைய பெண் காளியாத்தாளும் அந்தக் குடிசையில் குடி புகுந்தனர். தோட்டம் நாளுக்கு நாள் செழித்து வந்தது. கவுண்டர் அடிக்கடி கோயம்புத்தூருக்குச் சென்று வித விதமான 'குரோட்டன்ஸ்'களும் மலர்ச் செடிகளும் வாங்கி வருவார். தோட்டக்காரனும் மிகவும் சிரத்தையாக எஜமானனுக்கு மேல் பரிவாக அவைகளைப் பாது காத்து வந்தான்.

3

ராசாவுக்குப் பள்ளிக்கூடம் போகிற நேரம் தவிர மீதி நேரமெல்லாம் தோட்டத்தில் விளையாட்டுதான். கவுண்டரின் ஒரே மகன். கேட்க வேண்டுமா? காளியாத்தாள்தான் அவனுடைய விளையாட்டுத் தோழி. காளி, காளி என்று எப்பொழுது பார்த்தாலும் அவளுடன் விளையாடிக் கொண்டே இருப்பான். தனக்குக் கிடைக்கும் தின்பண்டங்களைக் காளிக்குக் கொடுக்காமல் தின்னவே மாட்டான்.

கந்தனுக்கும் தன் மகள் காளியாத்தாள் மேலுள்ள பிரியம் இவ்வளவு அவ்வளவு என்று சொல்ல முடியாது. அவனுடைய மனைவி காத்தாயி இறந்த பொழுது அவன் கூறிய சொற்கள் இன்னும் அவன் காதில் ஒலித்துக் கொண்டிருந்தன. அவள் பரிவோடு அவனுடைய கைகளில் குழந்தை காளியாத்தாளை ஒப்புவித்த அந்தக் காட்சி இன்னும் அவன் கண்களை விட்டு அகலவேயில்லை. "மச்சான்! ஒம் புள்ளே மேலே ஆணையாகச் சொல்லு. நீ வேறே யாரையும் கண்ணாலம் கட்டிக்கிலே யின்னு. காளியாத்தாளைக் கண்ணுக்குக் கண்ணா வெச்சிருந்தேன். இனிமே நீதான் அவளைப் பாத்துக்க வேணும்" என்று கூறிக் கண்களிலிருந்து மள மளவெனக் கண்ணீர் உகுத்த காட்சியை எப்படி மறக்கக் கூடும்? ஆகவே அவன் சம்பாதிக்கும் சொற்பப் பணத்தை அவளுக்காகவே செலவழித்து வந்ததில் ஆச்சரியமில்லை. அவள் கேட்கும் பொருள்களோ, சட்டையோ, துணிமணியோ, தின்பண்டங்களோ எதுவும் அவன் சக்திக்கு மீறியதானாலும் வாங்கித் தரத் தயங்கியதே யில்லை.

பெயர்தான் காளியாத்தாளே தவிர ரூபம் அப்படியல்ல. காளியாத்தாளை அழகு ஸ்வரூபம் என்று வர்ணிக்க நான் தயாராயில்லை. மாநிறத்துக்குச் சற்று மேலானதே நிறம். 'களை' என்பார்களே, அந்தக் களை அவளுடைய முகத்தில் பூரணமாகப் பொலிந்திருந்தது.

ராசாவும் காளியாத்தாளும் மிகவும் அந்நியோன்னியமாகப் பழகுவதைக் காணக் கந்தனுக்கு உள்ளூற மகிழ்ச்சியே. அவன் மனதில் எதிர் காலத்தைப் பற்றிய பல காட்சிகள் தோன்றும். அப்படி நடந்தால் ......அப்படியும் நடக்குமா? அவர்களுடைய அந்தஸ்து என்ன? நம்முடைய அந்தஸ்து என்ன? ஏன், எப்படியிருந்தாலும் ஒரே ஜாதிதானே? ஒரு க்ஷணம் மனதில் நம்பிக்கை தோன்றும். ஆனால் மறு க்ஷணம் அமாவாசை இருட்டில் மின்னும் மின்மினிபோல்



மானேஜர் (குமாஸ்தாவிடம்) :— ஏன் ஐயா, இப்போதெல்லாம் தபால்களைக் கவனமாய்ப் படித்துப் பார்க்கிறதில்லை போலிருக்கிறதே!

குமாஸ்தா :—ஓ! உங்களுக்கு வருகிற சொந்தத் தபால் ஒவ்வொன்றையும் நான் தவறாமல் படித்துப் பார்த்துக் கொண்டுதான் இருக்கிறேன்.


மறைந்துவிடும். நெடுநேரம்வரை தன் வேலையையும் விட்டு விட்டு அவர்கள் விளையாடுவதையே பார்த்துக் கொண்டிருப்பான்.

4

"இரு, இரு! நான் தூக்கி விடறேன்."

"ஹூம். நீ நல்லாத் தூக்கினியே. சரி தான், காருக்காப் படிச்சிக்கிட் டிருந்துப் புட்டு இந்த மாதிரி மொரட்டு வேலை யெல்லாம் ஒன்னாலே முடியாது. நானே தூக்கிக்கிறேன்."

"இல்லே, இல்லே! இதோ, நானே தூக்கியார்ந்து ஒங்க வீட்டிலே வைக்கிறேன், பாரு !"



"ஆமாம்; தூக்கியார்ந்து வைக்கிற ஆம்பிளையைப் பார்க்கலே. பாதி தூரங் கூடத் தூக்க முடியாது. பேச்சைப் பார்க்கலெ, பேச்சை!"

எந்த ஆண்பிள்ளைக்குத்தான் இந்த மாதிரிப் பேச்சைக் கேட்டு ரோசம் வராது? ராசாவுக்கும் இந்தச் சொற்கள் பொறுக்க முடியாமற் போனதில் ஆச்சரியமில்லை. ஆகவே அவன், "ஆம்பிள்ளை யில்லேயின்னு, சொல்லுறே? இதே பாரு, ஆத்தா......" என்று கூறிக் கொண்டே அலட்சியமாக அந்த நீர் நிரம்பிய பானையைத் தூக்கினான். அவன் பானையைத் தூக்கி ஒரு வீசு வீசவே அது பக்கத்திலிருந்த கைப்பிடிச் சுவரில் மோதி 'டணார்' என்று உடைந்து, அந்தப் பானையின் வாய் மட்டும் வளையமாக அவன் கையில் தங்கி விட்டது.

"அடேடே! நல்ல ஆம்பிள்ளை தான் நீ!" என்று கூறிக் கைகொட்டிச் சிரிக்க ஆரம்பித்து விட்டாள் காளி.

ராசாக் கவுண்டனுக்கு ஒரே வெட்கம். இருந்தாலும் சமாளித்துக் கொண்டு,

"ஐயையே! ஒடஞ்சில்ல போயிடிச்சி. ஒம்பானை நல்ல பானையில்லே!" என்று கூறிக் கொண்டே அந்த வளையத்தைச் சட்டென்று அவள் கழுத்தில் மாலை போலப் போட்டு விட்டான். அவளும் குப்பென்று சிரித்தாள்.

இதை யெல்லாம் தூரத்தி லிருந்து பார்த்து மகிழ்வான் கந்தன். எப்படி யாவது பெண் கவலை யில்லாமல் சௌக்கியமாக இருந்தால் சரி என்பதுதான்

அவன் கருத்து. தன்னுடைய கற்பனைக் காட்சிக்கு இம் மாதிரி சம்பவங்கள் ஓரளவு நம்பிக்கை யளிக்கும் சுபசகுனங்களாகக் கருதி மகிழ்வான் அவன்.



5

"ஆத்தா, நான் ஊருக்குப் போறேன். போயிட்டு வரவா?"

"ஊருக்கா? எந்த ஊருக்கு?"

"கோயம்புத்தூருக்கு. தெனம் பொள்ளாச்சிக்குப் போயிப் படிக்கிற படிப்பெல்லாம் தீர்ந்து போயிடிச்சி. இப்ப கோயம்புத்தூருக்குப் போய்ப் படிக்கப் போறேன்."

"அப்பமன்னு எப்பத் திரும்புவாயாம்?"

"லீவுக்குத்தான் வருவேன்."

"அப்போ என்னை ஞாபகத்துலே வெச்சுக்குவியா?"

காளியின் கண்கள் ராசாவின் முகத்தை ஏறிட்டு நோக்கின. ராசா சட்டென்று குனிந்து கொண்டான்.

"ஏன்? நான் உன்னை மறக்க முடியுமா? என்னைக்கூட அந்த மாதிரியா நெனச்சுக்கிட்டே? நீதான் என்னை ஒரு வேளை மறந்தாலும் மறந்திடுவே" என்று ராசா கூறி விட்டு, அவளுடைய உள்ளத்தைத் துருவிப் பார்ப்பவன்போல அவளையே பார்த்துக் கொண்டிருந்தான்.

"மறக்கறதா? ஒன்னையா மறக்கறது? ஊஹூம், ஒன்னை நான் எப்படி மறக்க முடியும்? காத்தாலே பொள்ளாச்சிக்குப் போனு சாயந்திரம் நீ எப்போ திரும்பி வருவேன்னு காத்துக் கெடக்கற நானு மறப்பேன்?" என்று கூறி சிரித்தனள் காளி.

"இல்லே, சும்மாக் கேட்டேன்" என்று கூறிக் கொண்டே அவள் கையைத் தன் கையில் எடுத்து வைத்துக் கொண்டு ஏதோ சொல்ல ஆரம்பித்தவன், கந்தன் வருவதைக் கண்டு சற்று விலகி நின்றான்.

"ராசா ஊருக்குப் போவுதாமில்லே?" என்றான் கந்தன்.

ராசா மௌனமாக 'ஆமாம்' என்பதாகத் தலையை அசைத்தான்.

"நீ ரொம்ப நாள் களிச்சுத்தான் திரும்புவியாமில்லே. கம்ப காளியாத்தா கண்ணாலத்துக்குக்கூட நீ வர மாட்டியா?" என்று கூறிவிட்டுக் கந்தன் அவன் வாயிலிருந்து வரும் மறு மொழியை வெகு ஆவலாக எதிர்பார்த்தான்.

மறை முகமாக ராசாவின் அபிப்பிராயத்தைத் தெரிந்து கொள்ளுவதற்காகவே கந்தன் இம்மாதிரி கேட்டான்.

கந்தன் போட்ட குண்டு மற்ற இருவரையும் தூக்கிப் போட்டுவிட்டது. காளி நாணித் தலை குனிந்தாள்.

கந்தன் பேச்சை விடாது தொடர்ந்தான்.

"வர ஆவணியிலே முடிச்சுப்புடலாமினு இருக்கிறேன். பெரிய ஐயாவும் பணம் குடுக்கிறேமின்னுங்க."

"பார்க்கலாம். முடிஞ்சா வாரேன்" என்று கூறிவிட்டுப் பரபரவென்று வீட்டினுள் சென்று விட்டான் ராசா. அவன் மனதில் ஆயிரம் தேள் கொட்டியது போன்ற உணர்ச்சி தோன்றியது. தனக்கே ஏகபோக உரிமையாக இருந்த வஸ்து தன்னை விட்டு நீங்குவதாகத் தோன்றியது அவனுக்கு. தகப்பனாரிடம் சொல்லித் தன் உரிமையை நிலைநாட்டிக் கொள்வோமென்றால் அதற்குரிய தைரியம் அவனுக்கு உண்டாகவில்லை. தகப்பனார் என்ன சொல்லுவாரோ என்னவோ என்ற பயம். தவிர ரயிலுக்கும் நேரமாகி விட்டது. ஆகவே வேப்பங்காயைத் தின்பவன் போலக் கசந்து கொண்டே ரயிலுக்குக் கிளம்பினான்.

6

கந்தன் கட்டிய மனக்கோட்டை மண்ணோடு மண்ணாகி விட்டது. என்ன இருக்

தாலும் இம்மாதிரியான ஏமாற்றத்தை அவன் எதிர்பார்க்கவே யில்லை. பெரிய பண்ணாடிதான் ஒருவேளை ஒத்துக்கொள்ள மறுக்கும். ஆனாலும் ஒரே மகன் பிடிவாதமாகச் சொல்லும்போது ஒத்துக்கொள்ளத்தான் செய்வார் என்ற நம்பிக்கை இருந்தது. வாஸ்தவம்தான். அவனுடைய அந்தஸ்துக்கு அது பெரிய இடர்தான் என்றாலும் ஒரே ஜாதிதானே? ஏன் செய்யக் கூடாது? ஆனால் ராசா நம்பிக்கைக் குரிய எவ்விதமான பதிலையும் கொடுக்காதது பற்றி அவனுக்கு மிகவும் வருத்தமே. இருந்தாலும் அவன் நம்பிக்கை இழக்கவில்லை. ஒருவேளை சங்கோசத்தினால் ராசா நேரில் ஒன்றும் சொல்லாமல் போயிருக்கலாம். கடித மூலமாகத் தன் தகப்பனுக்கு எழுதினாலும் எழுதலாமென்பது அவன் ஆசை. அவன் ஆசையும் வீண் போகவில்லை.

ராசா கடித மூலமாகத் தன் தகப்பனுக்கு எழுதினான். ஆனால் அதன் பலன் கந்தன் எதிர்பார்த்தபடி இருக்கவில்லை. "சும்மா இருந்த சங்கை ஊதிக் கெடுத்தான்" என்பதுபோல அது பெரிய பண்ணாடியை ஒரு கலக்குக் கலக்கிவிட்டது! அதன் பலன் விபரீதமாகி விட்டது. ஏது? பையன் மிஞ்சி விடுவான் போலிருக்கிறதே! அவனை எப்படியாவது வழிக்குக் கொண்டு வர வேண்டும் என்ற தீர்மானத்துக்கு வந்து விட்டார். காளியாத்தாளுக்குக் கண்ணாலம் செய்து வைத்து விடுவதே சிறந்த வழி யென்று தோன்றியது அவருக்கு. விரட்டு விரட்டென்று விரட்டிக் கடைசியில் ஆனி மாதத்திலேயே அவளுக்குக் கல்யாணம் செய்து விட்டார்.

காளியாத்தாளின் கல்யாணத்தில் கவுண்டருக்கு இருந்த சிரத்தையின் காரணம் ஊராருக்குத் தெரிந்திருந்தால் அவருக்கு இத்தனை புகழ்ச்சியுரை கிடைத்திருக்குமா வென்பது சந்தேகந்தான்.


காளியாத்தாளின் கணவனும் பூங்குளத்துக்கே வந்து விட்டதில் கவுண்டருக்குக் கொஞ்சம் அதிருப்திதான். இருந்தாலும் என்ன செய்வது! கந்தன் ஒரே பிடியாகப் பிடித்துத் தன் மாப்பிள்ளையையும் தன் கூடவே வைத்துக் கொண்டான்.

7

வருஷங்கள் பல ஓடி மறைந்தன. இப்பொழுது கந்தனும் இல்லை. காளியண்ணக் கவுண்டரும் இல்லை. ராசா வீட்டோடு இருக்கிறான். அவனுக்கு முன்னிருந்த சுறுசுறுப்பும் தெம்பும் எங்கோ ஓடிவிட்டன. அவன் உண்டு, அவன் பண்ணை யுண்டு; அவ்வளவுதான். அவனுக்கும் கல்யாணம் ஆகிவிட்டது. பக்கத்தூர்ப் பெரிய பண்ணாடியின் ஒரே பெண். நிறைய சொத்து சீதனத்துடன்தான் வந்திருந்தாள். நல்ல அழகிதான். ஆனாலும் இவைகளினால் எல்லாம் ராசாவின் மனம் திருப்தி யடையவே யில்லை.

காளியாத்தாளுக்கும் இரண்டு குழந்தைகள் பிறந்து விட்டன. முன்பு அவளைப் பார்த்தவர்கள் இப்பொழுது அவளைப் பார்த்தால் அடையாளமே தெரியாது. அவ்வளவு மாறி விட்டது அவளுடைய உருவம். தகப்பன் இறந்துவிட்ட துயரம் வேறு. கந்தன் இறந்துவிட்ட பிறகு அவள் கணவன் வேலை வெட்டி ஒன்றுமே செய்வதில்லை. கிடைத்ததைக் குடித்துத் தீர்ப்பதே அவன் வேலை. கொஞ்ச நஞ்ச மிருந்ததையும் குடித்துத் தீர்த்துவிட்டான். கடைசியாகக் காளியாத்தாளிட மிருந்த ஒன்றிரண்டு நகைகளின் மேலும் கை வைக்க ஆரம்பித்து விட்டான். காளியாத்தாளோ வயிற்றுப் பிழைப்புக்காக ஓயாமல் வேலை செய்து உடல் தேய்ந்து விட்டாள்.

நெடு நாளைக்குப் பின் ராசா அன்றுதான் அந்தத் தோட்டத்தின் பக்கம் சென்றான். அதே தோட்டம். அதே கிணறு. எல்லாம் அதேதான். ஆனால் அவன் மனம் மட்டும் மாறிவிட்டது. முன்னிருந்த உற்சாகமும்



எஜமான்:— ஏண்டா ராமா! உன்னை யார் ஜட்கா வண்டி அழைத்துக் கொண்டு வரச் சொன்னது? மாட்டு வண்டி யல்லவா கொண்டு வரச் சொன்னேன்?

ஜட்கா வண்டிக்காரன் (குறுக்கிட்டு):— பரவாயில்லை, ஏறுங்க! நம்ம ஜட்கா, மாட்டு வண்டி வேகந்தான் போகும்!

உள்ளக் களிப்பும் இப்பொழுது இல்லை. கிணற்றடியில் யாரோ தண்ணீர் இழுத்துக் கொண்டிருந்தார்கள். அருகில் சென்று பார்த்தான். அவனால் தன் கண்களையே நம்ப முடியவில்லை. யௌவனத்தின் தளதளப்பும், சௌந்தரியத்தின் மினுமினுப்பும் கலந்த தேகத்தோடு கூடிய காளியாத்தாளுக்கும் எலும்புக் கூடெடுத்து வற்றிய கண்களும், ஒட்டிய கன்னங்களோடும் கூடிய காளியாத்தாளுக்கும் எத்தனை வித்தியாசம்!

அவன் கண்களிலிருந்து அவனையும் அறியாமல் கண்ணீர் மளமள வென்று வழிந்தது.

“காளியாத்தா!” — அதற்குமேல் அவனால் ஒன்றும் பேச முடியவில்லை.

அவளும் ஒன்றும் பேசவில்லை. கண்களில் மட்டும் கண்ணீர் அருவி போல ஓடிற்று. சட்டென்று குடிசைக்குள் சென்று ஒரு சிறு முடிப்புடன் வந்து, அதை அவன் கையில் கொடுத்தாள். முடிப்புக்குள் ஒரு ஜதை வெள்ளிக் காப்புகளும், ஒரு ஜதை கொப்பும், கம்மலும் இருந்தன. ‘இதெல்லாம் என்ன?’ என்று கேட்பவன் போல் ராசா தலை நிமிர்ந்து அவள் முகத்தைப் பார்த்தான்.

“குடிக்கக் காசில்லேன்னு அவரு தொந்தரவு செய்யறாருங்க. புள்ளக்கிளுக்குன்னு இதைக் காப்பாத்தி வெச்சிருக்கேனுங்க. இதையும் வாயிலே போட்டுக்காமெ பாத்துக்க வேணும். நீங்களே இதைப் பத்திரமா வெச்சிருந்து குடுக்க” என்றாள் அவள்.

“ஏன், ரொம்பத் தொந்தரவு செய்கிறானா?” என்றான் ராசா.

“இதோ, பாருங்க!” என்று கூறி அவள் தன் முதுகில் குறுக்காகக் கிடந்த சேலையைச் சற்று விலக்கிக் காண்பித்தாள். முதுகெல்லாம் ஒரே தழும்பு. சமீபத்தில் கூட அடித்துத் துன்புறுத்தியிருக்க வேண்டுமென்பதற்குரிய அடையாளங்களாக இரண்டு மூன்று தழும்புகள் அவளுடைய முதுகில் காணப்பட்டன.

ராசா ஒரு நிமிஷம் தலையைக் குனிந்து கொண்டு யோசித்தான். மறு நிமிஷம் ஏதோ முடிவிற்கு வந்தவன் போலத் தலை நிமிர்ந்து கேட்டான். “ஏன்? இதைத் தடுக்க வழி இல்லையா?”

“வழியா? புருஷனைத் தடுக்க வழி ஏதுங்க?”



“என்ன தீக்ஷிதர்வாள்! எதுக்கு இப்படித் தீட்சை வளர்த்துக் கொண்டிருக்கிறீர்கள்?”
“மார்கழி மாசமோல்லியோ? பஜனைக்குப் போக வேண்டியிருக்கு! குளிருக்கு எவ்வளவு மப்ளர் வாங்கினாலும் ஆத்துக்காரி காப்பி வடிகட்ட எடுத்துக் கொண்டு விடுகிறாள்!”

“புருசனா? புருசனா இருந்தா என்னா? யாராயிருந்தா என்னா? அக்குரும்பு செஞ்சா பேசாமெ இருக்கறதா? பேசாமெ துரும்பு குடுத்துறது* தானே?”

ராசா இன்னதுதான் பேசுகிறோமென்பதை யறியாமல் மடமட வென்று பேசிக் கொண்டே போனான்.

‘துரும்பு கொடுத்து விடுவது’ என்ற சொற்கள் அவளைத் திடுக்கிட வைத்தன. புருஷனையே தெய்வமென்று போற்றி வரும் அவளுடைய ஹிருதயத்தில் இந்தச் சொற்கள் ஈட்டி கொண்டு தாக்குவன போன்று இருந்தன. அவளுடைய ஹிருதயத்தை அளந்து பார்ப்பவன்போல அவன் அவள் முகத்தையே சிறிது பார்த்துக் கொண்டிருந்துவிட்டுக் கூறினான்: “துரும்பு குடுக்கறதா? ரெண்டு புள்ளெ பெத்தப்புறம் துரும்பு குடுத்தா ஊர் உலகம் என்னா சொல்லும்? அதுதான் போவுதுன்னா புருசனைத் தொரத்திப்புட்டு நான் எங்கே போயி வாழறது?”

“ஏன்? நான் இல்லையா?” என்று கூறியவன் சட்டென்று தன் தவறை உணர்ந்து உதட்டைக் கடித்துக் கொண்டான். அவன் இதைக் கூறியதென்னமோ உயர்ந்த நோக்கத்தோடுதான். அவள்மேல் ஏற்பட்ட இரக்கத்தினால்தான் அவன் அவ்வாறு கூறியது. வேண்டுமென்பது அவன்

---

* ‘துரும்பு கொடுப்பது’ என்பது கவுண்டர்களுக்குள் விவாக ரத்து செய்து கொள்ளுவது என்று அர்த்தம்.

நோக்கமல்ல. இருந்தாலும் வார்த்தைகளென்னமோ வெளி வந்து விட்டன. அவனுடைய நோக்கம் உயர்ந்ததானாலும் சந்தர்ப்பம் அந்த நோக்கத்திற்கு விபரீத பலனளித்து விட்டது.

அவளுக்குத் தன்னை பூமி அப்படியே விழுங்கிவிடக் கூடாதா வென்று தோன்றியது. ராசா இவ்வளவு மோசமாக நடந்து கொள்ளுவா னென்பதை அவள் கனவிலும் நினைக்கவில்லை. சீ! என்ன உலகம்!

அவள் மறு கணம் அவ்விடத்தை விட்டு விறுவிறு வென்று போய் விட்டாள். வெகு நேரம் வரை ராசா அந்தக் கிணற்றடியிலேயே அசைவற்று நின்று விட்டான்.

8

காளியாத்தாளும் அவளுடைய கணவனும் குழந்தைகளும் மறு நாள் அந்தக் குடிசையைக் காலி செய்து விட்டுக் கணவனுடைய ஊரான புதுச் சத்திரத்திற்குப் போய்விட்டதாகக் கேள்விப்பட்ட போது அவனுக்குத் துளிக்கூட ஆச்சரிய மேற்படவில்லை.

மறு வாரம் மாரடைப்பினால் காளியாத்தாள் இறந்து விட்ட செய்தியைக் கேட்ட போது அவன் உள்ளத்தில் ஒருவிதமான வேதனை உண்டாயிற்று. தன்னுடைய சொற்களால் அவளுடைய பெண்மைக்குச் செய்த தீமைதான் அவளை மனமுடைந்து இறக்கச் செய்தது என்று அவன் மனம் குத்திக் காட்டிக் கொண்டே யிருந்தது. அவசர புத்தியினால் தான் தீங்கிழைத்து விட்டதை நினைத்து நினைத்து உருகினான்.

அதற்குப் பிறகுதான் அந்தக் கிணறு வெட்டப் பட்டது. பகீரதன் கங்கையைக் கொண்டு வரச் செய்த முயற்சி அந்தக் கிணற்றில் தண்ணீர் கொண்டு வரச் செய்த முயற்சிக்குச் சற்றும் ஈடாகா தென்றே கூற வேண்டும். அவ்வளவு சிரமப்பட்டுத் தோண்டப்பட்டது அந்தக் கிணறு. நல்ல வேளை, எல்லோரும் பயந்து கொண்டிருந்ததுபோல அதில் உப்புத் தண்ணீர் வரவில்லை; கற்கண்டை நிகர்த்த நல்ல தண்ணீர் ஊறிற்று.

அதற்கு யாரும் பெயர் வைக்கவில்லை. இருந்தாலும் ஜனங்கள் அதைக் 'காளிக் கிணறு' என்றே குறிப்பிட்டனர். "தகப்பனுக் கேத்த புள்ளே. அப்பனை மறக்காம அவரு பேரிலே தருமத்தைக் கட்டிவிட்ட மகராசன்!" என்றெல்லாம் ஊரார் புகழ்ந்தனர்.


ஆனால் அது யாருடைய ஞாபகார்த்தமாகக் கட்டப்பட்ட தென்பது அவர்களுக்கு எப்படித் தெரியும்? மற்றவர்களுக் கெல்லாம் அந்தக் கிணறு காளியண்ணக் கவுண்டர் கிணறாகத் தோன்றலாம். ஆனால் அவனுக்கு மட்டும் அது காளியாத்தாள் கிணறு தான் என்பதில் சந்தேகமே யில்லை.

கிட்டுவின் கேள்வி — 2.



கிட்டு:—அப்பா! போர்டு போட்டிருக்கே; இங்கே பஸ் நிற்குமா?

தகப்பனார்:—இது தெரியலையா, கிட்டு? இங்கே பஸ் நிற்காது; மனுஷாள்தான் எப்பவும் நின்று கொண்டிருப்பா!




பர்மாவுக்குத் திரும்புகிற பாதை

"ஜெயிக்கக்கூடாத" ஜப்பானியப்படைகள் எல்லாவிடங்களிலும் இப்போது தண்டனை அடைந்து வருகிறார்கள். அவர்கள் திரும்ப ஓடிக்கொண்டிருக்கிறார்கள்.

மணிப்பூர், பர்மா முனைகளில் 5 ஜப்பானிய டிவிஷன்கள் நாசம் செய்யப்பட்டன. ஐம்பதாயிரம் ஜப்பானியர் கொல்லப்பட்டனர். இதில் நமது ஆகாய விமானத் தாக்குதலுக்குப் பலியான ஆயிரக்கணக்கானவர்கள் கணக்கிடப்படவில்லை. பர்மாவில் வெகுகாலமாக தற்பாதுகாப்பிலிருந்த நமது சேனைகள் இப்பொழுது தாக்க ஆரம்பித்துவிட்டனர். சீக்கிரமாக ஜப்பானியரின் ஆதிக்கத்திலிருந்த பிரதேசங்களை ஒவ்வொன்றாக காலிசெய்து வருகின்றனர்.

தூரத்திலும் சமீபத்திலும் எல்லாப் போர் முனைகளிலும் ஜப்பானியர் அடுத்தடுத்து தோல்வியடைந்து வருகின்றனர். மைட்கீனா முதல் வங்காளக் குடாக்கடல் வரை எல்லா இடங்களிலும் நம்மவர்களிடம்தான் முதலில் ஏகுகின்றனர்.

இமாப்பூர்—கொஹிமா—பிஷன்பூர்—பாலேல்—டிட்டிமு
இவைதான் வெற்றிக்கு வழிகள்.



தேசிய போர் முனையின் பிரசுரம்

AAA 1310—A. TM



பிரயாணக் கதை 6





உள்ளே நுழைந்துவிட்டார்கள் ஆனால் உட்கார இடமே இல்லை



குழந்தைகளும் சாரளாவும் களைப்படைந்துவிட்டார்கள் ஆனால் என்ன செய்வது.

அவசியமான பொருள்களை அனுப்ப முதலாவது இடம் அளிக்க வேண்டும். ஆகையால்தான் இன்று பிரயாணம் செய்வது சங்கடமாக இருக்கிறது.

வீண் பிரயாணம் செய்யாதீர்கள்

இந்தக் குடும்பத்திற்கு என்ன நேர்ந்ததென்பதை அடுத்த வாரக் கதையில் காணுங்கள்.

ரமணியின் கடியாரம்.



கேசரி

ரமணி ரொம்பவும் கெட்டிக்காரப் பையன். ஐந்தாவது வகுப்பில் படித்துக்கொண்டிருந்தான். வகுப்பில் அவன்தான் முதல் பையன்.

அவன் வீட்டில் ஒரு கடியாரம் இருந்தது. அதை வாங்கிப் பதினைந்து வருஷங்களுக்கு மேலாகி விட்டது. ரமணி பிறந்து சில வருஷங்களுக்குள் அந்தக் கடியாரம் மணி அடிக்கும் வழக்கத்தை விட்டுவிட்டது. ஆனால் நேரத்தை மாத்திரம் ஒழுங்காகக் காட்டி வந்தது.

ரமணி தனது ஆறாவது வயது முதல் வீட்டிலுள்ளவர்களுக்கெல்லாம் மணி பார்த்துச் சொல்லும் வேலையைச் செய்து வந்தான். சமையல் செய்யும் அம்மாவுக்கும், ஆபீஸுக்குச் செல்லும் அப்பாவுக்கும், ராகுகாலத்தில் அக்கரை கொண்ட பாட்டிக்கும் அவன் ரொம்பவும் உதவியாய் இருந்தான். அரைமணிக்கொருதரம் மணி அடிக்கும் கடியாரமாய் இருந்தால் ரமணியை யாரும் அதிகமாய்த் தொந்தரவு செய்ய மாட்டார்களல்லவா?



கல்கத்தாவில் இருக்கும் அவனுடைய சீனு மாமா அடுத்த மாதம் லீவில் அவர்கள் வீட்டுக்கு வரப் போவதாக எழுதியிருந்தார். ரமணிக்கு ஏதாவது சாமான்கள் வேண்டுமானால் அதைத் தெரியப்படுத்தினால் வாங்கி வருவதாகவும் எழுதியிருந்தார். அதற்குப் பதிலாக ரமணி எழுதின கடிதம் இதுதான்:

அன்புள்ள மாமாவுக்கு,

உங்கள் கடிதத்தைப் பார்த்து ரொம்பவும் சந்தோஷமடைந்தேன். எனக்கு விளையாட்டுச் சாமான்கள் எதுவும் வேண்டாம். வீட்டில் உள்ள கடியாரம் மணியடிப்பதில்லையாதலால், எல்லோரும் மணி பார்க்கும்படி அடிக்கடி என்னைக் கூடத்துக்கு விரட்டுகிறார்கள். இதனால் என்னால் ஸ்கூல் பாடங்களைப் படிக்க முடிவதில்லை. அவசியம் கல்கத்



தாவிலிருந்து புதிய மணி அடிக்கும் கடியாரம் ஒன்று வாங்கி வாருங்கள்.

இப்படிக்கு,
ரமணி.

கடிதத்தைக் கண்டவுடன் மாமா கடைக்குப் போய்ப் புது கடியாரம் ஒன்றை நிரம்ப விலை கொடுத்து வாங்கினார்.

மாமா கொண்டுவந்த கடியாரத்தைச் சுவரில் பழைய கடியாரத்துக்குப் பக்கத்தில் மாட்டினார்கள். இரண்டும் ஒரே நேரம் காட்டும். ஆனால் புதிய கடியாரம்தான் மணியடிக்கும். இப்பொழுது ரமணியை யாரும் தொந்தரவு செய்வதில்லை. மாமாவும் ஒரு மாதம் சந்தோஷமாய் இருந்துவிட்டுப் பிறகு கல்கத்தாவுக்குப் போய் விட்டார்.

புதுக் கடியாரம் ரொம்ப நன்றாய் டிக், டிக் என்று சத்தமிட்டுக் கொண்டும், டிங், டாங் என்று மணி அடித்துக் கொண்டும் ஓடிக் கொண்டிருந்தது.

முன் அறையில் பேபர் வாசித்துக் கொண்டிருந்த ரமணியின் அப்பா கடியாரம் பத்து அடித்ததை எண்ணி விட்டு அவசர அவசரமாய் எழுந்தார். "ஆச்சா சமையல்? ஆபீஸுக்கு நேரமாச்சே" என்று கேட்டுக்கொண்டே வந்தவர் கடியாரத்தைப் பார்த்து அப்படியே நின்று விட்டார். கடியாரம் மணி ஒன்பதுதான் என்பதைக் காட்டியது.

அன்று முதல் புதுக் கடியாரம் தாறுமாறாய் அடிக்க ஆரம்பித்தது. ஒரு மணிக்குப் பன்னிரண்டும், அரை அடிப்பதற்கு ஆறுமாகப் பல விதமாக அடித்தது. "யுத்த காலத்தில் செய்த கடியாரம் இப்படித்தான்" என்று சொல்லுவதுபோல் இருந்தது அதன் நடத்தை. ஒரு வாரம் ஆகி விட்டது.

அதன் உபத்திரவம் சகிக்க முடிய வில்லை. ஒரு நாள் தகப்பனார் ரமணியைக் கூப்பிட்டு, "ரமணி! இந்தக் கடியாரத்தை ரிபேர் செய்ய வேண்டும். போய் ரிபேர் செய்கிறவனைக் கூட்டிக் கொண்டு வா!" என்று அனுப்பினார். ரிபேர் செய்கிறவன் ஐந்தாறு தடவை வந்து ரிபேர் செய்தான். அப்படியும் கடியாரம் சரியான மணி அடிக்கவில்லை. பழைய கடியாரம் இருந்தபோது அடிக்கடி ரமணி கூடத்துக்கு வந்து மணி பார்த்துச்



சொல்லுவதுடன் நின்றது. இப்பொழுது புதுக் கடியாரம் வந்ததில், அடிக்கடி அவன் கடைத் தெருவுக்குப் போய் ரிபேர் செய்கிறவனை அழைத்து வர வேண்டியிருக்கிறது! இதை நினைத்துப் பார்த்ததும் ஏன் மாமாவுக்குக் கடிதம் எழுதினோம் என்று ரமணி வருத்தப்பட்டான்.

தகப்பனார், "டேய் ரமணி! உன் கடியாரத்தின் அழகைப் பார்த்தாயா? அதைக் கொண்டு போய் ரயில் தண்டவாளத்தில் வைத்து விட்டுவா! நம் பழைய கடியாரமே எவ்வளவோ தேவலை. அதன் பாட்டிற்குச் சரியாக மணி காண்பிக்கிறது" என்று சொல்லிவிட்டுப் புதுக் கடியாரத்தை நிறுத்தி விட்டுப் பிறகு அதை ஆணியினின்றும் எடுத்து எங்கேயோ மறைவாக வைத்து விட்டார்.

பழையபடி பழைய கடியாரமே மிகவும் அமைதியாக இப்பொழுதும் ஓடிக்கொண்டிருக்கிறது. கூடத்திற்கு ஓடிப்போய் மணி பார்த்துச் சொல்லுவதற்கு ரமணி இப்பொழுதெல்லாம் சோம்பல் படுவதே இல்லை.



குழந்தைகளே, மேலே நாலு பேர்களின் நிழல் படங்களைப் பார்க்கிறீர்களல்லவா? அப் படங்களிலிருந்து ஒவ்வொருவரும் என்னென்ன காரியம் செய்கிறார்களென்று ஊகிக்க முடியுமா? உங்கள் ஊகம் சரியா என்று அடுத்த இதழில் பார்க்கவும்.

பாரதியார் ஞாபகார்த்த நிதி

சென்ற இதழில் "பத்து ரூபாய்க்கு உட்பட்ட நன்கொடை" என்று குறிப்பிட்டிருந்த ரூ. 135—13—0க்கு விவரம்:

ரூ. 6—8—0: 'தீந்தமிழ்த் தலைவி' வாசகர்கள், கோயமுத்தூர்; ஜனாப் ஏ. எஸ். முகம்மது இஸ்மாயில், கடயநல்லூர்; ரூ. 6—2—0: அறிவாலய அங்கத்தினர்கள் (தலைவர் மூலம்); ரூ. 5—5—0: ஸ்ரீ ஏ. எம். ராமலிங்கம், பண்ருட்டி; ரூ. 5—4—0: பண்டிட் டி. ராமானுஜம், வித்வான், மதுரை.

ரூ. 5—0—0: ஸ்ரீமான்கள் ராய்பகதூர் டி. எஸ். திருமூர்த்தி, நுங்கம்பாக்கம்; ராமமூர்த்தி, பங்களூர் ஸிடி; எம். ஆறுமுகம், கந்தபோளா, ஸிலோன்; பி. கே. சுந்தரராஜன், திருப்பத்தூர்; எஸ். எஸ். ஹைஸ்கூல் மாணவர்கள் சங்கம், தேனி; கே. வி. ராமலக்ஷ்மி அம்மாள் பாலகிருஷ்ணாபுரம், திண்டுக்கல்; வி. டி. கிருஷ்ணமூர்த்தி, விசுவேசுவரபுரம், பங்களூர்; ஏ. சுப்பிரமணியன், பழனி; டி. பி. என். சுப்பிரமணிய செட்டியார், சித்தோடு—ஈரோடு வழி; பி. ஆர். அருணாசலம் & ஆர். எம். முத்து, கண்ணாட்டி எஸ்டேட், கோட்டகிரி; எம். ஆர். துரைசாமி, ("கல்கி" ஏஜண்டு என். வரதராஜன் மூலம்) சேலம்; அ. ஜானகி தேவி, தல்லாகுளம், மதுரை.

ரூ. 3—12—0: சிவகாசி விக்டோரியா ஹைஸ்கூல் 4-வது பாரம் மாணவர்கள், ரூ. 3—8—0: ஸ்ரீ. எல். எஸ். ஆசீர்வாதம் ஐயர், சென்னை; ரூ. 3—0—0: ஸ்ரீமான்கள் எஸ். என். ஆறுமுகம், சத்யமங்கலம்; எம். எஸ். ராமஸ்வாமி, ஹெட் கிளார்க், எஸ். இ. ஏ. கம்மேண்ட்; ரூ. 2—8—0: ஸ்ரீ ந. இராமசாமி யாதவர், செம்பாம்பட்டி; ரூ. 2—5—0: புகழேந்திக் கழகம், பொன்விளைந்த களத்தூர்.

ரூ. 2—0—0: ஸ்ரீமான்கள் வி. பெருமாள் சாமி, வண்ணூர் பொன்னை; பி. ஆர். சிவனடியான், மேலை நாரி; டி. என். கணபதி ராவ், கர்க்கி; எஸ். சுந்தரம், விஜயபுரம், திருவாரூர்; கே. வெங்கடசாமி பிள்ளை, குருமாந்தூர்; எஸ். சுப்பாராவ், குருமாந்தூர்; எஸ். ராமகிருஷ்ணன், வத்தலக்குண்டு; எஸ். குருசாமி, ஒரத்தநாடு; பி. ராதாகிருஷ்ணன், கச்சிராயப்பாளையம்; ரூ. 1—1—0: ஸ்ரீ. கே. ஷண்முக சுந்தரம், பொள்ளாச்சி.

ரூ. 1—0—0: ஸ்ரீமான்கள் ஏ. ஆர். அருணாசலம், லக்ஷ்மீபுரம், கானாடுகாத்தான்; எம். எஸ். ராமநாதன், பழனி; டபிள்யூ. ஜே. ஸ்ரீநிவாசன், பாபநாசம்; எஸ். வி. கிருஷ்ணமூர்த்தி, பூனா; ஆர். கோவிந்தசாமி உடையார், முதையனூர்; டி. என். ராமமூர்த்தி, மதுரை; எஸ். எஸ். ராமானுஜம், மானாமதுரை; கே. எஸ். வெங்கிடராஜா, ராஜபாளையம்; பி. சுப்பராயன், பில்லூர்.

சென்ற இதழில் அன்பர்கள் மூலம் வந்த நன்கொடைகள் என்று குறிப்பிட்டிருந்த ரூ. 887—15—0க்கு விவரம்:

நாங்குநேரி, வி. ஜெகந்நாத அய்யங்கார் மூலம்:

ரூ. 10—0—0: ஸ்ரீமான் முத்துராம சுந்தரமய்யர். ரூ. 5—0—0: ஸ்ரீமான்கள் டாக்டர் எஸ். கிருஷ்ண சர்மா, என். எஸ். சடகோபய்யங்கார், வெற்றி. என். பழனியா பிள்ளை, டி. சங்கரலிங்கம் பிள்ளை, ஒரு தமிழன்பர்; ரூ. 3—0—0: ஸ்ரீமான்கள் சி. முருகேச பிள்ளை, என். வெங்கிடராம நாயுடு, கே. ஜெகன்னாதய்யங்கார். ரூ. 2—0—0: ஸ்ரீமான்கள் வரதாசாரியார், ஆர். வேலாயுதம் பிள்ளை, ஆர். கிருஷ்ணய்யங்கார், விஸ்வநாத கடியார், ராமய்யர், எம். சங்கரலிங்கம் பிள்ளை, மு. ஆர். கிருஷ்ணய்யர், நாகரத்தினமய்யர், என். கே. நம்பி அய்யங்கார், ரூ. 1—0—0: ஸ்ரீமான்கள் எஸ். தெய்வநாயகமய்யங்கார், ஏ. சடகோபய்யங்கார், பி. ஏ. ஸ்ரீனிவாஸய்யங்கார், கே. ஸ்ரீனிவாஸய்யங்கார், வி. கிருஷ்ணய்யங்கார், டி. சீனிவாசய்யங்கார், வி. எஸ். பிச்சுமணி ஐயர், ஏ. திருவேங்கடய்யங்கார், வைகுந்தம் பிள்ளையும்—சி. சுப்பையா பிள்ளையும், டி. இ. சுப்பிரமணிய ஐயர், சி. முத்துகிருஷ்ண பிள்ளை, என். சி. சிவசுப்பிரமணிய பிள்ளை, சு. ஆறுமுகம் பிள்ளை, து. நல்லகண்ணு தேவர், ஏ. வி. திருவேங்கடத்தய்யங்கார், எம். ஆவுடையப்பன், வி. வெற்றிவேல்நாடான், சொ. சுந்தரசாமியா பிள்ளை, வ. ரு. சங்கரலிங்க மூப்பனார், இ. ராமய்யா நாடார், என். ஏ. எஸ். ஆழ்வாரய்யங்கார், டி. ஸ்ரீனிவாஸன், எம். திருவேங்கடத் தய்யங்கார், ஆர். கைலாசம் பிள்ளை, கே. நாராயண பிள்ளை, வி. எஸ். ராமய்யங்கார், வி. பார்த்தசாரதி, சுந்தரராஜ ஐயங்கார், பாலசுப்ரமணிய பிள்ளை, ஏ. பி. சிவபிரசாத், பி. ஒ. சுப்பிரமணியம், ஆர். வானமாமலை ஐயங்கார், என். ஏ. சீனிவாஸய்யங்கார், சிவதாணுப் பிள்ளை, ஆர். ராமய்யா அய்யர், ஏ. கிருஷ்ணய்யர், ஜி. கோபாலசாமி நாயுடு, என். வி. தோதாத்திரி ராமானுஜாசாரியார், ஏ. வி. சங்கர நாராயணய்யர், போர்டு எலிமெண்டரி ஸ்கூல், மஹம்பூப் பிஜிலி சாஹப், ஏ. வி. ஐயங்கார், உ. சுப்பய்யா தேவர், எஸ். ரெகுநாத ஐயங்கார், கே. நாராயணசிங், எஸ். ராமய்யா பிள்ளை, டி. வெங்கிடாசலம்நாடார், இ. ஏ. எஸ். பீவான், பி. முத்துகிருஷ்ண நாயுடு, பி. எஸ். சுப்பிரமணிய பிள்ளை, ஆறுமுகத் தம்மாள் சுப்ரமணியம், எஸ். பெருமாள்நாடான், மு. பிரமநாயகம் பிள்ளை, எஸ். சோமயாஜி, டி. என். சுப்பய்யா பிள்ளை, வி. வாழவந்தான், டெபுடி இன்ஸ்பெக்டர் ஆபீஸ், எம். திருமலை ஐயங்கார், வி. ஆர். பாஷ்யம், பண்டிட் கே. ராமய்யர், எஸ். ரெங்கநாதன், எஸ். சித்திரை புத்ரதேவர், கோ. சேஷய்யங்கார், ரூ. 2—8—0: ஒரு ரூபாய்க் குட்பட்ட நன்கொடை.

ஆக ரூ. 127—8—0

ஜப்பல்பூர், ஆர்ட்னன்ஸ் பாக்டரி, ஸ்ரீ பி. ஜயராம் மூலம்: ரூ. 115—8—0

கராச்சி, தென் இந்தியர் சங்கம், கே. லக்ஷ்மணன் அவர்கள் மூலம்:

ரூ. 16—0—0: ஸ்ரீ வி. பஞ்சாபகேசய்யர், தென்னிந்தியர் சங்கம்; ரூ. 5—0—0: ஸ்ரீமான்கள் எல். ஏ. கே. வர்மா, ஜி. லெக்ஷ்மணன்; ரூ. 3—0—0: ஸ்ரீ ஆர். டி. சர்மா; ரூ. 2—0—0: ஸ்ரீமான்கள் கிருஷ்ணராவ், கோ. பத்மநாபன், பி. எஸ். நாராயண ஐயர், ஆர். எஸ். அய்யங்கார்; ரூ. 1—0—0: ஸ்ரீமான்கள் எம். ஜி. ஸ்வாமி, ஆர். தோத்தாத்திரி, எஸ். ராமசுப்பிரமணியன், டி. ஆர். பரமேஸ்வரன்,

டி. எஸ். ராமசுப்பிரமணியன், வி. ஆர். வெங்கடராமன், வி. எம். வாசுதேவன், டி. சுப்பிரமணியம், கே. ராஜகோபாலன், கே. பாலசுப்பிரமணியம், வி. விஸ்வநாத அய்யர், ஜி. பஞ்சநாராயண அய்யர், வி. முத்துஸ்வாமி, வி. கணேசன், ரு. வெ. சுப்பிரமணியன், கே. ராமச்சந்திரன், எஸ். நாராயணன், எஸ். ராமச்சந்திரன், ஏ. ஹரிஹரன், ஆர். சுப்பிரமணியன், எம். ஆர். தேவதாஸ், எஸ். ராம், என். எஸ். கோபாலன், பி. கே. எஸ். அய்யர், வி. எச். வி. பதி, லெஷ்மிநாராயணன், எல். என். கைலாஸ், டி. பி. ஜே. மணி, டி. சிதம்பரம், எஸ். நல்லதம்பி, ஏ. ராமநாதன், ஆர். ஏ. நாராயண அய்யர், எஸ். பரமேஸ்வரன், டி. வி. ரெங்காச்சாரி. எஸ். எம். முத்து. வி. வைத்தியநாதன், ஜே. ஜே. நாயகம், ஆர். வெங்கிட்டராமன், வைத்தியநாதன், வி. கிருஷ்ணன், ஆர். டி. ராஜன், ஜி. ஆர். பாலன், ஏ. சதாசிவம், டி. என். மகாதேவன், சங்கரகிருஷ்ணய்யர், ஒரு தமிழன்பர், எஸ். நடராஜன்; ரூ. 4-8-0: ஒரு ரூபாய்க்குட்பட்ட நன்கொடை. ஆக. ரூ. 92—8—0

கொழும்பு. செட்டிநாடு கார்ப்பொரேஷன் லிமிடெட். எஸ். பி. ஷண்முகம் மூலம்:

ரூ. 5—0—0: ஸ்ரீமான்கள் என். வி. சவ்வரமய்யர், வி. கதிரேசன் செட்டியார், ரூ. 3—0—0: ஸ்ரீமான்கள் ஒ. எம். ராமலிங்கம் பிள்ளை, எஸ். சுவாமிநாத பிள்ளை, ஏ. மீனாக்ஷிசுந்தரமய்யர், ஆர். நாகராஜ பிள்ளை, எம். என். கணபதியா பிள்ளை, எஸ். பி. ஷண்முகம், எஸ். பி. சுப்பையா பிள்ளை, எஸ். த. துரைராஜ் பிள்ளை, ஏ. ஆர். ரெங்கநாதன், பி. ஆர். கருப்பையா செட்டியார், டி. குப்புசாமி ராவுத்து, எம். நாராயணசாமி முதலியார், என். ராமசாமி பிள்ளை, ரூ. 2—0—0: ஸ்ரீமான்கள் எம். மங்களேஸ்வரன் பிள்ளை, எஸ். ஷண்முக சுந்தரம் முதலியார், ஆர். எம். திருப்பதி செட்டியார், எம். மார்ஸலின் கோம்ஸ், டி. ஏ. எஸ். மணி அய்யர், சுப. அருணாசலம், ஆர். முருகேசன் பிள்ளை, எஸ். வி. சுப்பிரமணியன் செட்டியார்: ரூ. 1—0—0: ஸ்ரீமான்கள் என். கருணைவேல், பி. எஸ். சிவராமய்யர், எம். கருப்பையா பிள்ளை, எஸ். ஷண்முக முதலியார், டி. மரியதாஸ், எஸ். சுவாமிநாதன், சு. ராமலிங்கம் பிள்ளை, எஸ். பிச்சை செட்டியார், எஸ். கணபதி, ஸ்ரீமதி எ. டி. செல்வா.

ஆக ரூ. 75—0—0

ஸ்ரீ வைகுண்டம். கலைத்தொண்டர் கழகம்; காரியதரிசி. ஸ்ரீ ச. வேலாயுதம் மூலம்:

ரூ. 32—0—0: காரனேஷன் ஹைஸ்கூல் மாணவரும், ஆசிரியரும். ரூ. 3—0—0: ஸ்ரீமான் டாக்டர் வெங்கட சுப்பிரமணியம். ரூ. 1—0—0: ஸ்ரீமான்கள் எஸ். சுப்பிரமணிய பிள்ளை, ஏ. சடகோப அய்யங்கார், ஆர். சீனிவாச அய்யங்கார், பி. ரெங்காச்சாரி, கே. ஏ. கணபதி, வி. எஸ். ராம அய்யங்கார், ஆர். எஸ். சுப்பிரமணிய பிள்ளை, எம். என். ஆனந்தம் பிள்ளை, எஸ். பி. திருமலையப்ப முதலியார், எஸ். சுப்பிரமணிய பிள்ளை, ரெங்கவிலாஸ் நரசிம்ம ஐயங்கார், எஸ். ராஜரங்கம் ஐயர், எம். சின்னதம்பித் தேவர், டி. எம். குமார குருபரன் பிள்ளை, குப்புசாமித் தேவர், வானுமாமலை பிள்ளை, கே. எஸ். வீரராகவ ஐயர், எஸ். சங்கரராம ஐயர், ச. வேலாயுதம், பூ. சிவசுப்பிரமணியம், ரூ. 1-8-0: ஒரு ரூபாய்க்குட்பட்ட நன்கொடை. ஆக ரூ. 56—8—0

திருநெல்வேலி. கல்வி ஏஜன்ஸி. ஸ்ரீ எஸ். கோபாலகிருஷ்ணன் மூலம்:

ரூ. 11—0—0: ஸ்ரீ எல். எஸ். சுந்தரம் முதலியார்; ரூ. 5—0—0: ஸ்ரீமான்கள் என். சங்கர நாராயணன், மகாதேவ அய்யர், எஸ். ஆர். சுப்பிரமணியம் பிள்ளை; ரூ. 4—8—0: கிருஷ்ணா அசோசியேஷன்; ரூ. 3—0—0: ஸ்ரீ பி. பரமசிவம்; ரூ. 2—0—0: ஸ்ரீமான்கள் ஸ்ரீ வி. பி. என். வெயில்முழுத்து, அ. ரங்கசாமி அய்யர்; ரூ. 1—0—0: ஸ்ரீமான்கள் ஆர். முத்துகிருஷ்ணன், எம். எஸ். சுந்தரம், சண்முக மூப்பனார், டி. எஸ். மணி, என். நாராயணன், நி. கௌரி, மாடசாமிப் பிள்ளை, பி. ஆர். சுப்பிரமணியம், கே. எஸ். குந்தரலிங்கம், கே. பழனி முதலியார், என். எஸ். ஆறுமுக முதலியார், எம். ஆறுமுக முதலியார், ஒரு அனுதாபி.

ஆக ரூ. 51—8—0

ஸ்ரீ எஸ். பாலசுப்பிரமணியன், சூபர்வைஸர் (P.W.D.) மண்டபம் காம்ப் மூலம்:

ரூ. 5—0—0: ஸ்ரீமான்கள் ஆர். தில்லைநாயகம், எஸ். பாலசுப்பிரமணியம், ஏ. இ. சாந்தப்பன், இ. பி. ஜோஸ், சி. கிருஷ்ணசாமி வி. ராமநாதன்; ரூ. 3—0—0: ஸ்ரீமான்கள் எம். எஸ். தங்கசாமி, எம். பரமசாமி; ரூ. 2—0—0: ஸ்ரீமான்கள் எம். வி. பால்சாமி. எச். சீனிவாசன்; ரூ. 1—0—0: ஸ்ரீமான்கள் ஏ. நாகராஜன், எஸ். வைத்தியநாதன், ரா. காசி சுப்பிரமணியன், சி. ராஜா ஐயர், எஸ். அம்புரோஸ், எம். வி. மாதவன், வி. கண்ணுசாமி, டி. ஏ. எல். சி. குருசாமி நாடார், பி. துரைசாமி பிள்ளை, ஆர். நாராயணன், ஆர். எஸ். நாராயணன்.

ஆக ரூ. 51—0—0

சிலோன், கேகாலை, ஸ்ரீ டி. ஏ. கண்ணுசாமி அவர்கள் மூலம்:

ரூ. 5—0—0: ஸ்ரீமான்கள் தி. ஆ. கண்ணுச்சாமி, அ. ப. த. நல்லதம்பி கங்காணி, மனேஜர் மணி ஸ்டோர்ஸ், ரூ. 2—0—0: ஸ்ரீமான்கள் அ. சிவ. பெரியய்யா அம்பலம், மு. முத்துச்சாமி, சி. சுப்பையாகோனார், சுப. பெரி. சாமியய்யா. ரூ. 1—0—0: ஸ்ரீமான்கள் பெ. அழகப்பகோனார், பழ. குமர. சுப்பிரமணியஞ் செட்டியார், சா. ராமையய்யா, க. சி. சதாசிவம், மா. பாலகுருசாமி, க. முத்துக்கருப்ப பண்டாரம், ஜெ. வீரபண்டார, எம். சரவணமுத்து பிள்ளை, த. அ. பு. தல்லியப்ப செட்டியார், ஆ. முருகேசு, வே. சி. பரமு பிள்ளை, நா. பா. கார்மேகம், அழ. மலைச்சாமி கோனார், ரா.ம.மெ. கண்ணுசாமி அம்பலம், செ. நா. கருப்பையா, ராம. சி. நடராஜன், அ. வ. சிவகுரு, ராம. அழகப்பன், ரூ. 1—8—0: ஒரு ரூபாய்க்கு உட்பட்ட நன்கொடை,

ஆக ரூ. 42—8—0

இராமச்சந்திரபுரம். ஸ்ரீ ஏ. அண்ணாமலை மூலம்:

ரூ. 5—0—0: ஸ்ரீமான்கள் மு. வீ. அ. அண்ணாமலை செட்டியார், வ. சு. சு. சுப்பிரமணியன் செட்டியார், சொ. நீ. சொக்கலிங்கஞ் செட்டியார், சித. மு. சிதம்பரஞ் செட்டியார்; ரூ. 3—0—0: ஸ்ரீ கி. தங்கவேல் ஆசாரி; ரூ. 1—0—0: ஸ்ரீமான்கள் மு. முருகப்பன், சித. சுப்பிரமணியன், முரு. சாத்தப்பன், ராம. சாத்தப்பன், மு. பெரி. அ. அண்ணாமலை செட்டியார், அ சபாபதி ஆசாரி, ஆர். கிம். எஸ். சுப்பையா, எம். கே. சுப்பையா, நா. ஏகப்பன், அன. சுப. இராமசாமி, மு. அருணாசலம் செட்டியார், அ. அ. அண்ணாமலை

ரூ. 1—12—0: ஒரு ரூபாய்க்குட்பட்ட நன்கொடை. ஆக ரூ. 36—12—0

சிவஞானபுரம், பாரதி அபிமானிகள், ஆசிரியர் ஸ்ரீ வி. லக்ஷ்மணன் அவர்கள் மூலம்:

ரூ. 2—0—0: ஸ்ரீமான்கள் பி. சா. வீரபத்திர பிள்ளை, மு. ரா. ராமசாமி செட்டியார், பி. செ. பாப்பு செட்டியார்; ரூ. 1—4—0: ஸ்ரீ பெ. ராமசாமி செட்டியார்; ரூ. 1—0—0: ஸ்ரீமான்கள் மு. காமு செட்டியார், நா. சிவகாமு செட்டியார், கா. வை. அருணாசல செட்டியார் கா. சந்திரசேகரன், கா. ராமசாமி, சிவ. காமாட்சி, ஆர். சக்கரைத் தேவர், அ. பழனிமுத்துப் பிள்ளை, எஸ். எஸ். முத்துக்காட்சி, பொன்மயபுரம் கர்ணம் சிவசுப்ரமணிய பிள்ளை, சக்கம்மாள்புரம் எஸ். சுப்பா செட்டியார், எஸ். பாப்பு செட்டியார், ஆர். ராமசாமி செட்டியார், எம். சோமசுந்தரம், நமச்சிவாயபுரம் எஸ். எஸ். பரமசிவன் பிள்ளை, எஸ். ஸ்ரீனிவாசன்; ரூ. 9—12—0: ஒரு ரூபாய்க்குட்பட்ட நன்கொடை.

ஆக ரூ. 33—0—0

கல்கத்தா, சார்ஜெண்ட் டி. ஆர். விஸ்வநாதன் மூலம்:

ரூ. 5—0—0: ஸ்ரீ எப்-டு போஸ்; ரூ. 2-12-6: ஸ்ரீ ஆர். சுப்பிரமணியன்; ரூ. 2—12—0: ஸ்ரீ எம். வெங்கடராமன்; ரூ. 2—2—0: ஸ்ரீ எம். சுப்பிரமணியன்; ரூ. 1—8—0: ஸ்ரீ வி. ஆர். சந்த்; ரூ. 1—6—0: ஸ்ரீ அருள்நாதன்; ரூ. 1—5—6: ஸ்ரீ இ. வி. ஆர். சாஸ்திரி; ரூ. 1—0—0: ஸ்ரீமான்கள் டி. ஆர். விஸ்வநாதன், விஸ்வநாத், கிருஷ்ணமூர்த்தி, கல்யாணசுந்தரம், பாலகிருஷ்ணன், இ. ஆர். சீனிவாசன், டி. கே. பிள்ளை, கொரன், அலக்ஸாந்தர், பயிலி, பி. எஸ். பாலிகா, பி. ஏ. தேஷ்பாண்டே. ஆக ரூ. 30—0—0

மதுரை, கல்டி ஏஜண்ட், ஸ்ரீ ஏ. ஷண்முகசுந்தரம் பிள்ளை மூலம்:

ரூ. 5—0—0: ஸ்ரீமான்கள் ஜி. பி. சேகர், என். சுப்பையா பிள்ளை, பி. ஜெ. சுப்பராயலு நாயுடு, ரூ. 2—0—0: ஸ்ரீமான் டாக்டர் திருநாவுக்கரசு பிள்ளை, ரூ. 1—0—0: ஸ்ரீமான்கள் ஏ. பாலசுப்ரமணிய அய்யர், பி. எஸ். ராமசுப்ரமணிய அய்யர், நடேசய்யர், பெ. ப. வெங்கட சுப்ரமணிய அய்யர், பி. முத்துகருப்பா பிள்ளை. ஆக ரூ. 22—0—0

பெங்களூர், ஸ்ரீ எம். முனுசாமி செட்டியார் அவர்கள் மூலம்:

ரூ. 3—0—0: ஸ்ரீ டி. வெங்கிடேசலு நாயுடு ரூ. 2—0—0: ஸ்ரீமான்கள் சி. என். ராமாஞ்சலு நாயுடு, ஏ. பொன்னுரங்க முதலியார், எம். வி. வேணுகோபால் செட்டியார்; ரூ. 1—0—0: ஸ்ரீமான்கள் எம். முனுசாமி செட்டியார், ஆர். தன்ராஜ் நாயுடு, ராஜா, வந்தேமாதரம். என்.ஏ. சுந்தரம், வி. வெங்கிடேசலு நாயுடு, சி. பாப்பைய நாயுடு, ஆர். ராமச்சந்திரன், பி. பொன்னுசாமி, டி. செஞ்சைய செட்டி, கே. வி. மாசிலாமணி பிள்ளை.

ஆக ரூ. 20—0—0

ஸெகந்தராபாத், கல்டி ஏஜண்டு, ஸ்ரீ வி. ஆர். ராகவன் மூலம்:

ரூ. 15—0—0: ரஸிக ரஞ்சனி சபா; ரூ. 1—0—0: ஸ்ரீமான்கள் வி. வி. நாராயணன், ஏ. பி. வாசுதேவ அய்யர், குமாரஸ்வாமி அய்யர், கமலநாதன், ஆர். ஏ. நரசிம்மன். ஆக ரூ. 20—0—0

வந்தவாசி, கல்டி ஏஜண்டு, ஸ்ரீ. ஏ. ராமலிங்கம் மூலம்:

ரூ. 10—0—0: ஸ்ரீ வி. ஏ. நாராயண செட்டியார்; ரூ. 5—0—0: ஸ்ரீ பி. வெங்கடராம செட்டியார்; ரூ. 3—0—0: ஸ்ரீ புண்ணியகோடி முதலியார்; ரூ. 1—0—0: ஸ்ரீமான்கள் எஸ். வைத்யநாதன், கே. வேதாசல நாயகர்.

ஆக ரூ. 20—0—0

மல்லசமுத்திரம், மஹாத்மா காந்தி தேசிய வாலிபர் சங்கக் காரியதரிசி மூலம்:

ரூ. 2—0—0: ஸ்ரீ எஸ். பழனியப்ப முதலியார்; ரூ. 1—0—0: ஸ்ரீமான்கள் எம். ஏ. வெங்கடாசலம், எஸ். பெரியண்ணன், பி. சந்தானம், கே. வடிவேல், ஏ. பெருமாள் முதலி, எம். பழனியப்பன், கே. கைலாச முதலி, வி. சிவானந்தம், எஸ். ராமலிங்கம், வி. கிருஷ்ணய்யர், எம். பி. சுப்பிரமணிய முதலி, எம். கே நைனா முதலி, வி. கந்தசாமி முதலி, சு. துரைசாமி கவுண்டர்; ரூ. 2-10-0: ஒரு ரூபாய்க்குட்பட்ட நன்கொடை.

ஆக ரூ. 18—10—0

மணிநகர், ஸ்ரீ ஆர். வைத்திலிங்கம் மூலம்:

ரூ. 5—0—0: ஸ்ரீமான்கள் ஆர். வைத்தியலிங்கம், எஸ். சுப்பையா பண்டாரம், பி. பொஜ்ஜீ முதலியார். ஆக ரூ. 15—0—0

இலங்கை, தியத்தலாவை, ஞாயி அல்லிதொட் ஆசைப் பிள்ளை மூலம்:

ரூ. 5—0—0: ஞாயி அல்லிதொட் ஆசைப் பிள்ளை; ரூ. 2—0—0: ஸ்ரீமான்கள் எஸ். எஸ். நடராசா, எஸ். திருஞானம், எஸ். வயிரவநாதன்; ரூ. 1—0—0: ஸ்ரீமான்கள் எஸ். எம். ஜெயபால், ஏ. ராமையா. ஆக ரூ. 13—0—0

புதுப்பட்டி, ஏ. ஐ. எஸ். ஏ. காதி வஸ்திராலயம் மானேஜர் மூலம்:

ரூ. 1—0—0: ஸ்ரீமான்கள் வ. வி. சங்கரப்பன், எஸ். பாலசுப்ரமணியம், இ. எம். துரைச்சாமி, டி. ஏ. வீராச்சாமி நாயுடு, வி. வி. சுப்பையா நாயுடு, ஏ. எம். தேவநாஸ் நாடார், ஆர். ராஜாமணி அய்யர், கே. எஸ். கிருஷ்ணசாமி, கொ. இ. வி. சங்கரமூர்த்தி நாயுடு, வி. நல்லபெருமாள் பிள்ளை, கே. கே. ராமசாமி நாயுடு; ரூ. 1—4—0: ஒரு ரூபாய்க்கு உட்பட்ட நன்கொடை. ஆக ரூ. 12—4—0

சிவகாசி, திக்குச்சி தொழிலாளர் சங்கக் காரியதரிசி ஸ்ரீ எஸ். கருப்பையா மூலம்:

ரூ. 2—0—0: ஸ்ரீ எஸ். கருப்பையா; ரூ. 1—0—0: ஸ்ரீமான்கள் வி. தேவேந்திரன், எஸ். விஸ்வநாதன், வி. எம். காளியப்பன், வி. வெள்ளையப்பன்; ரூ. 4—0—0: ஒரு ரூபாக்குட்பட்ட நன்கொடை.

ஆக ரூ. 10—0—0.

கரக்பூர், ஸ்ரீ கே. வி. எஸ். நாராயணன் மூலம்:

ரூ. 2—0—0: ஸ்ரீமான்கள் சுந்தரராஜன், சீனுவாசன், இரங்கசாமி, இலக்குமி நாராயணன், ஸ்ரீமதி ருக்மணியம்மணி.

ஆக ரூ. 10—0—0

மன்னார்குடி, கோ. இரா. பாலசுப்ரமணியன் மூலம்:

ரூ. 2—0—0: ஸ்ரீ என். கணேசன்; ரூ. 1-8-0: ஸ்ரீ கோ. இரா. பாலசுப்ரமணியம்; ரூ. 1—0—0: ஸ்ரீமான்கள் டி. பி. சிங்காரவேலு, எஸ். ஹனிப், கே. சந்தானகிருஷ்ணன், எஸ். வி. சேதுராம், ஏ. ஸ்ரீனிவாசன், ர. பழனிவேலு; 30—8—0: ஒரு ரூபாய்க்குட்பட்ட நன்கொடை. ஆக ரூ. 10—0—0

பெங்களூர், எஸ். அருணாசலம் மூலம்:

ரூ. 1—5—0: ஸ்ரீ எஸ். அருணாசலம்; ரூ. 1—0—0: ஸ்ரீமான்கள் எஸ். தன்ராஜ், சி. எம். கணேஷ், எம். ஆர். டி. ஸ்வாமி, சுப்பய்யன். ஆக ரூ. 5—5—0

காலக்ஷேபம்

தூங்க முடியாது!

டாக்டர் (நோயாளியைப் பார்த்து):—என்னய்யா? உமக்கு வியாதி இவ்வளவு தூரம் முற்றும் நிலைமையில் தூங்கிக் கொண்டா இருந்தீர்?

நோயாளி:—இல்லீங்களே; எனக்கு ஆறு மாதமாகத் தூக்க மில்லாத வியாதிதானே ஸார்! நான் எப்படித் தூங்க முடியும்?

—டி. கிருஷ்ணசாமி.

★

சந்தேகமில்லை!

சிநேகிதர்:—ஏண்டா ராமு, அப்பா வீட்டிலிருக்கிறாரா?

ராமு:—இது என்ன கேள்வி, மாமா! லீவு நாளில், அதுவும் சாயங்காலத்தில் நான் படித்துக்கொண்டிருப்பதிலிருந்தே தெரியவில்லையா?

—எம். எஸ். ரங்கராஜன்.

★

சூடான பதில்

ஏழைகளுக்குக் கொடுக்க ஒருவர் பணம் வசூலித்தார். கருமியான ஒரு பணக்காரரிடம் தட்டு நீட்டப்பட்டது.

அவர், "ஸார், ஸார், என்னிடம் காலணாக் கூட கிடையாது!" என்றார் பரபரப்புடன்.

உடனே மற்றவர் "அதனால் பரவாயில்லை; கையில் காலணாக்கூட இல்லாத ஏழைகளுக்காகத்தான் வசூல் செய்கிறேன். நீங்கள் வேண்டுமானால் தட்டிலிருந்து கொஞ்சம் பணம் எடுத்துக் கொள்ளுங்கள்!" என்றார்.

—சா. நாராயணன்.

★

அதிக நஷ்டம்

"என்ன செட்டியாரே, உங்கள் ஜவுளிக் கடையில் நேற்று களவு போய்விட்டதாமே - பாவம்; சுமார் எவ்வளவு நஷ்டம் இருக்கும்?"

"அதையேன் கேட்கிறீர்கள்? ரொம்ப நஷ்டம் ஏற்பட்டுவிட்டது. ஆனால்......"

"ஆனால், என்ன?"

"முந்தா நாள் களவு போயிருந்தால் அதிக நஷ்டமடைந் திருப்பேன்."

"எப்படியோ?"

"நேற்றுத்தான் எல்லா உருப்படிகளுக்கும் நூற்றுக்கு 25 வீதம் விலையைக் குறைத்தேன்."

—மீனாக்ஷி கிருஷ்ணமூர்த்தி.

★

ரேஷன் காலம்

வீட்டு:—என்னப்பா பால் பச்சைத் தண்ணியா யிருக்கே?

பால்காரன்:—பின்னே! இந்த வெறுரேஷன்லே நீங்க குடிக்கற காசுக்கு கூட வைச்சா குடிக்கச் சொல்றீங்க?

—ருக்மணி நீலகண்டன்.

பார்த்து விடு

டாக்டர் (நோயாளியிடம்):—இன்று யாரை யாவது பார்ப்ப தென்றால் உடனே பார்த்து விடும்.

நோயாளி;—ஏன் டாக்டர்?

டாக்டர்:—நாளைக்கு உமக்கு ஆபரேஷன் செய்யப் போகிறேன்.

—கே. ராமசாமி.

★

கணவன் யோசனை

கணவன்:—(மனைவியைப் பார்த்து) ராஜம், இன்னிக்கு நல்ல டிராமா நடக்கப் போகிறது. உனக்கு நல்ல புடவை இல்லையே என்றுதான் பார்க்கிறேன்.

ராஜம்:— (சிரித்துக்கொண்டு) ஆமாம். நீங்கள்தான் அதற்கு வழி பண்ணுங்களேன்;

கணவன்:—சரி; அப்படியே செய்கிறேன்.

மனைவி:—என்ன செய்யப் போகிறீர்கள்?

கணவன்:—நாடகத்தை நான் மட்டும் போய்ப் பார்த்துவிட்டு வந்து உனக்குக் கதையைச் சொல்லிவிடுகிறேன்.

—என். ஜயராம்.

★

அடைக்க வேண்டாம்

வீட்டைப் பார்க்க வந்தவர்:—இந்த வீடு நல்ல வசதியாகத்தான் இருக்கிறது. ஆனால்,



சுவரில் ஆங்காங்கே துவாரம் இருப்பதால் இங்கிருந்து பேசுவது பக்கத்து வீட்டுக்குக் கேட்குமே?

வீட்டுச் சொந்தக்காரன்:— அதற்கென்ன? சுவரிலுள்ள துவாரத்தை அடைத்து விட்டால் போகிறது.

வீடு பார்க்க வந்தவர்:—சே! அப்படியானால், பக்கத்து வீட்டில் இருப்பவர்கள் பேசுவதை நான் எப்படிக் கேட்பது?

—என். எச். எல்.

★

சாமர்த்தியமில்லை!

அரசன் (விதூஷகனைப் பார்த்து):— நாம் இருவரும் பதவியை மாற்றிக் கொள்ளலாமே?

விதூஷகன்:— அதெப்படி சாத்தியப்படும் அரசே!

அரசன்:—நீ ஒரு அரசனாக இருக்க லாயக்கில்லை என்று யோசிக்கிறாயா?

விதூஷகன்:—இல்லை, விதூஷகனாக இருக்க உமக்கு என்ன சாமர்த்தியம் இருக்கிறதென்றே யோசிக்கின்றேன்.

—சீதா. கே. மூர்த்தி.

அதை செய்யக்கூடும்—
அது செய்யப்பட்டும் வருகிறது

கூடி ஆலோசித்துச்
செய்யும் வேலையால்
திருட்டு விற்பனை
எப்படி ஒழியும்

திருட்டு விற்பனை

பொது ஜனங்களுக்கு வேண்டிய சரக்குகள் அவர்களுக்கு கிடைக்க முடியாதபடி சேமித்து வைத்து, அவைகளுக்கு அதிக விலைவைத்து விற்று கொள்ளை லாபம் அடிக்கும் கடைக்காரர்கள்தான் மிகவும் கேவலமான சமூகக் குற்றவாளிகள். அவர்கள்தான் இரக்கமற்ற, அக்கிரமமாக சூறையாடும் திருட்டு வியாபாரக்காரர்கள்.

நான்கு முக்கியமான குறிப்புகள்:—

1 திருட்டு விற்பனை எவ்வாறு சமூக விரோதமானது என்பதை அறியவும்.

2 உபயோகிப்பவர்கள் அதை வாங்குவதனால்தான், அது சாத்தியமாகிறது என்பதை அறியவும்.

3 நாம் எல்லோரும் கட்டுப்பாட்டு விலைக்கு மேல் கொடுக்க மறுத்தால், திருட்டு விற்பனை ஒழிந்துவிடும் என்பதை அறியவும்.

4 தீங்கு இழைக்கும் இவர்களை ஒழிக்க போலீஸ்காரர்களுக்கு தகவல் மாத்திரம் தான் தேவை என்பதை அறியவும்.

மிகவும் கடினமான தண்டனைக்கு அவர்கள் உரியவர்கள். ஆனால் அநேகமாக சாமான்கள் வாங்குகிறவர்கள் பிராது செய்யாததால் அவர்கள் தண்டனையின்றித் தப்பித்துக்கொள்ளுகின்றனர். நாம் எல்லோரும் திருட்டு விற்பனையை ஒழிப்பதற்காகப் போலீசாருக்கு உதவவேண்டும். இவர்கள் தண்டனையடைவது பற்றி ஏற்கெனவே படித்து வருகிறோம். ஆனால் அது போதாது.

நாம் எல்லோரும் தகவல் கொடுக்க முன்வந்தால் தான் இத்தீங்கு அடியோடு ஒழியும்.

இவை எல்லாம்
சேர்ந்துதான்
வேலை
செய்கிறது

திருட்டு விற்பனை ஒழிக!

AAAJ 367 TN

கட்டுப்பாட்டு விலையினால்

உற்பத்தியாளருக்கு நியாயமான விலை கிடைக்கும். சில்லறை வியாபாரிகளுக்கு நியாயமான இலாபம் கிடைக்கும். நீங்களும் எந்தப் பொருளையும் நியாயமான விலைக்கு வாங்கலாம்.

மருந்து விற்பனைக் கட்டுப்பாட்டுக் கட்டளையின்

இரத்தினச் சுருக்கம் இதுதான்.

இதை ஜாக்கிரதையாகப் படித்துப் பணத்தை மிச்சப்படுத்துங்கள்.

1. இறக்குமதி செய்யப்பட்டவையும் இந்தியாவில் செய்யப்பட்டவையுமான 1700 வகை மருந்துகளுக்கு தனித்தனியே விலைகள் விதிக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் ஆயுர்வேத யுனானி மருந்துகளுக்கு விதிக்கப்படவில்லை. தனி திட்டத்தால் கொய்னா விலையும் வினியோகமும் கட்டுப்படுத்தப்பட்டிருக்கிறது. கட்டுப்பாட்டு விலைகளின் முழுப் பட்டியலும் அட்டவணையும், 9 அணா விலைக்கு, தபால் செலவில்லாமல், டில்லி, சிவில் லைன்ஸ், பிரசுர மானேஜரிடமாவது, அச்சகப் பிரசுரங்கள் விற்க நியமிக்கப்பட்டிருப்பவர்களிடமாவது கிடைக்கும். இந்தப் பட்டியலில் இல்லாத ஒரு மருந்துக்கு அதிக விலை வாங்கப்பட்டதாக உங்களுக்குத் தோன்றினால், தெரிவியுங்கள். இந்தக் கட்டளைவழி அன்ன அதிகவிலைவிதிப்படி நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளப்படும்.

2. எல்லா வியாபாரிகளும் லைசென்ஸ் பெற்றிருக்கவேண்டும். இந்த அறிக்கையின் கடைசியில் காணப்படும் சின்னத்தையும் கட்டுப்பாட்டு விலைப்பட்டியலையும் முக்கியமான இடத்தில் கட்டித் தொங்கவிடப்பட்டிருக்கவேண்டும். சரக்குகளைக் கட்டுப்பாட்டு விலைப்படி விற்க மறுத்தாலும் ரொக்க சீட்டு கொடுக்க மறுத்தாலும், அபராதம் சிறைத் தண்டனை லைசென்ஸ் ரத்து, சரக்குகள் பறிமுதல் ஆகிய தண்டனைகளுள் எதுவும் நேரும்.

3. அளவிற்கு மீறி மருந்துச் சரக்குகள் இருப்புவைத்திருப்பது குற்றமாகும். சில மலைப் பகுதிகளில் 100க்கு 5 வீதம் அதிக விலைவைத்து விற்கலாம். சுங்கவரி முதலிய வரிகள் விதிக்கப்பட்டிருந்தால், அதைத் தனியாக ரொக்க சீட்டில் பதியவேண்டும்.


வியாபாரிகள்மீது பிராது ஏதுமிருந்தால், கட்டுப்பாட்டு விலை ஜாபிதாவில் குறிப்பிட்டிருக்கும் அந்தப் பகுதி லைசென்ஸிங் அதிகாரியிடம் தெரிவித்துக்கொள்ளவும். இந்தக் கட்டளையை அமுல் நடத்துவதுபற்றி, டாக்டர்கள், இறக்குமதிக்காரர்கள் உற்பத்தியாளர்கள் வியாபாரிகள் ஆகியோரின் பிரதிநிதிகள் நெருக்க ஆலோசனை கூறிக்கொண்டு வந்திருக்கின்றனர். அதாவது வியாபாரிகளின் யோசனையைப் பெற்றுத்தான் அரசாங்கத்தார் நடத்திவருகின்றனர்.

மருந்து வாங்குமுன்னதாக, கட்டுப்பாட்டு விலைப்பட்டியலைக் காட்டும்படி கேளுங்கள். கட்டுப்பாட்டு விலையைவிட அதிக விலைகொடுத்து வாங்கவேண்டாம். நியாயமான பிராதுகளிருந்தால், அதைத் தெரிவிக்கத் தயங்காதீர்கள். ரொக்கச் சீட்டுகளைச் சேமித்து வைத்துக்கொள்ளுங்கள்.

உண்மையை உணர்ந்து உங்கள் உரிமையைக் கேளுங்கள்.

நியூ டில்லி கைத்தொழில் சிவில் சப்ளை இலாக்கா வெளியிட்டது.

AAA 1211 TM



1957-ம் வருஷத்திய 3% வட்டி

விக்டரி லோன் பத்திரங்கள்

வாங்குவதெப்படி



மிகவும் எளிது. நீங்கள் உங்கள் பாங்கிகளுக்கு எழுதினால் மட்டும் போதுமானது. அவர்கள் எல்லா ஏற்பாடு களையும் செய்து விடுவார்கள். இல்லாவிட்டால், பம்பாய், கல்கத்தா, சென்னை, டில்லி, கான்பூர் ஆகிய ஊர்களிலுள்ள இந்திய ரிசர்வ் பாங்கிகளிலும், மற்ற ஊர்களிலுள்ள இந்திய இம்பீரியல் பாங்கியின் கிளைக் காரியாலயங்களிலும் அல்லது எந்த அரசாங்க கஜானாவிலும் நீங்கள் மனுச்செய்து கொள்ளலாம்.



உங்கள் வீதாசாரம். வருஷத்திற்கு இரண்டுமுறை அதிகாரிகளால் உங்களுக்கு அனுப்பப்படும். அதை ஒரு சாதாரண 'செக்' போலவே நீங்கள் மாற்றிக் கொள்ளலாம். அல்லது அத்தொகையை உங்கள் கணக்கில் வரவுவைத்துக் கொள்ளும்படி உங்கள் பாங்கர்களுக்குத் தெரிவிக்கவும்.

எவ்வளவு தொகையானாலும் சரி. மறு அறிக்கை வரையில் உங்கள் விருப்பம் போல், எவ்வளவு தொகையானாலும் இதில் போட்டு வைக்கலாம். நீங்கள் தொகை சேமிக்க சேமிக்க, இந்த கடன் பத்திரங்களை வாங்கிக்கொண்டே போகலாம்.



உங்கள் முதல் பத்திரமாயிருக்கிறது. 1957-ம் வருடத்திய 100-க்கு 3வட்டி விக்டரி கடன் நடத்துகிறவர்கள் இந்திய அரசாங்கத்தார். அவர்கள் கொடுக்கும் பிராமிசரி நோட்டுக்களும் ஜாமீன் பத்திரங்களும் 1957-ம் வருஷம் செப்டம்பர் மாதம் 1-ம்தேதி அதன் அசல் தொகை திருப்பிக் கொடுத்து விடப்படும் என்று இந்திய அரசாங்கத்தைக் கட்டுப்படுத்துகின்றன.

100-க்கு 3வட்டி நீங்கள் போடும் முதலின்பேரில்நிச்சயமாகக் கொடுக்கப்படும்.

மிகச்சில இடங்களில் நீங்கள் போட்டுவைக்கும் தொகைகள்தான் பூரண பாதுகாப்போடிருப்பவை. முறைப்படி வட்டிகள் வரும். மதிப்பு குறைந்து விடுமென்றோ, கஷ்டமாகி விடுமென்றோ அஞ்சுவதற்கிடமில்லை. உங்கள் பணத்தைப் போட்டு வைப்பதில் நீங்கள் ஜாக்கிரதையாயிருக்கிறவர்களானால், உங்கள் பணத்தைப் போட்டுவைக்கும் முன்னால் நீங்கள் கவனிக்க வேண்டியவை இவைதான்.

செலவைக் குறைத்து சேமிப்பைப் பெருக்கு


1957-ம் வருஷத்திய 3% வட்டி

விக்டரி லோன்

பத்திரங்களை வாங்குங்கள்

இந்திய அரசாங்க நிதி இலாகா வெளியிட்டது

AAA 1160 TH



ஸன்லைட் கெமிஸ்டு
சொல்லுகிறார் . . .

“அசுத்தமான ஆடைகளிலிருந்து அழுக்குகளை தானாகவே போக்கக்கூடிய நுரைக்கே சுயமாக வெளுக்கும் நுரை என்று பெயர். அது எப்படி வேலை செய்கிறது? ஸன்லைட் நுரையில் ''பிராணசக்தி'' வாய்ந்த சோப் இருக்கிறது. 'பிராணசக்தி' வாய்ந்த சோப்பிற்கு அழுக்கைப் போக்கக்கூடிய சக்தி நிறைந்திருக்கிறது. அது தொட்ட உடன் அழுக்கைப் பற்றிக்கொண்டு தன்னுடன் அழுக்கை எடுத்துவிடுகிறது. ஆகையால் அழுக்கடைந்த ஆடைகளை ஸன்லைட் நுரையினால் கசக்கினால் இந்த 'பிராணசக்தி' யானது உடனே வேலை செய்து நுரையை தண்ணீரில் அலசின உடன் அழுக்குப் போய்விடுகிறது.”

ஸன்லைட் சோப்

சுயமாக வெளுக்கும் நுரை உடையது



S, 63-33 TM

ஒரு லீவர் பிரதர்ஸ் தயாரிப்பு





25 வருஷங்களுக்கு அப்பால்

பாரு

"மாமா! உங்களை இருபத்தைந்து வருடங்கள் மனங்கூசாமல் சிறையில் வைத்துக் கொண்டிருந்தவர்களை நினைத்தால் எனக்கு எப்படி இருக்கிறது தெரியுமா? அவர்கள் மாத்திரம் இப்பொழுது என் முன் இருந்தால், எல்லோரையும் கண்ட துண்டமாய் வெட்டி என் ஆத்திரத்தைத் தீர்த்துக் கொள்வேன்!" என்றாள் ரஸியா. அவள் குரலில் வீராவேசம் தொனித்தது.

அவள் வாய் மூடினதுதான் தாமதம். அடில்கான் தான் உட்கார்ந்திருந்த ஆசனத்திலிருந்து துள்ளி எழுந்தான். அவன் கண்களில் கோபக் கனல் வீசியது.

"குழந்தாய்! நான் எதற்காகச் சிறையில் அடைக்கப்பட்டேன் தெரியுமா? சொல்கிறேன், கேள்" என்று தன் கதையை ஆரம்பித்தான் அடில்.

★

"அப்பொழுதுதான் அல்லாவுத்தீன் டில்லி பட்டத்திற்கு வந்திருந்தான். தன் மாமனை வஞ்சகமாய்க் கொலை செய்து பட்டமேற்றதினால் அவனை யாவரும் வெறுத்தார்கள். அவன், 'பிரபுக்கள் ஒன்று சேரக் கூடாது, கூட்டம் கூடக் கூடாது!' என்றெல்லாம் கட்டளைகள் பிறப்பித்தான். இதனால் நாங்கள் யாவரும் ரகசியமாய்க் கூட்டம் கூட ஆரம்பித்தோம். அல்லாவுத்தீனின் கொடுமை தாங்க மாட்டாமல் நாங்கள் அநேக முறை அவனைக் கொலை செய்து விடலாமா என்றுகூட நினைத்ததுண்டு. அந்தக் கூட்டத்துக்கு நான்தான் தலைவனாக இருந்தேன். எங்கள் கூட்டம் ஒவ்வொரு சமயத்திலும் ஒவ்வொரு இடத்தில் கூடும்.

"ரஸியா! அக்காலத்தில் நான் என் மனதை எனது ஒன்றுவிட்ட அத்தை மகள் குலாபிடம் பறி கொடுத்திருந்தேன். அவள் பெயருக் கேற்றாற்போல் நல்ல அழகி. குலாப் சிறு வயதிலிருந்து என்னுடனேயே வளர்ந்ததினால் அவள் எனக்குத்தான் சொந்தம் என்று நான் மனப்பால் குடித்துக் கொண்டிருந்தேன். இந்தச் சமயத்தில் எங்களிருவருக்கும் நடுவே முபாரக் வந்து குறுக்கிட்டான். அவன் குலாபின் தூர பந்து.

"ஒரு நாள் குலாபும் முபாரக்கும் காதல் மொழிகள் பேசுவதை நான் காண நேர்ந்தது. எனக்கு வந்த கோபம் கொஞ்ச நஞ்சமல்ல. அவனை அங்கேயே வெட்டி வீழ்த்த வேண்டும் போல் எனக்குத் தோன்றியது. எதற்கும் முபாரக்கிடம் நல்ல வார்த்தைகள் சொல்லிக் குலாபை மறந்து விடும்படி சொன்னேன். ஆனால் அவன் மறுத்துவிட்டான்.

"ஆகவே, குலாப் யாருக்குச் சொந்தம் என்பதை வாட் சண்டையின் மூலம் முடிவு செய்து கொள்வதென்று தீர்மானித்தோம். வாட் சண்டையில் முபாரக் தோல்வியுற்று விழுந்து விட்டான். அவனது உயிர் என்னிடம்தானிருந்தது. அந்தச் சமயத்தில் 'நில்!' என்று ஒரு குரல். திரும்பிப் பார்த்தேன். குலாப் எனக்குப் பின்னால் நின்று கொண்டிருந்தாள். அவள் தன் காதலனது

உயிருக்காக என்னிடம் வெகு நேரம் மன்றாடினான். முபாரக்கைக் கொன்றாலும் தன் காதலை நான் பெற முடியாது என்றாள். நான் பிடிவாதமாய் மறுத்து விட்டேன். எனது வாளை அவன் மார்பில் பாய்ச்சும் சமயம், நாலைந்து பேர் வந்து என்னைக் கட்டிப் பிடித்தனர். குலாப் சில கடிதங்களை அவ் வாட்களிடம் ஒப்புவித்தாள்.


பொக்கிஷதாரர் ('செக்' மாற்ற வந்தவரிடம்):—ஏன், ஸார்! நீங்கள்தான் அழ. பழ. அழகேசன் செட்டியார் என்று நான் எப்படி நம்புவது?

செட்டியார்:—சந்தேகம் என்னத்துக்கு, ஸார்? வேண்டுமானால் என் 'போட்டோ'வைப் பார்த்துக் கொள்ளுங்களேன்!

எனக்குத் திக்கென்றது. அந்தக் கடிதங்கள் நான் பிரபுக்கள் சங்கத்தைக் கூட்ட அங்கத்தினர்களுக்கு எழுதியவை. ராஜத் துரோகி என்று என்னைக் கைது செய்தார்கள். நான் யாருக்காக என் உயிரையே தியாகம் செய்யத் தயாராயிருந்தேனோ, அவளே என்னை இருபத்தைந்து வருடச் சிறை வாசத்திற்கு உள்ளாக்கினாள். கையில் விலங்கு மாட்டப் பட்டதும் எனது காதல் எங்கேயோ மறைந்து விட்டது. பிரபுக்கள் சங்க அங்கத்தினர்களில் ஒருத்தியான குலாப், என்னைக் காட்டிக் கொடுத்தது என்னுடைய கோபத்தைப் பன்மடங்கு அதிகரிக்கச் செய்தது. கையிலிருந்த வாளை வீசி எறிந்துவிட்டு, 'உன் பேரிலுள்ள காதலுக்காக நான் எந்த உலகத்திற்கும் உன்னைப் பின்பற்றத் தயாராயிருந்தேன். ஆனால் இப்பொழுது என்னுடைய வஞ்சத்தைத் தீர்த்துக் கொள்ள நீ எந்த உலகத்திலிருந்தாலும் நான் உன்னைத் தொடர்ந்து வந்து பழி வாங்குவேன்!' என்றேன். ரவியா! இந்த எண்ணம் தான் என் உயிரை இத்தனை நாளும் காப்பாற்றி வந்தது. ஆனால், என் சபதம் நிறைவேறாமலே நான் உயிரை இழப்பேனோ, என்னவோ?"

"ஒருக்காலுமில்லை; சபதம் சபதமே! டாம். நானும் இதோ சபதம் செய்கிறேன். நாமிருவரும் ஒன்றாய்ச் சேர்ந்து வஞ்சத்தைத் தீர்த்துக் கொள்வோம்!" என்றாள் ரவியா.

★

"அம்மா! புதிதாய் வேலைக்கு வந்திருக்கிறானே ரவியா, அவனைக் கண்டதும் உன் முகம் ஏன் மாறி விடுகிறது?" என்று கேட்டான் ஜலால்.

ஜலால் வேறு யாருமில்லை. குலாப்பின் குமாரன்தான்.

"ஜலால்! அவனைக் கண்டு நான் பயப்படவில்லை. ஆனால், அவன் முகம் யாரை ஞாபகமூட்டுகிறதோ, அந்த ஆசாமியை நினைத்துத்தான் பயப்படுகிறேன். அவன்தான் அடில்கான்! ரவியாவின் மாமன். அவனைப் பற்றியும் அவன் சபதத்தைப் பற்றியும்தான் உன்னிடம் நான் எத்தனையோ சொல்லியிருக்கிறேனே!"

"அம்மா! அடில்கான் சபதம் செய்தது இருபத்தைந்து வருடங்களுக்கு முந்தி. ரவியாவிற்கு அதைப் பற்றித் தெரியுமோ, தெரியாதோ! ஏன், அடில்கானே தன் சபதத்தை இத்தனை நாளும் மறந்திருந்தாலும் மறந்திருப்பான். அப்படியிருக்க, நீங்கள் ஏன் வீணாய் மனதை அலட்டிக் கொள்கிறீர்கள்?"

"குழந்தாய்! உனக்கு அடில்கானைத் தெரியாது. அவன் தன் சபதத்தை மறக்கவில்லை; மன்னிக்கும் சுபாவமும் அவனுக்குக் கிடையாது!" என்றாள் குலாப்.

"அதிருக்கட்டும், அம்மா! ரவியாவை உன் மருமகனாக ஏற்க வேண்டுமென்றால் உன்னால் முடியுமா?"

"ஐயோ! முடியாது, குழந்தாய்! அந்த எண்ணத்தை விட்டுவிடு!"


இந்தச் சமயத்தில், "அம்மா!" என்று ஜலால் தன் தாயின் கரத்தை மெதுவாய் அழுத்தினான். ரவியாவின் வரவு அவர்களது சம்பாஷணைக்கு முற்றுப் புள்ளி வைத்தது.

★

ரவியா குலாப்புடன் வசிக்க ஆரம்பித்து ஆறு மாதங்களாய் விட்டன. குலாப், முபாரக்குடன் கொஞ்சி விளையாடும்போதெல்லாம் ரவியாவின் உள்ளம் குமுறும்.

ஆனால் நாளா வட்டத்தில் அவனிடம் ஒரு மாறுதல் ஏற்பட்டது. தான் ஏற்றுக் கொண்டிருக்கும் காரியம் எவ்வளவு கடினமானது என்பதைக் கொஞ்சம் கொஞ்ச

மாய் அவள் உணர வாரம்பித்தாள். அடில்கானின் வாடி வதங்கிய உருவத்தையும் அவனது கெஞ்சும் கண்களையும் நினைக்கும்பொழுது, அவனது சபதத்தை நிறைவேற்றி அவனை எந்த விதத்திலாவது திருப்தி செய்ய வேண்டும் என்று தோன்றும். ஆனால் சில சமயங்களில் தான் ஏற்றுக் கொண்ட வேலைபயங்கரமானது, அதைத் தன் கைகளால் சாதிப்பது அசாத்தியம் என்று அவளுக்குத் தோன்றியது. அதற்குக் காரணம் அவள் தன் மனதை ஜலாலுக்குப் பறி கொடுத்து விட்டதுதான்.



கணவன் :—இன்னும் கொஞ்சம் முன்னாடியே நீ 'டிரஸ்' பண்ணிண்டு கிளம்பி யிருந்தா, இந்த வண்டி நமக்குத் தவறி இருக்காது!

மனைவி :—நீங்கள் மட்டும் இன்னும் கொஞ்சம் பொறுத்திருந்தால், அடுத்த வண்டிக்கு நாம் அதிக நேரம் காத்திருக்கும்படி நேர்ந்திருக்காது!

ஒரு நாள் அவள் தனிமையாக நந்தவனத்தில் சுற்றி வருகையில், ஜலால் அவளைச் சந்தித்துத் தன் காதலை வெளிப்படுத்தினான். அப்பொழுது ரவியாவுக்கு அவனது நீட்டிய கரங்களில் பாய்ந்து, "ஆம்; நானும் உம்மைக் காதலிக்கிறேன்" என்று சொல்ல வேண்டும்போ லிருந்தது. இருந்தாலும் உள்ளக் கிளர்ச்சியை அடக்கிக் கொண்டு கோபம் வந்தவள்போல், "நீர் இந்த மாதிரியெல்லாம் பேசுவதா யிருந்தால் உம்முடன் பேச நான் தயாரா யில்லை!" என்று சொல்லி விட்டு அவனை ஏறெடுத்தும் பார்க்காமல் விர்ரென்று தன் அறைக்கு வந்து விட்டாள். அறையை அடைந்ததும் அவள் படுக்கையில் குப்புற விழுந்து விம்மி விம்மி அழுதாள்.

★

மறு நாள் ஜலால் காணப்படவில்லை. குலாபும் முபாரக்கும் முகத்தைத் தொங்கப் போட்டுக் கொண்டிருந்தார்கள். ஜலால் ஒருவரிடமும் சொல்லாமல் எங்கோ போய் விட்டான். குலாப் தன்னை நோக்கும்போது, அவன் முகத்தில் சந்தேகம் தோன்றியிருந்ததை ரவியா கவனிக்காமல் போகவில்லை. ரவியாவின் உள்ளத்தில், எங்கே ஜலால் தற்கொலை செய்து கொண்டு விடுவானோ என்ற பயமே தலை தூக்கி நின்றது. "புத்திர சோகம் குலாபின் துரோகத்திற்குஏற்ற தண்டனை தான்!" என்று ஒரு சமயம் அவளுக்குத் தோன்றினாலும், காதல் குறுக்கிட்டு, "அவனை வீட்டை விட்டு ஓடச் செய்தது நீதான்; தற்கொலை புரிந்து கொண்டாலும் அதற்குக் காரணம் நீதான்!" என்று குத்திக் காண்பித்தது. அவன் போன பிறகு ரவியாவிற்கு அவ் வீட்டி லிருக்கப் பிடிக்கவில்லை. அவனில்லாத அவ் வீட்டி லிருப்பதைவிட, தானும் தற்கொலை புரிந்து கொள்வதே மேலென்று அவளுக்குத் தோன்றியது. அன்றிரவு சாப்பாடானதும் ஒருவருக்கும் தெரியாமல் மாளிகையை விட்டு நதிக்கரையை நோக்கி நடந்தாள். "ஐயோ! ஜலால்! நான் கொலைகாரி! ஆம்; உன் அருமைத் தாயாரை விஷம் வைத்து கொலை செய்யத் துணிந்தவள்! இதை நீ அறிந்தால்?......"—இப்படி நினைத்துப் பார்க்கும்போது ரவியாவின் நெஞ்சம் துணுக்குற்றது.

நதியில் இறங்கப் போகும் சமயம், "ரவியா!" என்ற குரல் கேட்டுத் திரும்பிப் பார்த்தாள். ஜலால் நின்று கொண்டிருந்தான். அவனைக் கண்டதும் தன்னையு மறியாமல், "ஜலால்!" என்று அலறி அவனது கரங்களில் பாய்ந்தாள் ரவியா.

★

"ரவியா! உன் வேலை முடிந்து விட்டதா? என் சபதம் தீர்ந்ததா?" என்று கேட்டான் அடில்கான்.

"மாமா! நடந்தது நடந்து விட்டது. குலாபை மன்னித்து விடுங்கள். உங்களிடம் உண்மையைக் கூறி விடுகிறேன். நான் ஜலாலைக் காதலிக்கிறேன். அவருடைய தாயாரை நான் எப்படிக் கொல்வேன்?"

"ஆம்; உன்னைக் குற்றம் சொல்லிப் பிரயோசனமில்லை. நீயும் அவளைப்போல் பெண்தானே? சரி; இங்கு நிற்காதே! போ, அப்பால்!"

ரஸியா ஆறாய்ப் பெருகும் கண்ணீரைத் தன் தலைப்பினால் துடைத்துக்கொண்டே எழுந்து வெளியே செல்லக் காலை எடுத்து வைத்தாள். உடனே அடில்கான், "உன்னைப் போகவிட்டால் அவனுக்கு நீ எச்சரிக்கை செய்து விடுவாய். நீ இங்கேயே இரு!" என்று சொல்லி அவளை அவ்வறையில் தள்ளிப் பூட்டிவிட்டு ஆவேசத்துடன் வெளியேறினான்.

★

"ஐயோ! கடவுளே! காப்பாற்றுவாரில்லையா? பைத்தியம் கொன்று விடும்போலிருக்கிறதே! நான் என்ன செய்வேன்?" என்ற அலறலைக் கேட்டுத் திடுக்கிட்டு நிமிர்ந்தான் அடில். அக்குரல் ஒவ்வொரு நிமிடமும் அவன் மனதில் குடிகொண்டு அவன் சபதத்தை நினைவூட்டிக் கொண்டிருந்த குரல்! ஆம்; அக்குரல் குலாபினுடையதுதான். அடில்கானின் உடலில் சுறுசுறுப்பு ஏற்பட்டது. சத்தம் வந்த திக்கை நோக்கி விரைந்து நடந்தான். குரல் வந்த இடத்தில் குலாப் நின்று கொண்டிருந்தாள். அவள் முகம் சவம்போல் வெளுத்திருந்தது. அடில்கானைப் பார்த்ததும் அவளுக்குத் தூக்கிவாரிப் போட்டது.

அடுத்த நிமிடம் குலாப் அடில்கானின் காலடியில் விழுந்தாள். "அடில்கான்! என்னை மன்னித்துவிடு. அவரைக் காவலிலிருந்து தப்பிய பைத்தியம் ஒன்று கொல்லப் பார்க்கிறது. அடில்! தயவுசெய்து அவரைக் காப்பாற்று. அப்புறம் வேண்டுமானால் என்னைக் கொன்று உன் சபதத்தை நிறைவேற்றிக் கொள்!" என்று கெஞ்சினாள்.


"நான் ஒன்றும் உறுதி கூறத் தயாராயில்லை. ஆனால் உன் கணவன் உயிர் போவதையாவது பார்க்கிறேன், வா!" என்று கூறி அவள் காட்டிய வழியே சென்றான் அடில்கான்.

குன்றின் மறுபுறத்தில் இரண்டு பேர் கட்டிப் புரண்டு கொண்டிருந்தார்கள். ஒருவன் ரூபாராக். மற்றொருவன் ஆஜானுபாகுவாய் இருந்தான். அவன் கையிலிருந்த கத்தி உதய சூரியனின் கிரணங்கள் பட்டு தகதகவென்று மின்னிக் கொண்டிருந்தது. கண்மூடித் திறப்பதற்குள் ஒரே தாவலில் அடில்கான் இருவர் நடுவிலும் பாய்ந்து விட்டான். பைத்தியக்காரனின் கையிலிருந்த கத்தி அடில்கானின் விலாவில் பாய்ந்தது. அவன் கீழே சாய்ந்துவிட்டான். குலாப் அவனை நெருங்கினாள்.

"குலாப்! நான் உன்னை மன்னித்து விட்டேன் என்று ரஸியாவிடம் சொல்லு. என் சபதம் நிறைவேறாவிட்டாலும், என் மனம் மன்னிப்பினால் சாந்தியுற்றதென்று சொல்லு!" என்றான் அடில்கான்.

அடுத்த நிமிடம் அவன் தலை சாய்ந்தது. தன் கண்களிலிருந்து வழிந்த கண்ணீரை குலாப் துடைத்துக் கொண்டாள்.

அபயப் பிரதானம்!



"சாமி! எத்தனையோ ஏழைகளைக் காப்பாத்திறீங்க! இந்த ஏழையையும் கொஞ்சம் காப்பாத்துவீங்களா? எனக்குக் காசு, கீசு வேண்டாங்க! என் வீடு ரெண்டு நாளா இருண்டு கிடக்குதுங்க! கொஞ்சம் தயவு பண்ணுங்க!"

"என்னடா வேண்டும்?"

"எப்படியாச்சும் ஒரு புட்டி மண்ணெண்ணெய் வாங்கிக் கொடுங்க!"

கர்நாடக சங்கீத வித்வான்கள்

65. திருமருகல் நடேசன்

நாதஸ்வர வாத்தியத்தில் மிக்க பெருமை அடைந்த இவர் நாதப் பிரும்மத்தின் மர்மத்தை ஜனங்கள் தெரிந்து ஆனந்தப் படும்படியாக வெளியிட்டவர். இவருடைய வாத்தியத்தின் பெருமையை அளவிட முடியாது. இவர் வாசிக்க உபக்ரமம் செய்து விட்டால் சேதன, அசேதன வஸ்துக்கள் யாவும் கேட்டு சந்தோஷிக்காமலிருக்க முடியாது. ஒவ்வொரு ராகத்தினுடைய தேவதையைப் பிரத்யட்சமாக நிறுத்தி எல்லோரும் அதைத் தரிசிக்கும்படியான நிலையில் செய்து வைத்தவர்.

இவருக்குச் சரிசமமாக இவர் காலத்தில் மிகவும் பிரசித்தி அடைந்த மன்னார்குடி சின்னப்பக்கிரியாப் பிள்ளை என்பவரை ஒரு சமயம் காரைமா நகர் என்று சொல்லக்கூடிய காரைக்குடியில் நகரத்தார்கள் திருமருகல் நடேசனுடன் சேர்ந்து கச்சேரி செய்ய ஏற்பாடு செய்தார்கள்.

இந்தச் சமயத்தில் இவர்களுடைய யோக்கியதையை நிர்ணயம் செய்யும் பொருட்டுப் பிரசித்தி பெற்ற வித்வான்களையும், தக்க தனவான்களையும் தருவித்துச் சபையை அலங்கரித்தார்கள். முதலில் யார் உபக்ரமம் செய்வது என்பதை ஆலோசிக்கும் பொழுது ஸ்ரீ நடேசப் பிள்ளை சின்னப் பக்கிரியாப் பிள்ளையை முதலில் ஆரம்பம் செய்யும்படி கேட்டுக் கொள்ள, அவ்விதமே பக்கிரியாப் பிள்ளை உபக்ரமம் செய்து, 'கீரவாணி' ராகத்தை மற்றொருவர் சிவாளியை வைத்து வாசிப்பதற்கு இடமில்லாமல் சங்கதிகளை அடுக்கு அடுக்காகக் கோத்து, வந்த கற்பனைகள் வராமல், வாயுவேக மனோவேகமான பிருகாக்களை உதிர்த்தார். இனி கீரவாணி ராகத்தில் சஞ்சாரம் செய்வதற்கு இடமே கிடையாது என்று சொல்லும்படியாக வாசித்தார்.

சபையோர்கள் கேட்டு மெய் மறந்து மிக்க ஆரவாரத்துடன் இனி இந்த ராகத்தை நடேசப் பிள்ளை வாசிப்பதில் என்ன பிரயோசனம் இருக்கப் போகிறது என்று ஒருவருக்கொருவர் பேச ஆரம்பித்தார்கள். அச்சமயத்தில் ஈச்வர கடாட்சம் பொருந்திய நடேசப் பிள்ளை சிவாளியை வைத்து நாஸூக்காக உபக்ரமம் செய்தார். நாதஸ்வரத்திலிருந்து நாதம் வெளிப்பட்டவுடன் சர்வ ஜனங்களும் ஆகர்ஷணம் செய்யப்பட்டு ஆஹாகாரம் செய்தனர்.

சின்னப் பக்கிரியாப் பிள்ளையும் எல்லையில்லாத சந்தோஷத்தை அடைந்து, "அண்ணன் அவர்கள் பூர்வ புண்ணியத்தால் அடைந்திருக்கும் ஊற்றின் பெருமையை ஒருவனும் ஜயிக்க முடியாது" என்றார். பிறகு இரண்டு பேர்களும் பல்லவி முதலியவற்றைச் சமமாகவே வாசித்துக் கச்சேரியை முடித்தார்கள். சபையோர்கள் எல்லோரும் கரகோஷம் செய்து, இவ்விருவரும் இவ்வாத்தியத்திற்கு ஏற்பட்ட இரண்டு நேத்திரங்கள் என்று தீர்மானித்தார்கள். இருவருக்கும் சமமாகவே சம்பாவனை செய்து, மெடல்களும் கொடுத்துப் பெருமைப்படுத்தினார்கள்.

ஸ்ரீ வேணுகானம் சரப சாஸ்திரிகள் கூட ஸ்ரீ நடேசன் வாத்தியத்தைக் கேட்டு, அகமகிழ்ந்து மிகவும் மெச்சியிருக்கிறார் என்றால் அவரது வாத்தியத்தின் கௌரவத்தை யான் எவ்வாறு வர்ணிக்க முடியும்? கானடா, அடாணா, ஸஹானா இந்த ராகங்களில் இவர் மாதிரி சஞ்சாரம் செய்தவர்களே கிடையாது.

செம்மனார் கோவில் ராமஸ்வாமிப் பிள்ளையும் ஸ்ரீ நடேசனுமாகச் சேர்ந்து ஜோடியாய் சென்னை சின்னகேசப் பெருமான் கோவிலில் வாத்தியம் வாசித்து முதல் முதலில் தங்க நாதஸ்வரத்தைப் பரிசாகப் பெற்றார்கள்.

அசடு வழிந்தது!

அ. கி. இராமஸ்வாமி

“மடையா! தடியா! கழுதை!” என்று ஸஹஸ்ரநாம அர்ச்சனை செய்து கொண்டிருந்தது, தாண்டவராயத்தின் வீட்டு ரேழி வாசற்படியண்டை நெருங்கிய போதே நன்றாகக் கேட்டது. திரும்பிப் போய் விடலாமா என்று ஒரு நிமிஷம் யோசனை செய்தேன். “என்னதான் விஷயம், பார்க்கலாமே?” என்று தோன்றவே, தலையை மெள்ள உள் பக்கம் நீட்டிப் பார்த்தேன். ஒரு மூலையில் அம்பிப் பயல் மிகவும் பயபக்தியுடன் ஓரமாக ஒதுங்கி நின்று கொண்டிருந்தான். தாண்டவராயத்தின் கையில் ஒரு பிரம்பு இருந்தது.

“‘ப்ராக்ரஸ் ரிபோர்ட்’ அனுப்பியாயித்துன்னு சொன்னாரே உங்க வாத்தியார், எங்கிட்ட ஏண்டா காண்பிக்கல்லே? கணக்கிலே நாலோ அஞ்சோதான் வாங்கியிருக்கயாம். இந்த வருஷம் ‘பாஸ்’ ‘டபாஸ்’ தான், போ! தண்டம் ...... கர்மம் ...... நான் செஞ்ச பாவம் ......” என்று தன் தலையில் இரண்டு தட்டுத் தட்டிக் கொண்டு, பையன் முதுகில் நாலறை வைத்தார் தாண்டவராயர்.

“இனிமேல் நீ இந்த வீட்டு வாசற்படியை மிதிப்பயா, பார்த்து விடுகிறேன். வெளியே எங்கேயாவது போய் மூட்டை தூக்கி பிழைச்சுக்கோ, போ!” என்று சிம்ம கர்ஜனை செய்து கொண்டே பிள்ளையை இழுத்துக் கொண்டு வெளியே வந்தார்.

என்னைப் பார்த்ததும், “வாங்க, ஸார்! ஏது இவ்வளவு தூரம்? என்னமோ, போங்க ...இந்தப் பயலைப் பற்றித்தான் கவலைப்பட்டுக் கொண்டிருந்தேன். ரொம்ப மோசம்! ஒரு எழுத்தா, ஒரு படிப்பா? ஊஹூம்! ஒண்ணுங் கிடையாது! வெட்டியான் வேலைக்குத்தான் லாயக்கு ...!” என்று மூச்சு விடாமல் தம் பிள்ளையைப் பற்றிப் பிரசங்கம் செய்ய ஆரம்பித்து விட்டார்.

“டேய்! உன்னைத்தாண்டா! கேளுடா! நானும் இவரும் நாலாங் கிளாஸிலேயிருந்து ஒன்றாகப் படித்தோம். ஒவ்வொரு வகுப்பிலும் எங்க இரண்டு பேருக்கும் போட்டி. நான் முதலா, அவர் முதலா என்று. என்ன ஸார்?” என்று என்னைப் பார்த்து பலமாகத் தலையை ஆட்டினார். நானும் பதிலுக்குத் தலையை ஆட்டிவைத்தேன்!

“கணக்கிலே நான் நூற்றுக்குத் தொண்ணூற்றொன்பது வாங்கினால், இவர் தொண்ணூற்றெட்டு. யார் நூறு வாங்கறதுன்னு போட்டி போடுவோம். — ஏன், ‘இங்கிலீஷ்’ மாத்திரம் என்ன? ‘ஹிஸ்டரி’ ‘ஜ்யாகரபி’ ‘ஸயன்ஸ்’ எல்லாவற்றிலும் நாங்கள் எண்பது மார்க்குக்குக் கீழே வாங்கி யாரும் பார்த்தது கிடையாது!” என்று சொல்லி விட்டுப் பையன் இருக்கும் பக்கம் தம் பார்வையைச் செலுத்தினார்.

பையன் அவசரம் அவசரமாக உள்ளே சென்று, ஒரு வெள்ளைக் காகிதத்தைக் கொண்டு வந்து தன் அப்பாவிடம் நீட்டினான். அதுதான் ‘ப்ராக்ரஸ் ரிபோர்ட்’. கணக்கில் ஐந்து, இங்கிலீஷில் ஆறு, தமிழில் ஏழு ...... இப்படிப் படிப்படியாகப் பன்னிரண்டு வரை ஏறிக் கடைசியில் நின்று விட்டது. பார்த்தார் தாண்டவராயம்! கண்களில் தீப் பொறி பறக்க ஆரம்பித்தது.

“சரி, இன்னொரு தடவை பையன் முதுகுக்கு ஆபத்துதான்!” என்று நான் நிர்மானித்தேன்.

இந்தச் சமயத்தில், பையன் ‘களுக்’ கென்று சிரித்தான். எனக்கு விஷயம் புரியவில்லை. தாண்டவராயத்திற்கும் புரியவில்லைதான்!

“டேய்......!” என்று ஆரம்பித்தார் தாண்டவராயம்.

“இதிருக்கட்டும், அப்பா! முன்னாலே மேலே என்ன எழுதியிருக்குன்னு படிச்சுப் பாரு, அப்பா!” என்று ஒரு பெரிய வெடி குண்டைத் தூக்கிப் போட்டான் பையன்.

தாண்டவராயம் பரபரப்பாகக் காகிதத்தின் மேல் தம் கண்களைச் செலுத்தினார். அங்கே அவர் என்னத்தைக் கண்டார்?

“கே. தாண்டவராயம், மூன்றாவது பாரம்” என்று கொட்டை எழுத்துக்களில் பொறிக்கப்பட்டிருந்ததைத்தான்!

ஸ்ரீமதி

சரஸ்வதி அவர்களுக்கு!

✩ நாடோடி ✩

[*ஸ்ரீமதி சரஸ்வதி வேறு யாருமில்லை; எல்லாம் என் மனைவி சரசுதான்.*]

ஸ்ரீமதி சரஸ்வதி அவர்களுக்கு,

மனைவி என்ற முறையில் தங்களை நான் ஒருமையிலேயே அழைக்கலாம் என்று சட்டமும், சம்பிரதாயமும் இடம் கொடுத்திருந்த போதிலும், நான் தங்களைப் பன்மையில் அழைப்பதன் காரணத்தைத் தாங்கள் உணர்ந்து கொண்டிருப்பீர்கள் என்றே நம்புகிறேன். தங்கள்மீது எனக்குள்ள கோபத்தைத் தெரிவிப்பதற்குப் பன்மைக்கும் பன்மை இருந்தால் கூடப் போதாது என்று தோன்றுகிறது.

அம்மணி! நானும் பொறுத்துப் பொறுத்துப் பார்த்தேன்! தங்களிடம் எத்தனையோ தடவைகள் நேரிலும் சொல்லிப் பார்த்தேன். என் தாயார் பக்கத்தில் இருந்த சமயங்களில், தாங்கள் எதிர்த்துப் பேச முடியாது என்ற தைரியத்தில் சற்று அதிகாரமாகவும் சொல்லிப் பார்த்தேன். கொஞ்ச காலமாகத் தாங்கள் என்மீது கோபித்துக் கொண்டு பேசாமல் இருப்பதால், நானும் பேசக் கூடாது என்று வீம்பு வைத்துக்கொண்டு அனுவிடம் சொல்லுவதுபோல் தங்களிடம் சொல்லிப் பார்த்தேன். ஆனால் என்ன சொல்லியும் தாங்கள் திருந்தினதாகத் தெரியவில்லை.

தாயே! தங்களுக்கு எவ்வளவோ புண்ணியம் உண்டு. தயவு செய்து என் மேஜையை ஒழித்து வைக்க வேண்டாம்! இத்தனை காலமாகத் தாங்கள் என் மேஜையை ஒழித்து வைத்துக் கட்டிக் கொண்ட புண்ணியம் தங்களுக்கு ஏழேழு ஜன்மங்களுக்கும் போதும். தயவு செய்து இனிமேலாவது என் மேஜையை ஒழித்து வைக்கும் கைங்கரியத்தை மேற்கொள்ளாதீர்கள். என் மேஜை எத்தனை குப்பையாகவாவது இருக்கட்டும்! எத்தனை அலங்கோலமாகவாவது விளங்கட்டும்! அதைப் பற்றித் தாங்கள் கவலைப்பட வேண்டாம்.

அம்மையே! நான் காரியாலயம் போயிருக்கும் சமயம் பார்த்துத்தான் தங்கள் சிநேகிதர்கள் தங்களைப் பார்க்க வருகிறார்களாதலால் என் மேஜை அலங்கோலமாக இருந்தால் தங்களுக்கு அவமானமாக இருக்கலாம். அந்த அவமானத்துக்குப் பயந்தே தாங்கள் என் மேஜையை ஒழித்து வைப்பதாகத் தெரிகிறது.

ஆனால் இதை எனக்கு நன்மை செய்வதாக நினைத்துக்கொண்டு செய்கிறீர்களா, அல்லது தீமை செய்வதாக நினைத்துக் கொண்டு செய்கிறீர்களா என்று தான் தெரியவில்லை. தங்கள் மனதுக்குள் தாங்கள் எனக்கு ஏதோ பெரிய நன்மை செய்வதாக நினைத்துக்கொண்டு தான் செய்கிறீர்கள் என்று தோன்றுகிறது. அப்படியானால் தாங்கள் இது வரை எனக்குச் செய்துள்ள "நன்மை" இன்னும் ஏழேழு ஜன்மங்களுக்கும் போதும். இதற்கு மேலும் தங்கள் நன்மையை என்னால் தாங்க முடியாது.

ஆம், தாயே! தாங்கள் என் மேஜையை ஒழித்து வைப்பது எனக்குப் பிரதிகூலமாக முடிகிறதே யொழிய, அதனால் எனக்குத் துளிக்கூட அனுகூலம் இல்லை. இதைத் தங்களிடம் நேரில் சொன்னால் என்ன பண்ணுவீர்களோ என்று பயந்து கொண்டுதான் என் அபிப்பிராயத்தை இக்கடிதம் மூலம் தெரிவிக்கிறேன்.

அம்மா, பரதேவதே! தற்காலத்திய நாகரிகப்படி மனைவி செய்யும் காரியங்களைப் புருஷன் கண்டிக்கக் கூடாது என்றாலும் பழைய கால வழக்கத்தை யொட்டி, தங்கள் அனுமதியின் பேரில், தங்கள் காரியத்தில் ஒரே ஒரு குற்றம் மாத்திரம் எடுத்துக் காட்டலாம் என்று நினைக்கிறேன்.



அம்மணி! முதலில் 'ஒழிப்பது' என்றால் என்ன என்றே தாங்கள் இன்னும் தெரிந்து கொள்ளவில்லை என்று தெரிகிறது. இது விஷயமாகத் தாங்கள் கொண்டுள்ள அபிப்பிராயத்திற்கும் அடியேன் கொண்டுள்ள அபிப்பிராயத்துக்கும் பெருத்த வித்தியாசம் இருப்பதாகத் தெரிகிறது.

ஒவ்வொரு சாமானுக்கும் ஒரு இடத்தைக் குறிப்பிட்டு, அதை, அதை அந்தந்த இடத்தில் வைப்பதற்குத்தான் ஒழிப்பது என்று பெரியவர்கள் அர்த்தம் கொண்டிருப்பதாக எனக்கு ஞாபகம்.

பெரியவர்கள் கொண்டுள்ள அபிப்பிராயங்களையெல்லாம் கண்டதுண்டம் செய்வதுதான் தற்காலத்திய 'பேஷ'னாகக் கருதப் படுகிறது என்றாலும், இந்த ஒரு விஷயத்திலாவது பெரியவர்கள் கருத்தை ஒப்புக் கொள்ளலாம் என்று நினைக்கிறேன். ஏனெனில் இதில் கொஞ்சம் நியாயமும் இருப்பதாகத் தெரிகிறது. வேண்டிய சாமான்களை வேண்டியபோது எடுக்க முடிய வேண்டும் என்ற நல்லெண்ணத்துடனேயே பெரியவர்கள் 'ஒழித்தல்' என்ற பதத்துக்கு இந்த அர்த்தம் கொடுத்திருப்பதாக அடியேனுடைய சிற்றறிவுக்குப் புலனாகிறது.

ஆனால், அம்மையே! தங்கள் அகராதியிலோ இதே வார்த்தைக்கு வேறு அர்த்தம் இருப்பதாகத் தெரிகிறது. மேஜையில் இருக்கும் சாமான்களையெல்லாம் ஒரே சுருட்டாகச் சுருட்டுவது, சுருட்டி மேஜை டிராயரிலோ அல்லது பக்கத்தில் உள்ள அலமாரியிலோ அடைப்பது, பிறகு மேஜை டிராயரையும், அலமாரிக் கதவையும் இறுகச் சாத்துவது, இதுதான் 'ஒழிப்ப'து என்னும் பதத்துக்குத் தாங்கள் கொண்டிருக்கும் பொருள்.

தங்கள் சிநேகிதர்கள் வரும் சமயத்தில் மேஜை பள, பள வென்று விளங்க வேண்டும், மேஜைமீது ஒரு சாமான் கூட இருக்கக் கூடாது, மேஜை விரிப்பின் மீது தாங்கள் போட்டிருக்கும் பூ வேலை மாத்திரம்தான் தெரியவேண்டும் என்பது தங்கள் எண்ணம்.

ஆனால் அம்மணி! இதனால் நான் எவ்வளவு சிரமப்படுகிறேன் என்பது தங்களுக்கு எங்கே தெரியப் போகிறது? குயவனுக்குப் பல நாள் வேலை, தடியனுக்கு ஒரு நிமிஷ வேலை என்பதுபோல் தாங்கள் ஒரே நிமிஷத்தில் ஒழித்து வைக்கும் சாமான்களை, நான் திரும்பவும் எது எது எங்கே இருக்கிறது என்று கண்டு பிடிக்க ஒரு மணி நேரம் ஆகிறது.



சில சமயங்களில் இதனால் ஏற்படும் விபரீதங்கள் சொல்லி முடியாது.

அன்றொரு நாள் பாருங்கள், எங்கள் காரியாலயத்தில் திடீரென்று ஒரு விபரீதம் நிகழ்ந்தது. எனக்கும் என் காரியாலய "ப்ரூப் ரீடருக்கும்" சற்று ஆகாது. என் மீது காண்பிக்க முடியாத கோபத்தையெல்லாம் அவர் எப்பொழுதும் என் கட்டுரைகள் மீது காண்பிப்பது வழக்கம். என் கட்டுரைகள் அச்சுக் கோத்தானதும் ப்ரூப் பார்ப்பதற்காக அவரிடம் வரும். அப்பொழுது அவர் முகத்தை வைத்துக் கொள்ளும் கோரத்தைப் பார்க்க வேண்டுமே! விளக்கெண்ணெய் குடித்தவன் முகம் கூடச் சற்று சுமுகமாய் இருக்கும் என்றால் பார்த்துக் கொள்ளுங்களேன்!

அப்படிப்பட்ட ப்ரூப் ரீடர் நான்கு நாளைக்கு முன்னர் என் கட்டுரை ஒன்றை ப்ரூப் பார்த்துக் கொண்டிருக்கும்போது விழுந்து, விழுந்து சிரிக்க ஆரம்பித்து விட்டார்.

அதைப் பார்த்ததும் எனக்குண்டான சந்தோஷம் சொல்லி முடியாது. "என்ன, கட்டுரை அவ்வளவு சுவாரஸ்யமாக இருக்கிறதா?" என்று கேட்டேன்.

"ஆமாம், முதலில் ஆறுமாதக் குழந்தையாக வரும் தங்கள் அநு. திடீரென்று கட்டுரையின் பின் பகுதியில் மாலா என்ற பெயருடன் எட்டு வயதுப் பெண்ணாக வருவது வெகு ஹாஸ்யமாக இருக்கிறது" என்று அவர் பதில் அளித்தார். தாங்கள் என் மேஜையை அடிக்கடி



ஒழித்து வைப்பதால் ஏற்படும் விபரீதங்களில் அது ஒன்று என்று அப்பொழுதுதான் உணர்ந்தேன்.

முதல் நாள் நான் இரண்டு கட்டுரைகள் எழுதி மேஜை மீது வைத்திருந்தேன். மேஜையைத் தாங்கள் ஒழித்து வைக்கையில் கட்டுரை எழுதப்பட்டிருந்த கடிதங்கள் கலந்து போய் முதற் கட்டுரையின் முதல் பகுதியும், இரண்டாம் கட்டுரையின் பின் பகுதியும் சேர்ந்து, ஒரு கட்டுரையாக மாறி அச்சுக்குப் போய்விட்டது என்று அப்பொழுதுதான் தெரிந்தது!

ஆனால் இதாவது பரவாயில்லையே! இதை விட விபரீதமான சம்பவம் ஒன்று சமீபத்தில் நிகழ்ந்தது. கல்யாணமானதும் நான் தங்களுக்கு முதல் முதலில் சற்று அசட்டும் பிசட்டுமாக எழுதிய கடிதம் ஞாபகம் இருக்கிறதா? அதை என் மேஜை டிராயரிலேயே வைத்திருந்தேன். அன்று ஒரு நாள் தாங்கள் ஒழித்து வைக்கையில் அக்கடிதம் நான் அடுத்த வீட்டு அண்ணாசாமி அய்யரிடமிருந்து இரவல் வாங்கிய புஸ்தகத்துக்குள் புகுந்து கொண்டு, புஸ்தகத்தோடு அண்ணாசாமி அய்யர் வீட்டுக்குப் போய்விட்டது. இரண்டு நாட்களாக நான் தெருவில் போகும் போதும், வருகிற போதும் அண்ணாசாமி அய்யரின் மனைவி என்னைப் பார்க்கிற பார்வையிலிருந்து அந்த அம்மாள் அக்கடிதத்தைப் படித்து விட்டாள் என்றே தோன்றுகிறது.

தங்களுக்குச் சந்தேகமாய் இருந்தால் இன்னொரு உதாரணம் சொல்லுகிறேன். அன்று ஒரு நாள்......

[இத்துடன் இக் கட்டுரையை முடிப்பதைப் பற்றி நேயர்கள் மன்னிக்க! நேற்று ராத்திரி ஆத்திரம் தாங்காமல் கட்டுரை முழுவதும் எழுதி வைத்தேன். ஆனால் காலை நான் பல் தேய்த்துவிட்டு வருவதற்குள் சரக என் மேஜையை ஒழித்து வைத்துவிட்டாள். கட்டுரையின் பிற்பகுதி போன இடம் தெரியவில்லை!]

படித்துப் பார்!

நாடக ராணி

[ஆசிரியர்: பிரேம்சந்த்; மொழி பெயர்ப்பு: கா. ஸ்ரீ. ஸ்ரீ.; பிரசுரம்: கலைமகள் காரியாலயம், சென்னை; விலை: ரூ. 1—4—0.]

உலகத்தில் நாம் சாதாரணமாகக் கண்டிராத லட்சிய புருஷர்களைப் பார்க்க வேண்டுமா? கற்பனை உலகில் சஞ்சரித்து, கலை வெள்ளத்தில் மூழ்கி, அதிசயக் கனவுகள் காண வேண்டுமா?—அப்படியானால் ஹிந்தி ஆசிரியர் பிரேம்சந்த் எழுதிய இந்த நூலிலுள்ள ஏழு கதைகளைப் படித்துப் பார்க்கவும். இக் கதைகளில் வரும் தாரா, நிர்மல், விமலன், மஞ்சுளா முதலியவர்கள் ஒவ்வொருவரும் விநோதமானவர்கள். அவர்கள் செய்கையோ, பேச்சோ மிக மிக விநோதமாயிருக்கிறது. ஆனால் அவர்கள் நமக்கு நல்ல படிப்பினைகளைப் புகட்டுவதற்காகவே வருகிறவர்களாதலால், அவர்கள் இன்னும் விநோதமாயிருந்தாலும் பாதகமில்லை என்று மன்னித்து விடுகிறோம்.

கமலாம்பாள் சரித்திரம்

[ஆசிரியர்: பி. ஆர். ராஜமையர்; பதிப்பாசிரியர்: எஸ். நடராஜன்; பிரசுரம்: விவேக சிந்தாமணி பிரசுராலயம், மயிலாப்பூர்; விலை: ரூ. 3—8—0.]

சுமார் நாற்பது வருஷங்களுக்குமுன் தமிழ் இலக்கிய உலகில் புரட்சியை உண்டாக்கிய நவீனம்—மகான் ராஜமையர் எழுதிய கமலாம்பாள் சரித்திரம் ஆறாவது பதிப்பாக வெளியாகியிருக்கிறது. ராஜமையரின் மேதா விலாசத்தைப் புகழாதவர்கள் இல்லை; அவருடைய இந்த அரிய நூலைப் பாராட்டாதவர்களும் இல்லை. இந்தப் புத்தகத்தைப் பற்றி ஏதாவது குறை சொல்ல முடியுமானால், புத்தகம் அகப்படவில்லை என்ற குறைதான் சொல்ல முடியும். இந்தக் குறையையும் போக்க, இந்த ஆறாம் பதிப்பைக் கொண்டு வந்ததற்காகப் பிரசுராலயத்தாரைப் பெரிதும் பாராட்டுகிறோம்.

பூரண யோகம்

[இயற்றியவர்: யோகி சுத்தானந்த பாரதியார்; பிரசுரம்: பாரத சக்தி நிலையம், புதுச்சேரி; விலை: அணா 10.]

தலை கீழாய் நிற்பதும், மூக்கு வழியாக நீரை உறிஞ்சுவதும் யோகமாகி விடுமா? காடி மாதிரி மூச்சை இழுத்து வெளியே விடுவதும், மூச்சை அடக்கி முகம் சிவக்கக் காட்டி விடுவதும் யோகமாகி விடுமா? அல்லது, காவி உடை தரித்துக் கொண்டால் மட்டும் யோகியாகி விட முடியுமா?

பின் எது யோகம்? எவன் யோகி?

அந்த விஷயங்களைத்தான், படித்தவர்களிலிருந்து பாமரர் வரை புரிந்துகொள்ளும் எளிய இனிய நடையில் யோகி பாரதியார் இந்தப் புத்தகத்தில் விளக்கியிருக்கிறார்.

கல்கி



KALKI ஜனவரி 14, 1945 4 அண

T. K. S. சகோதரர்களின்

நாடகம்!

★

16-1-45ல் ஒரே நாள்

மனோஹரா

★



20-1-45 முதல், தினமும்

ராஜா

பர்த்ருஹரி

★

திருச்சி முனிஸிபல் பப்ளிக் ஹாலில்

ஞாயிறு. புதன் மாலை 7-க்கும்

மற்ற நாட்களில்

இரவு 10-30-க்கும்

தி இந்தியன் பாங்க் லிமிடெட்.

★

தலைமை ஆபீஸ்:

"இந்தியன் பாங்க் பில்டிங்ஸ்"

வடக்கு பீச் ரோடு, மதராஸ்

★

லோகல் ஆபீஸ்கள்:

எஸ்பிளனேட், திருவல்லிக்கேணி,
மவுண்டு ரோடு, மயிலாப்பூர்,
தியாகராய நகர், புரசவாக்கம்.

சென்னை மாகாணத்தில் எல்லா முக்கியமான இடங்களிலும், பம்பாயிலும் பிராஞ்சுகளும் சப் ஆபீஸ்களும் உள்ளன.

★

வழங்கி வாக்களிக்கப்பட்ட
மூலதனம் ரூ. 60,00,000
செலுத்தப்பட்ட
மூலதனம் ரூ. 33,48,561
ரிஸர்வ் நிதி ரூ. 32,00,000
டெபாஸிட்டுகள் ரூ. 10 கோடிக்கு அதிகம்

★

சகலவிதமான பாங்க் அலுவல்களும் நடத்தப்படும். மற்ற விவரங்களுக்குப் பாங்கியின் எந்த ஆபீஸுக்காவது எழுதி தெரிந்து கொள்ளலாம்.

N. கோபால அய்யர்
செக்ரடரி.

Regd. No. M. 4392

Edited, Printed and Published by R. Krishnamurthy at the "Kalki" Press,
116-119, Sladens Garden, Poonamallee High Road, Kilpauk, Madras.